மதிப்பிற்குரியவர்களுக்கு...
RAMRAJ
காட்டன்
வேட்டிகள் • சர்ட்டுகள் • பனியன்கள்

மலர் 5 • இதழ் 11 • ஏப்ரல் 2021 • விலை ரூ.18/-

# வெண்மை

தமிழ் மாத இதழ்
VENMAI

எண்ணங்கள்

## வழிகாட்டி
சிறப்பிதழ்



வெண்மை 100 வது இதழ்


Hello Summer
SHIRT CRAFTED FOR ALL SEASON
Available in 50+ Colours as plain and printed.
Crafted for comfort
LINEN PARK®
LINEN DHOTIS • SHIRTS • FABRICS
A Premium Product from
RAMRAJ
Available at Company Showrooms & All leading Textile Shops

நல்ல எண்ணங்களால்
இந்த உலகம் நிறைந்திருக்க வேண்டும்
என்ற தாகத்துடன் ஆரம்பிக்கப்பட்ட

# வெண்மை எண்ணங்கள்

மாத இதழின்

# 100

வது
இதழ் இது.

கடந்த 100 மாதங்களாக லட்சக்கணக்கான
தமிழ்க் குடும்பங்களின் வரவேற்பைப்
பெற்றிருக்கிறது ‘வெண்மை’.

வரவேற்று வாழ்த்தி மகிழும்
அத்தனை பேருக்கும்



மதிப்பிற்குரியவர்களுக்கு...
RAMRAJ
காட்டன்
வேட்டிகள் • சர்ட்டுகள் • பனியன்கள்

நிறுவனத்தின் நன்றி.

உங்கள் வாழ்வை வளமாக்கும்
நற்சிந்தனைகளை தொடர்ந்து வழங்குவோம்
என இந்தத் தருணத்தில் உறுதி ஏற்கிறோம்.




# மதிப்பிற்குரியவர்களுக்கு...

**வணக்கம்.**

எண்ணங்களே நமது வாழ்வைத் தீர்மானிக்கின்றன. ஆகவேதான் 'ஒருவர் மனதில் தோன்றுகிற எண்ணங்களின் தன்மையே அந்த மனிதரை உருவாக்குகிறது' என்றார் புத்தர் பெருமான். நேர்மறையான ஒரு நல்ல எண்ணம், வீரியம் மிக்க விதையைப் போன்றது. மண்ணுக்குள் புதைத்தாலும் முட்டி மோதி உயிர்பெற்று ஒரு காட்டையே உருவாக்கும் ஆக்கபூர்வமான சக்தி கொண்டது. எதிர்மறையான ஒரு தீய எண்ணம், தீப்பொறி போன்றது. விழுந்த இடத்தில் மெல்லக் கனிந்து, நன்றாகப் புகைந்து, பிறகு கனன்று எரியும். அது ஒரு காட்டையே எரிக்கும் சக்தி கொண்டது.

எதிர்மறை எண்ணங்களே எங்கும் சூழ்ந்திருக்கும் காலகட்டத்தில், நல்ல எண்ணங்களை மனங்களில் விதைப்பது என்பது முக்கியமான சமூக அறம். ராம்ராஜ் காட்டன் நிறுவனத்தின் வெற்றிப் பயணம், நேர்மறையான எண்ணத்தில் இருந்துதான் தொடங்கியது. 'இனிமேல் வேட்டி விற்காது' என்ற எதிர்மறையான சிந்தனைகள் அதிகம் இருந்த காலகட்டத்தில், 'மக்களின் பண்பாட்டு அடையாளமான வேட்டியை, குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை அனைவரும் விரும்பி உடுத்தும் நிலையை உருவாக்க வேண்டும்' என்ற பாசிட்டிவான எண்ணத்துடன் தொழிலைத் தொடங்கினேன். அந்த எண்ணமே, சோதனைகள் வந்தபோதெல்லாம் எனக்கும், நிறுவனத்திற்கும் ஆத்மபலமாக துணை நின்றது.

பேன்ட் சட்டை அணிந்த மனிதரை உட்கார வைத்து மரியாதையாகப் பேசும் வங்கி மேனேஜர், வேட்டி அணிந்து சென்ற ஒரே காரணத்திற்காக என்னை நிற்க வைத்து பேசியதைப் பல முறை அனுபவித்திருக்கிறேன். 'பங்ஷனுக்கு வரும்போது டீசன்டா பேன்ட் சட்டை போடக்கூடாதா?' என்று நண்பர்களே கேலியாகப் பேசுவதைக் கடந்தே வந்திருக்கிறேன். 'தொன்மையான நாகரிகத்தைக் கொண்ட தமிழர்களின் உடையான வேட்டியை மரியாதைக்குறைவான உடையாக நினைக்கிற எதிர்மறையான எண்ணம் பலரிடம் இருக்கிறது. இதை மாற்றாமல் இந்தத் தொழிலில் வெற்றி அடைய முடியாது' என்கிற யதார்த்தம் எனக்குப் புரிந்தது.

பொதுவாக தொழிலில் போட்டி உணர்வே மேலோங்கி இருக்கும். 'நாம் செய்கிற தொழிலை வேறு யாரும் செய்யக்கூடாது' என்று நினைப்பவர்களே அதிகம். சின்ன பெட்டிக்கடை நடத்துபவர் தொடங்கி, பல லட்சம் கோடி வர்த்தகம் செய்கிற பெரிய பன்னாட்டு நிறுவன முதலாளி வரை பலருமே போட்டியாளர்கள் உருவாகிவிடாதபடி கவனமாக இருப்பார்கள். வேட்டிக்கு



ஒரு பிராண்ட் பெயரை வைத்து முதன்முதலாக தொடங்கப்பட்ட நிறுவனம், ராம்ராஜ் காட்டன்.

நிறுவனத்தை நான் ஆரம்பித்தபோது, பிரதானமாக வேட்டியை விற்பனை செய்கிற ஒரு நிறுவனம்கூட இல்லை. ஆளே இல்லாத மைதானத்தில் தனியாக விளையாடிக் கொண்டிருந்தால் எவ்விதமான சுவாரசியமும் இருக்காது என்று புரிந்தது. 'வேட்டியை விற்பனை செய்தால் வெற்றி பெற முடியும்' என்கிற நிலையை உருவாக்கி, நம்பிக்கையுடன் பலர் இந்தத் தொழிலுக்கு வருவதற்கு உழைக்க வேண்டும் என்று முடிவு செய்தேன். அந்த பாசிட்டிவான எண்ணம்தான் ராம்ராஜ் காட்டன் நிறுவனத்தின் நிலைத்த வெற்றிக்கு முக்கிய காரணம். பல புதிய நிறுவனங்கள் வேட்டியை விற்பனை செய்ய களம் அமைத்துக் கொடுத்ததும், பல ஆயிரக்கணக்கான நெசவாளர்கள் வாழ்வில் வறுமை நீங்க துணை நின்றதுமே ராம்ராஜ் காட்டனின் தனித்துவமான வெற்றி.

ஒரு பாசிட்டிவான எண்ணம் செயலாக மாறும்போது அதன் வீச்சு அதிகம். ஜவுளிக்கடைகளில் வண்ணமயமான ஆடைகள் பார்வையில் படும்படியும், வேட்டியை யார் கண்ணிலும் படாத வகையிலும் வைத்து விற்பனை செய்வதே வழக்கம். நெசவாளர்களின் கடும் உழைப்பில் உற்பத்தி செய்யப்படுகிற நம் பாரம்பரிய ஆடையை, வாங்குபவர்களுக்கும், விற்பனை செய்கிறவர்களுக்கும் மதிப்புக் குறைவாக நினைப்பதை மனம் ஏற்றுக்கொள்ள முடியாமல் தவித்தது.


தரமான வேட்டிகளை உருவாக்கி மக்களுக்குக் கொடுத்து, 'மதிப்புக்குரியவர்களுக்கு ராம்ராஜ் காட்டன் வேட்டி' என்று பிராண்ட் மதிப்புடன் விற்பனை செய்யத் தொடங்கினேன். அப்போது ஆச்சர்யமாகத் திரும்பிப் பார்த்தவர்கள், இப்போது நிறுவன வளர்ச்சியைக் கண்டும் அதிசயத்து நிமிர்ந்து பார்க்கிறார்கள்.

ராம்ராஜ் நிறுவனத்தின் வெற்றி ஒரு தனி மனிதரின் வெற்றியாகவோ, ஒரு நிறுவனத்தின் தனிப்பட்ட வெற்றியாக சுருங்கிவிடக்கூடாது என்று ஆரம்பத்திலிருந்தே உறுதியாக இருந்தேன். மக்களின் பண்பாட்டிற்கும், பாரம்பரியத்திற்கும் கிடைக்கிற வெற்றியாக அது இருக்க வேண்டும் என்று உறுதியாக இருந்தேன். நாற்பதாண்டு காலம் இதே உயரிய சிந்தனையோடு பலர் ஒன்றிணைந்து உழைக்கிறோம். 'வெண்மை நிறம்' என்பது பாசிட்டிவான எண்ணத்தை உருவாக்கும் என்பார்கள். ராம்ராஜ் காட்டன் நிறுவனத்தின் வளர்ச்சி என்பது முழுக்க முழுக்க நேர்மறை சிந்தனை கொண்ட மனிதர்களால் சாத்தியமானது.

ஜவுளித் துறையில் வேட்டிக்கு என்று ஒரு புதிய மார்க்கெட்டை ராம்ராஜ் நிறுவனம் உருவாக்கி இருக்கிறது. இன்று பல நிறுவனங்கள் வேட்டி விற்பனையில் நம்பிக்கையுடன் இறங்கி இருக்கின்றன. பல முன்னணி திரை நட்சத்திரங்கள் 'விளம்பர மாடலாக' இருக்கிறார்கள். தொலைக்காட்சிகளில் வேட்டி விளம்பரங்கள் அணிவகுப்பதைக் காண முடிகிறது. போட்டியே இல்லாத ஒரு தொழிலைத் தொடங்கி, அதில் வரலாற்று சாதனை வெற்றியையும் பெற்று, மேலும் பல நிறுவனங்கள் உருவாக களம் அமைத்து கொடுக்கவும் முடிந்திருக்கிறது.

ராம்ராஜ் காட்டன் நிறுவனத்தின் அத்தனை சாதனைகளுக்கும் பாசிட்டிவான எண்ணங்களுக்கு பெரிய பங்கு இருக்கிறது. இது ஒரு தொழில் நிறுவனத்தின் அனுபவம் மட்டுமல்ல. நேர்மறை எண்ணங்களின் ஆற்றலை அறிவியல்பூர்வமான ஆய்வுகள் மூலமும் உறுதி செய்திருக்கின்றனர். இங்கிலாந்து நாட்டில் மருத்துவமனைகளில் மேற்கொள்ளப்பட்ட ஓர் ஆய்வில், நேர்மறை எண்ணங்கள் கொண்டவர்கள் உற்சாகமான மனநிலையுடனும், ஆரோக்கியமான உடல்நிலையுடனும் இருப்பதைக் கண்டறிந்துள்ளனர்.

உடல்நலம் பாதிக்கப்பட்டவரின் மனதில் தோன்றும் எண்ணங்கள் நேர்மறையாக இருந்தால் மன அழுத்தம் குறைந்து, அவருக்கு விரைவாக நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிக்கிறதாம். எதிர்மறை எண்ணம் கொண்டவராக இருந்தால், அவருக்கு நோயின் தாக்கம் மேலும் தீவிரமாகிவிடுகிறதாம். எதிர்மறை எண்ணம் கொண்டவர்களுக்கு,



மன அழுத்தம் ஏற்பட்டு பலவிதமான உடல்நல பாதிப்புகள் உண்டாவதாகக் கண்டறிந்துள்ளனர். ‘சயின்ஸ் டைரக்ட்’ என்கிற அமெரிக்க மருத்துவ இதழ், குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை நேர்மறை எண்ணங்களோடு இருக்க வேண்டிய அவசியத்தை வலியுறுத்துகிறது.

ராம்ராஜ் காட்டன் நிறுவனத்தின் சார்பில் வெளிவரும் ‘வெண்மை எண்ணங்கள்’ இதழின் 100வது சிறப்பிதழ் இது. ராம்ராஜ் காட்டன் நிறுவனத்தின் மதிப்புமிக்க வாடிக்கையாளர்களுக்கு ‘வாழ்விற்கு வழிகாட்டும் நல்ல எண்ணங்களைப் பரிசளிக்க வேண்டும்’ என்கிற உயரிய நோக்கத்தோடு இந்த இதழ் தொடங்கப்பட்டது. தரமான உடைகளை விரும்பி வாங்கும் ‘ராம்ராஜ் காட்டன்’ வாடிக்கையாளர்களுக்கு, தரமான சிந்தனைகளை உருவாக்கும் ‘வெண்மை எண்ணங்கள்’ பிடிக்கும் என நம்பினோம். ஜவுளித் தொழிலில் வாடிக்கையாளர்களுக்கு ஏதேனும் நினைவுப் பரிசு வழங்குவது மரபு. அந்த மரபைப் போற்றி, புதிய முயற்சியாக ‘வெண்மை எண்ணங்கள்’ இதழை மதிப்புப் பதிப்பாக மாதந்தோறும் வழங்க ஆரம்பித்தோம்.

‘உடைகளை விற்பனை செய்கிற நிறுவனம் எதற்கு பத்திரிகை நடத்த வேண்டும்’ என்ற கேள்வியையும் எதிர்கொள்ள வேண்டி இருந்தது. மதிப்புக்குரிய எங்கள் வாடிக்கையாளர்களை வாசகர்களாக மாற்றுகிற முயற்சிக்கு நல்ல வரவேற்பு கிடைக்கும் என்கிற நம்பிக்கையில் தொடங்கினோம். மக்களுக்குத் தேவையான அனைத்தையும் தேடித்தேடி வழங்க வேண்டும் என்பதில் ஆரம்பம் முதலே உறுதியாக இருக்கிறோம். அனைவருக்கும் பயனுள்ள சிந்தனைகளோடு, வாழ்விற்கு வழிகாட்டும் கருத்துகளை தாங்கி, ‘வெண்மை எண்ணங்கள்’ ஒவ்வொரு மாதமும் வெளிவரும்போது, கிடைக்கிற பாராட்டுகள் மெய்சிலிர்ப்பு தருகின்றன.

ஆயிரக்கணக்கான வாடிக்கையாளர்கள் ஆண்டுச் சந்தா செலுத்தி, ‘‘ஒவ்வொரு மாதமும் ‘வெண்மை’ இதழை எங்கள் வீட்டுக்கு அனுப்பி வையுங்கள்’’ என்று கேட்கிறார்கள்.

ஒவ்வொரு மாதமும் ஒரு தலைப்பு எடுத்துக்கொண்டு, அது தொடர்பான அத்தனை நல்ல விஷயங்களையும் திரட்டி சிறப்பிதழாகத் தொடர்ந்து தருகிறோம். பயணங்களில் என்னைச் சந்திக்கிற பலர், ‘‘அடுத்த மாத ‘வெண்மை’ என்ன சிறப்பிதழ்?’’ என்று கேட்கிற அளவுக்கு எதிர்பார்ப்பு கிடைத்திருப்பது, எங்கள் முயற்சிக்கான பெரும் அங்கீகாரம். ‘‘வெண்மை முதல் மாத இதழிலிருந்து ஒவ்வொரு இதழையும் சேகரித்து எங்கள் வீட்டில் பொக்கிஷமாக வைத்திருக்கிறோம்’’ என்று பெருமிதத்துடன் பலர் சொல்வதைக் கேட்டிருக்கிறேன். ‘‘இதை சந்தா செலுத்தி வாங்கி, என் உறவினர்கள் பத்து பேருக்கு அன்புப் பரிசாகக் கொடுக்கிறேன்’’ என்று பெருமைப்படும் பலரின் அன்பில் நெகிழ்ந்திருக்கிறேன். நூலகங்களுக்கு ‘வெண்மை’ இதழை வாங்கிச் சென்று கொடுக்கும் நல்ல உள்ளங்கள் பலர் உண்டு.

இன்று தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் என நான்கு மொழிகளில் வெளிவருகிறது ‘வெண்மை’ இதழ். ராம்ராஜ் நிறுவன வாடிக்கையாளர்கள் மட்டுமின்றி சப்ளையர்கள், டீலர்கள், விற்பனையாளர்கள், பணியாளர்கள் என அனைத்து தரப்பினரும், ‘தங்கள் வீட்டு பத்திரிகையாக’ இதழைக் கொண்டாடுகின்றனர். நம் அன்புக்குரியவர்களுக்கு, சிறந்த எண்ணங்களைப் பரிசளிப்பது இரட்டிப்பு மகிழ்ச்சி தருகிறது.

அறிஞர் பெருமக்கள் பலர் கருத்தாகவும் வாழ்க்கையாகவும் நமக்குக் கொடுத்துச் சென்றுள்ள ‘வழிகாட்டும் நற்சிந்தனைகள்’ பலவற்றின் தொகுப்பாக இந்த 100வது இதழ் அதிக பக்கங்களுடன் ‘வழிகாட்டி சிறப்பிதழ்’ என வெளிவருகிறது. உங்கள் பேரன்பும், பெரும் ஆதரவும் தொடர வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்.

வாழ்க வையகம்... வாழ்க வளமுடன்..!

**கே.ஆர்.நாகராஜன்**

**நிறுவனர் – ராம்ராஜ் காட்டன்**

## வெண்மை முந்தைய இதழ்களிலிருந்து சில பொக்கிஷப் பகுதிகள்...

### எது பலம்?



'தண்ணீருக்கு பலம் அதிகமா... பாறைக்கு பலம் அதிகமா?' என்று கேட்டால் 'பாறைக்குத்தான்' என கண்ணை மூடிக்கொண்டு சொல்லி விடலாம். ஆனால் உண்மை அது இல்லை!

காலம் காலமாக தொடர்ந்து ஓடிக்கொண்டே இருக்கும் நீரோடை, தன் வழியில் இருக்கிற பெரிய பெரிய பாறைகளை அநாயாசமாகக் கரைத்துவிடும். இதற்காக அது முட்டி, மோதி சண்டை போடுவதில்லை. தொடர்ந்து அந்தப் பாறையை தன் தண்ணீர்க் கரங்களால் அரித்து அரித்து கரைத்துவிடுகிறது. ஒருவர் எவ்வளவு பலசாலி என்பதை அவரது தோற்றம் தீர்மானிப்பதில்லை. அவரின் முயற்சிகள்தான் தீர்மானிக்கும். கரடுமுரடான கல்லைக்கூட, தண்ணீரின் முயற்சி கூழாங்கல் ஆக்குகிறது.



### கண்ணாடியாக இரு!

ஒரு கண்ணாடியை 100 துண்டுகளாக உடைத்தாலும், அத்தனை துண்டுகளும் எந்த உருவத்தையும் பிரதிபலிக்கும். எவ்வளவு மோசமாக நொறுங்கிப் போனாலும், தன் சுயத்தை இழந்துவிடாத இந்த குணத்தை கண்ணாடியிடமிருந்து நாம் கற்றுக்கொள்ள வேண்டும். எத்தனை கஷ்டங்கள், தடைகள் வந்தாலும், நம்மிடம் இருக்கும் நம்பிக்கையை விட்டுவிடக் கூடாது.

வெற்றி கிடைக்கும்போது வருகிற தன்னம்பிக்கைக்கு ஆயுள் குறைவு; தன்னம்பிக்கை இருப்பதால் கிடைக்கும் வெற்றிதான் அழகு!

## தேர்வு மொழிகள்

**நீ**ங்கள் விரும்புவதைத் தேடிப் போகாவிட்டால், எப்போதுமே அது கிடைக்காது. நீங்கள் வாய்திறந்து கேட்காவிட்டால், எப்போதுமே 'இல்லை' என்ற பதில்தான் கிடைக்கும். நீங்கள் பாதையில் முன்னே அடி எடுத்து வைக்காவிட்டால், எப்போதுமே இதே இடத்தில்தான் இருப்பீர்கள்!


*- நோரா ராபர்ட்ஸ்*

**கடி**ன உழைப்பு ஏதுமின்றி வெற்றியை அடைய நினைப்பது, விதைக்காமலே அறுவடை செய்ய நினைக்கும் மூடத்தனத்துக்கு நிகரானது.

*- டேவிட் பிளை*

**ஆ**யிரம் கிலோமீட்டர் நீளப் பயணம்கூட, சின்னச்சின்ன அடிகளிலிருந்துதான் ஆரம்பிக்கிறது.

*- சீனப் பழமொழி*




**வா**ழ்க்கையில் தோல்வியடையும் மனிதர்கள், தாங்கள் முயற்சியைக் கைவிடும்போது வெற்றிக்கு எவ்வளவு நெருக்கத்தில் இருந்தோம் என்பதை உணராமல்தான் தோற்றார்கள்.

*- தாமஸ் ஆல்வா எடிசன்*

**ம**லையையே புரட்டிப் போடத்தான் நாம் ஒவ்வொருவரும் ஆசைப்படுகிறோம். ஆனால் அதற்கு சின்னச் சின்ன குன்றுகளை அசைத்துப் பார்த்து பயிற்சி எடுக்க வேண்டும் என்பதை உணர்வதில்லை.


*- நாடோடிப் பழமொழி*



## நேரத்தின் விலை!

இது ஒரு
புதிய நாளின் உதயம்.
என் விருப்பத்துக்குப்
பயன்படுத்திக் கொள்ள
இறைவன்
இதைக் கொடுத்திருக்கிறான்.
நான் பயன்படுத்தலாம்;
அல்லது வீணடிக்கலாம்.
நான் என்ன செய்யப் போகிறேன்
என்பது முக்கியம்.
ஏனெனில்,
என் வாழ்நாளில் ஒன்றை
இதற்கு
விலையாகக் கொடுக்கிறேன்.
நாளை விடியும்போது,
இந்த நாள் நிரந்தரமாகக்
கடந்து போய்விடும்.
நான் என்ன செய்தேன்
என்பது மட்டுமே மிச்சமிருக்கும்.
அது எனக்கு
நல்லது செய்ததா?
கெடுதல் செய்ததா?
வெற்றி தந்ததா?
தோல்வியில் மூழ்கடித்ததா?
எல்லாவற்றையும்
எனது செயலே
முடிவு செய்கிறது.
வாழ்க்கையை விலைகொடுத்து
நான்
துயரத்தையும் தோல்வியையும்
வாங்க மாட்டேன்!





## சூடாகாதே!

''கொளுத்தும் வெயிலிலும் நீ மட்டும் எப்படி உள்ளேயும் வெளியிலும் ஜில்லென்று இருக்கிறாய்? குளிர்ந்த நீரையும் எங்களுக்குத் தருகிறாய்?'' என ஒருவன் மண் பானையிடம் கேட்டான்.

மண் பானை சொன்னது, ''என்னுடைய ஆரம்பமும் மண்தான். இறுதியும் மண்தான். எவன் ஒருவன் தனது தொடக்கத்தையும் முடிவையும் உணர்ந்திருக்கிறானோ, அவன் ஏன் சூடாகப் போகிறான்? என்னைப் போலத்தான் இருப்பான்!''

## தோல்வியில் வெற்றி!

அம்மாவிடம் தோற்றுப் போங்கள், அன்பு அதிகரிக்கும். அப்பாவிடம் தோற்றுப் போங்கள், அறிவு மேம்படும். வாழ்க்கைத்துணையிடம் தோற்றுப் போங்கள், மகிழ்ச்சி இரட்டிப்பாகும். பிள்ளைகளிடம் தோற்றுப் போங்கள், பாசம் பல மடங்காகும். சொந்தங்களிடம் தோற்றுப் போங்கள், உறவு பலப்படும். நண்பர்களிடம் தோற்றுப் போங்கள், நட்பு உறுதிப்படும். ஆகவே தோற்றுப் போங்கள், தோற்றுப் போனால் வெற்றி கிடைக்கும்!



## எப்படிக் கிடைத்தது?

வீட்டுத் தோட்டத்தில் விளையாடிய சிறுவன், விளையாட்டு ஆர்வத்தில் தனது மோதிரத்தைத் தொலைத்துவிட்டான். கொஞ்ச நேரம் தேடிப் பார்த்தான். கிடைக்கவில்லை என்றதும், அம்மாவிடம் சொல்லிவிட்டு மீண்டும் விளையாடப் போய்விட்டான்.



அவனது அம்மா சில நிமிடங்களில் தேடி அதைக் கண்டுபிடித்து விட்டார். ''எப்படிம்மா உன்னால முடிஞ்சது?'' என்று கேட்டான் பையன்.

''நீ மோதிரம் என்ற பொருளைத் தேடினாய். நான் பத்தாயிரம் ரூபாய் சேமிப்பு தொலைந்ததே என்ற நினைப்பில் தேடினேன்'' என்றார் அம்மா.



## மாறாத அன்பின் ரகசியம்!

- இரண்டறக் கலத்தல் என்ற உணர்வுதான் நெருக்கமான அன்பின் தனித்துவ அடையாளம். வீட்டுக்குள் கணவனும் மனைவியும் தங்கள் தனித்தனி அடையாளங்களைத் துறந்து இருவரும் ஒன்றாகிவிடுவது தனிக் கலை. அதைப் புரிந்து செய்தவர்கள் பாக்கியசாலிகள். இந்த பாக்கியசாலிகள், மனைவி இல்லாமல் கணவனோ, கணவன் இல்லாமல் மனைவியோ தங்களை தனியாகப் பார்ப்பதில்லை. வாழ்க்கைத்துணையின் கண்களால் இந்த உலகத்தை, உறவுகளைப் பார்க்கும் இவர்கள் அன்பின் அடையாளமாக இருக்கிறார்கள்.

- 'மன்னிப்பு, தமிழ்ல எனக்குப் பிடிக்காத வார்த்தை', 'மன்னிப்பு கேட்பதா? நான் யார் தெரியுமா? என் அகராதியிலயே அந்த வார்த்தை கிடையாது', 'மனைவியிடம் போய் மன்னிப்பு கேட்பார்களா?' – அன்பால் இணைந்திருக்கும் தம்பதிகள் வாயிலிருந்து இப்படியான வார்த்தைகள் வருவதில்லை. நல்லனவற்றுக்குப் பாராட்டுவதும் தவறுகளுக்கு மன்னிப்பு கேட்பதும்தான் உறவை உறுதியாக்குகிறது. ஏதோ அர்த்தத்தில் சொன்ன வார்த்தைகளை வேறாகப் புரிந்துகொண்டு, 'நீங்கள் சொன்னதை இப்படி நான் புரிந்துகொண்டேன்' என்றும் வெளியில் சொல்லாமல் மனதில் போட்டு மருகி மருகி, உடைந்து போன உறவுகள் ஏராளம் உண்டு. வெளிப்படையான பேச்சுக்கள் சாத்தியமான இடங்களில் அன்பு மட்டுமே மிஞ்சியிருக்கும்.

## நம்பினால் நன்மை

- ஒன்றைப் பற்றி நிச்சயமாக நம்ப வேண்டும் என்றால், எதையும் சந்தேகத்துடனே துவக்க வேண்டும்.
- நன்மையென்றும் தீமையென்றும் எதுவும் இல்லை. அவ்விதம் ஆக்குவது அவரவர் நம்பிக்கையே!
- அற்புதங்களில் நம்பிக்கை வையுங்கள். எப்போது வேண்டுமானாலும் எதுவும் நிகழும்.
- உங்கள் வாழ்வின் மிகச் சிறந்த மாற்றம் இனிதான் நிகழப் போகிறது என எப்போதும் நம்புங்கள்.
- நீங்கள் விரும்பிச் செய்யும் ஒரு விஷயம், எப்போதும் முடிவில் மகிழ்ச்சியையே தரும் என்பதை நம்புங்கள்.
- நம்பிக்கைதான் ஒரு மனிதனை உருவாக்குகிறது. எந்த செயலைச் செய்கிறோம் என்பதைவிட என்ன நம்பிக்கையுடன் செய்கிறோம் என்பதுதான் முக்கியம்.
- உங்கள் தனிப்பட்ட நம்பிக்கைகளையும் பழக்கங்களையும் மற்றவர்கள் மேல் திணிக்காதீர்கள்.
- ஒருபோதும் மற்றவர்களை ஏமாற்றாதீர்கள். அவர்களின் நம்பிக்கையை பலவீனமாக எடுத்துக்கொள்ளாதீர்கள்.
- உங்களிடம் இல்லாத தகுதிகள் இருப்பதாக நம்பவோ, நம்ப வைக்கவோ முயலாதீர்கள்.
- அதிர்ஷ்டத்தை நம்பியிருக்க வேண்டாம். உழைப்பையும் திறமையையும் நம்பியிருங்கள்!
- வெற்றி வந்தால் நம்பிக்கை வரும்; ஆனால் நம்பிக்கை இருந்தால் மட்டுமே வெற்றி கிடைக்கும். நம்பிக்கையை வளர்த்துக் கொள்ளுங்கள்.
- 'முடியாது' என்று சொல்வது மூட நம்பிக்கை; 'முடியுமா' என்று கேட்பது அவநம்பிக்கை. 'முடியும்' என்று சொல்வதே தன்னம்பிக்கை.



# வீட்டு பட்ஜெட்டும் நாட்டு பட்ஜெட்டும்

● அரசாங்கம் பற்றாக்குறை பட்ஜெட் போடலாம்; அது கூடுதலாக ரூபாய் நோட்டுகளை அச்சடித்து சமாளித்துக் கொள்ளும். அல்லது சர்வதேச வங்கிகள், நிதி நிறுவனங்களில் கடன் வாங்கும், வரிகளை அதிகமாக்கும்; இப்படி எதை வேண்டுமானாலும் அரசாங்கம் செய்யலாம். ஆனால் வீட்டு பட்ஜெட்டில் வரவுக்கு அதிகமாக ஒரு ரூபாய் செலவழித்தால்கூட, அது கடன் சிக்கலில் தள்ளிவிடும். எதிர்காலத்தில் வருமானம் அதிகரிக்கும் என்ற நம்பிக்கை திடமாக இருந்தால், கடன் வாங்குவது தவறில்லை. அதேபோல எதிர்கால வசதிக்காக வீடு, மனை என சொத்துகள் வாங்கும்போது கடன் நல்லதே. ஆனால் அந்தக் கடன்களுக்கு எவ்வளவு வட்டி கட்ட வேண்டியிருக்கும், அது குடும்ப பட்ஜெட்டை எத்தனை ஆண்டுகள் பாதிக்கும் என்பதை எல்லாம் தெளிவாகத் திட்டமிட வேண்டும்.



● குடும்ப பட்ஜெட் போடுவதில் '60 சதவீத விதி' ஒன்று இருக்கிறது. அதாவது உங்கள் குடும்பத்தின் மொத்த மாத வருமானத்தில் 60 சதவீதம் அளவு மட்டுமே குடும்பத்தின் மாத செலவாக இருக்க வேண்டும். எஞ்சியிருக்கும் 40 சதவீத பணத்தில் 10 சதவீதத்தை பென்ஷன் திட்டங்கள் போன்ற நீண்ட கால சேமிப்புத் திட்டங்களில் முதலீடு செய்ய வேண்டும்; 10 சதவீதத்தை ஆர்.டி போன்ற குறைந்த கால சேமிப்புத் திட்டங்களில் முதலீடு செய்ய வேண்டும்; 10 சதவீதத்தை அவசர காலத் தேவைகளுக்காக பணமாகக் கையில் வைத்திருக்க வேண்டும்; மீதி பத்து சதவீதத்தை பொழுதுபோக்கு செலவுகளுக்காக ஒதுக்க வேண்டும். அவசரத் தேவைகள் அதிகரிக்கும் மாதங்களில், இந்த பொழுதுபோக்கு செலவில் கை வைக்கலாம்; தவறில்லை!

# வார்த்தைகள் தரும் நம்பிக்கை

கிராமத்துக்குப் போன அவன், கடும் மழையில் வழி தெரியாமல் காரைச் செலுத்தி, ஒரு குண்டும் குழியுமான சாலையில் சிக்கிவிட்டான். சகதிப் பள்ளத்தில் சிக்கிய கார் நகர மறுத்தது. தூரத்தில் ஒரு குடிசை தெரிய, உதவி கேட்டு அங்கு போனான்.

அந்தக் குடிசையில் வசித்த விவசாயி, ''என்னுடைய கோவேறு கழுதை பெரும் பலசாலி. அது உங்கள் காரை மீட்கும்'' என்றான். நடக்கவே தடுமாறிய அந்தக் கோவேறு கழுதையைப் பார்த்ததும் அவன் சுத்தமாக நம்பிக்கை இழந்துவிட்டான்.



ஆனாலும், எந்த முயற்சியும் செய்யாமல் தவிப்பதற்கு இது எவ்வளவோ மேல் என்று நினைத்தான்.

கழுதையோடு இருவரும் சாலைக்கு வந்தார்கள். காரின் முன்புறம் ஒரு கயிறு கட்டி அதில் கழுதையைப் பிணைத்த விவசாயி, கழுதையை இழுக்கும்படி பணித்தான். காரின் பின்னால் வந்து விவசாயியும் இளைஞனும் அதைத் தள்ளினார்கள். ''ஏய் ஏழுமலை தள்ளு; முனுசாமி தள்ளு; டேய் குப்பா, இன்னும் வேகமா தள்ளு'' என்று சத்தமாகக் கத்தினான். கழுதை அசாத்திய சக்தியோடு காரை இழுக்க, அடுத்த நொடியிலேயே கார் பள்ளத்திலிருந்து மீண்டது.

விவசாயிக்கு நன்றி சொன்ன இளைஞன், ''இங்கு நிறைய பேர் இருப்பதுமாதிரி, யார் யார் பெயரையோ சொல்லி உத்தரவிட்டீர்களே... அதற்கு என்ன அர்த்தம்?'' என்று கேட்டான்.

''அது ஒன்றுமில்லை... என் கழுதைக்கு கண் தெரியாது. தனியாக இந்தக் காரியத்தை செய்கிறோம் என்று அது நினைத்தால், அதனால் இழுத்திருக்க முடியாது. இத்தனை பெயர்களைச் சொன்னதும், ஒரு பெரிய குழுவோடு சேர்ந்து நாம் இதைச் செய்கிறோம் என்று அது நம்பியது. அந்த நம்பிக்கையில் சுலபமாக காரை இழுத்துவிட்டது'' என்றான்.

வார்த்தைகள் தரும் நம்பிக்கையை வேறெதுவும் தருவதில்லை!

## வெயிலில் நீங்கள் நலமா?



வெயிலில் அதிக நேரம் அலைவதும், நேரடியாக சூரிய ஒளியில் நிற்பதும் பல கண் நோய்களுக்கும் காரணமாகி விடுகிறது. வெள்ளரிக்காயை மெல்லிய துண்டுகளாக வட்ட வடிவில் வெட்டி கண்களில் சிறிது நேரம் வைத்தால், குளிர்ச்சி கிடைக்கும். அடிக்கடி கண்களை மூடிக்கொண்டு முகம் கழுவுவதும் நல்லது.

- கோடையில் ஏற்படும் கண் எரிச்சலைத் தவிர்க்க, பாலைக் காய்ச்சி பனங்கற்கண்டு கலந்து குடிக்கலாம்.
- தலை அதிகம் வியர்த்து, முடி நனைந்துவிடாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். தலையில் ஈரம் தங்கினால் ஜலதோஷம் பிடிக்கும். இப்படி சளியால் அடிக்கடி அவதிப்படுபவர்கள், சாத்துக்குடி பழச்சாற்றை வெந்நீரில் கலந்து அல்லது இஞ்சிச் சாறுடன் சேர்த்துக் குடித்தால் நல்லது.
- வெளியில் செல்லும்போது முகம், கை, கால்களில் லேசாக எண்ணெய் தேய்த்துக்கொள்ளலாம். சருமம் வறட்சியடையாமல் இருக்கும். வாரம் இருமுறை எண்ணெய் தேய்த்துக் குளிப்பது நல்லது. உள்ளங்காலில் விளக்கெண்ணெய் தடவிக் கொண்டால் வெம்மையின் சூடு தணியும்.

## மிஸ்டர் தன்னம்பிக்கை!

- ஒரு முதியவருக்கு 100வது பிறந்தநாள். அவருடைய பேரப்பிள்ளைகள் எல்லாம் வந்து காலில் விழுந்து ஆசீர்வாதம் வாங்கினார்கள்.

காலில் விழுந்து எழுந்ததும், ‘‘தாத்தா அடுத்த வருடமும் ஆண்டவன் புண்ணியத்தில் உங்கள் பிறந்தநாளில், உங்கள் ஆசீர்வாதம் பெறும் பாக்கியம் எங்களுக்குக் கிடைக்க வேண்டும்’’ என்று பணிவாகச் சொன்னார்கள்.

அதற்கு அந்த முதியவர் என்ன சொன்னார் தெரியுமா?

‘‘கவலைப்படாதீங்க பிள்ளைகளே, அது நிச்சயம் நடக்கும். ஏனென்றால், நீங்களெல்லாம் சின்னப் பிள்ளைகள்தானே! அதுக்குள்ளே உங்களுக்கு ஒண்ணும் ஆகிடாது’’




- எல்லா வேலையிலும் பாசிட்டிவ் பக்கம், நெகட்டிவ் பக்கம் என இரண்டுமே இருக்கும். அந்த வேலையைத் தேர்ந்தெடுக்கும்போது முதலில் நெகட்டிவ் பக்கத்தையே பார்த்துக்கொண்டு இருந்தால், அடுத்த அடி எடுத்து வைக்காமல் ஒரே இடத்தில் இருப்போம். முதலில் பார்க்க வேண்டியது, அதன் பாசிட்டிவ் பக்கம்தான்.

கடலைப் பார்த்த முதல் மனிதன், ‘கடல் ஆபத்தானது’ என நினைத்திருந்தால் ‘நீச்சல்’ என்ற ஒரு கலை மனித இனத்துக்குத் தெரியாமல் போயிருக்கும். கட்டுமரத்திலிருந்து கப்பல் வரை எந்தக் கண்டுபிடிப்பும் நடந்திருக்காது.

‘கடல் தண்ணீர் குடிக்கக்கூட பயன்படாது’ என நெகட்டிவாக நினைத்திருந்தால், ‘உப்பு’ என ஒரு பொருள் கிடைக்காமலே போயிருக்கும்.

கடல் மீள முடியாத அளவு ஆழமானது என நினைத்திருந்தால், சிப்பியைத் தேடி முத்து எடுத்திருக்க முடியாது.

பாசிட்டிவ் மனநிலை நம்முடைய உண்மையான சொத்து. இந்த மனநிலை இருந்தால் நாம் ஏழையா இருக்கவே முடியாது.

# குடும்பத்தில் அமைதி நிலைக்க 10 வழிகள்

அருட்தந்தை வேதாத்திரி மகரிஷி

**1** நாம் பெற்ற ஞானத்தைப் பயன்படுத்தும் இடம் குடும்பமே! நம் குடும்ப அமைதியே உலக அமைதிக்கு வித்தாகும்.

**2** உலகில் கணவன் – மனைவி உறவுக்கு இணையாக வேறு எந்த உறவையும் சொல்ல முடியாது.

**3** குடும்பத்தை அறிவுதான் நிர்வாகம் செய்ய வேண்டும். எந்த நிலையிலும் உணர்ச்சிகள் நிர்வாகம் செய்யக் கூடாது.

**4** குடும்ப அமைதியைக் காப்பதில் வரவுக்குள் செலவை நிலைநிறுத்தும் செயலும் ஒன்றாகும்.

**5** குடும்பத்தில் அனைவரும் அல்லது பெரும்பான்மையோர் சம்பாதிக்கும் திறன் பெற்றிருப்பது நலம். அதில் ஏற்றத்தாழ்வு இருப்பினும் அதைக் காப்பது, அனுபவிப்பது, செலவிடுவது ஆகிய செயல்பாடுகளில் சமமான பொறுப்பு வைத்தல் வேண்டும்

**6** குடும்பத்தில் கணவனுக்குத் தெரியாமல் மனைவியும், மனைவிக்குத் தெரியாமல் கணவனும் சம்பாதித்தல், செலவு செய்தல், சேமித்தல் என்பது அறவே கூடாது.

**7** விட்டுக் கொடுத்தல், சகிப்புத்தன்மை, தியாகம் ஆகிய மூன்றையும் கடைபிடித்து வந்தால், குடும்பத்தில் அமைதி நிலவும்.


**8** பிறர் குற்றத்தைப் பெரிது படுத்தாமல் இருப்பதும், பொறுமை காப்பதும், தவறுகளை மறத்தலும் குடும்ப அமைதிக்கு அடிப்படையான குணங்கள்.

**9** கிடைத்த வாழ்க்கைத் துணையைப் பற்றி யாரும் குறைகொள்ளத் தேவையில்லை. அவரவர் அடிமனமே இதைத் தேர்ந்தெடுத்துக் கொள்கிறது.

**10** நல்லதொரு குடும்பம் பல்கலைக்கழகம். நல்ல குடும்பத்தில் நன்மக்கள் தழைப்பார்கள். பிறவிப் பெருங்கடலை நீந்திக் கடக்க, குடும்ப அமைதி அவசியமானது.



## கோபம் என்கிற நெருப்பு!



அமெரிக்கக் கறுப்பினத் தலைவர் மார்ட்டின் லூதர் கிங் சிறுவனாக இருந்தபோது பஸ்ஸில் போய்க் கொண்டிருந்தார். வெள்ளைக்காரர்கள் வந்துவிட்டார்கள் என்ற காரணத்தால், பஸ்ஸில் அமர்ந்திருந்த கறுப்பினத்தவர்களை எழுந்து நிற்கச் சொன்னார் பஸ் கண்டக்டர். அவருடைய டீச்சர் உட்பட மற்றவர்கள் அவமானத்தோடு அமைதியாக எழுந்து இடம் விட்டனர். ''பணம் கொடுத்து நானும் டிக்கெட் வாங்கி இருக்கிறேன். எதற்காக நான் எழுந்திருக்க வேண்டும்'' எனக் கேட்டார் மார்ட்டின் லூதர் கிங். அவரை அசிங்கமாகத் திட்டி பாதி வழியிலேயே இறக்கி விட்டு விட்டார் கண்டக்டர்.

'என் வாழ்நாளில் நான் மிக அதிகமாகக் கோபம் கொண்ட நாள் அதுதான். என்னை தூங்க விடாத அந்த இரவை எப்போதும் மறக்க முடியாது. அவமானத்தை சகித்துக்கொள்கிற மக்களுக்காக போராட வேண்டும் என்ற வெறி வந்த நாள் அது' என தன் சுயசரிதையில் எழுதி இருக்கிறார் மார்ட்டின் லூதர் கிங்.

அவர் பஸ் மீது கல் விட்டு எறிந்து தன் கோபத்தை வெளிப்படுத்தி இருக்கலாம். அந்த கண்டக்டரோடு சண்டை போட்டிருக்கலாம். அதனால், அவர் ஜெயிலுக்குப் போவதைத் தவிர பலன் எதுவும் இருந்திருக்காது. தன் கோபத்தை போராட்டமாக வெளிப்படுத்தினார் அவர். உலகின் வல்லரசான அமெரிக்காவின் அதிபராக ஒரு கறுப்பர் இப்போது வந்ததற்கும், மார்ட்டின் லூதர் கிங்கின் கோபத்துக்கும் சம்பந்தம் இருக்கிறது.

கோபம் என்பது நெருப்பு போல... சரியாகப் பயன்படுத்தினால் அது நமக்கு வெளிச்சமாக இருக்கும். அற்ப காரணங்களுக்கு கோபப்பட்டால், அது நம்மையே சுடும்.




## எப்படி ஆக வேண்டும்?

ஒரு ஏழைச் சிறுவனுக்கு ஒரு பணக்கார இளைஞன் நண்பன். ஒருநாள் திடீரென அந்த இளைஞன் புத்தம் புதிய விலையுயர்ந்த காரை ஓட்டி வந்து காட்டினான். சிறுவன் அந்தக் காரை வியப்பாகப் பார்த்துக்கொண்டிருந்தான்.

அந்த பணக்கார இளைஞன் அவனைக் காரில் உட்கார வைத்து கொஞ்ச தூரம் ஓட்டிக் காட்டினான். அந்த அனுபவமே அவனுக்குப் பரவசம் தந்தது.

''சார்! உங்க கார் ரொம்ப அருமையா இருக்கு. விலை ரொம்ப அதிகமோ?'' என்றான் சிறுவன்.

''ஆமாம் தம்பி! ஆனால் என்ன விலை என எனக்குத் தெரியாது. இந்தக் கார் என் அண்ணன் எனக்கு பரிசாகக் கொடுத்தது'' என்றான் அந்த இளைஞன்.

சிறுவன் ஏதோ யோசித்தான். அவனை குறும்பாகப் பார்த்த இளைஞன், ''நீ என்ன யோசிக்கிறாய் என்று நான் சொல்லவா? எதிர்காலத்தில் இந்த மாதிரி ஒரு காரை உனக்கும் யாராவது தர வேண்டும் என்று தானே!'' எனக் கேட்டுச் சிரித்தான்.

''இல்லை சார்! என் தம்பிக்கு இப்படி ஒரு கார் வாங்கித் தருமளவுக்கு, நான் உங்கள் அண்ணன் போல வாழ்க்கையில் உயர வேண்டும் என நம்பிக்கையோடு நினைத்துக்கொண்டேன்'' – என அடக்கமாகச் சொன்னான் சிறுவன்.

## பிரித்துக் கொடுங்கள்

உங்களுக்கும் இரண்டு கைகள்தான் இருக்கின்றன; எல்லோருக்கும் ஒரு நாள் என்பது 24 மணி நேரம் என்றால், உங்களுக்கும் அதுதான்! எல்லா வேலைகளையும் நீங்களே இழுத்துப் போட்டுக் கொண்டு செய்ய முடியாது. அடுத்தவர்கள் செய்யும் வேலையில் நேர்த்தி எதிர்பார்க்க முடியாது என்றாலும், காலப்போக்கில் அதை சாத்தியமாக்க முடியும். பெரிய நிறுவனங்களில் இந்த இந்த வேலைகளை இவர்கள் செய்ய வேண்டும் என கச்சிதமாகப் பிரித்து வைத்திருக்கிறார்கள். பல வேலைகளை அவுட்சோர்சிங் போல கொடுத்துவிடுகிறார்கள். ஒரு பிளஸ்2 மாணவன்கூட ஆறு பாடங்களைப் படிக்க வேண்டியிருக்கிறது. ‘‘எனக்கு இயற்பியல்தான் பிடிக்கிறது’’ என அதை மட்டும் படித்தால், மற்ற ஐந்து பாடங்களிலும் மார்க் குறைந்துவிடும். ஒரு வேலை என்பதும் பல சின்னச்சின்ன வேலைகளை உள்ளடக்கியது. ஏதாவது ஒன்றில்தான் ஒரு நேரத்தில் உங்களால் கவனம் செலுத்த முடியும். அந்த நேரத்தில் மற்ற வேலைகள் இயல்பாகவே வேகம் குறைய ஆரம்பிக்கும். அப்புறம் இது ஒட்டுமொத்த வேலைக்குமே ஆபத்தாகி விடும். திருவள்ளுவரே சொல்லியிருக்கிறார்... யாரால் எதை எதனால் சிறப்பாக செய்ய முடியும் என ஆராய்ந்து, அதனை அவர்களிடம் விட்டுவிடுங்கள்!



## பிரதிபலிப்பு!



ஒரு பழங்கால அரண்மனையில் ஆயிரம் கண்ணாடிகள் பதித்த பிரமாண்டமான அறை ஒன்று இருந்தது. ஒருநாள் அதற்குள் சென்று ஒரு குழந்தை விளையாடினாள். தன்னைச் சுற்றி பிம்பங்களாக ஆயிரம் குழந்தைகளின் மலர்ந்த முகங்களைக் கண்டு மகிழ்ந்தாள். அவள் சிரித்ததும் ஆயிரம் குழந்தைகளும் சிரித்தன. அவள் கை தட்டியவுடன், ஆயிரம் பிம்பங்களும் கை தட்டின. ‘உலகிலேயே மகிழ்ச்சியான இடம் இதுதான்’ என்று எண்ணி, அடிக்கடி அங்கே சென்று விளையாடினாள்.

அதே இடத்துக்கு ஒருநாள் மனநிலை சரியில்லாத ஒருவன் வந்தான். அறைக்குள் நுழைந்ததும், தன்னைச் சுற்றி ஆயிரம் கோபமான மனிதர்களைக் கண்டான். அச்சம் கொண்ட அவன், அந்த மனிதர்களை அடிக்க கை ஓங்கியவுடன், ஆயிரம் பிம்பங்களும் அவனை அடிக்க கை ஓங்கின. ‘‘உலகிலேயே மோசமான இடம் இதுதான்’’ எனக் கூறி, அங்கிருந்து வெளியேறினான்.

இந்த சமூகம்தான் ஆயிரம் கண்ணாடிகள் இருக்கிற அறை. நாம் எதை வெளிப்படுத்துகிறமோ அதையே சமூகம் பிரதிபலிக்கிறது. நம் மனதைக் குழந்தையைப் போல் வைத்திருந்தால், உலகம் நமக்கு மகிழ்ச்சியான இடமாகும்!

## தெளிவாகத் திட்டமிடுங்கள்



‘வாழ்க்கை மிக எளிமையானது; நாம்தான் ஏதேதோ செய்து அதை சிக்கலாக்கி விடுகிறோம்’ என்றார் கன்ஃபூஷியஸ். எவ்வளவு நீண்ட பயணமும் சின்னச்சின்ன அடிகளில்தான் சாத்தியமாகிறது. முதல் அடியை எடுத்து வைப்பதற்கு முன்பே, பாதையின் கடைசியில் இருக்கும் ஒரு தடையைப் பற்றி நினைக்கலாமா? பயணம் துவங்கிவிட்டால் போதும், அந்தப் பாதையே தனது யாத்ரிகனுக்கு உதவத் தொடங்கி விடும்.

உங்கள் கனவுகளுக்கும் திட்டங்களுக்கும் வடிவம் கொடுக்க வேண்டியதுதான் உங்கள் முதல் வேலை. அதை உங்களால் சாதிக்க முடியும் என நம்புங்கள். இது சாத்தியமான பிறகு கிடைக்கும் வெற்றி, வெகுமதி, லாபம் எல்லாவற்றையும் நினைத்துப் பாருங்கள். உங்கள் கனவை, உங்கள் வேலையைப் பற்றி மற்றவர்களுக்குச் சொல்வதைவிட, உங்களுக்கு நீங்களே தினம் தினம் சொல்லிக் கொள்ளுங்கள். உங்களுக்குள் பொறுப்புணர்வு கூடுவதை உணர்வீர்கள். என்ன செய்ய வேண்டும், அதை எப்படி அடைவது என தெளிவாக எழுதிப் பாருங்கள். பாதையைப் பழகிக் கொள்பவன், எங்கேயும் வழி கேட்க நிற்பதில்லை!

# வாழ்க்கையை செதுக்கும் 3 விஷயங்கள்!



## வாழ்க்கையில் கடினமான விஷயங்கள் மூன்று...

1. அடுத்தவர் சொன்ன ரகசியத்தைக் காப்பது.
2. தனக்கு இழைக்கப்பட்ட தீங்கை மறப்பது.
3. ஒய்வு நேரத்தை உயர்ந்த வழியில் பயன்படுத்துவது.



## வாழ்வில் மறக்கக் கூடாத விஷயங்கள் மூன்று...

1. உண்மை.
2. கடமை.
3. செய்நன்றி.



## எல்லோரும் அடக்க வேண்டிய விஷயங்கள் மூன்று...

1. நாக்கு.
2. நடத்தை.
3. கோபம்.



## வாழ்வில் பெற வேண்டிய விஷயங்கள் மூன்று...

1. தைரியம்.
2. அன்பு.
3. மென்மை.



## அடுத்தவர்களுக்குக் கொடுக்க வேண்டிய விஷயங்கள் மூன்று...

1. ஈதல்.
2. ஆறுதல்.
3. பாராட்டு.



## வாழ்வில் தவிர்க்க வேண்டிய விஷயங்கள் மூன்று...

1. துரோகம்.
2. முரட்டுத்தனம்.
3. நன்றி மறப்பது.



## வாழ்வில் யாராலும் திருட முடியாத விஷயங்கள் மூன்று...

1. புத்தி.
2. கல்வி.
3. நற்பண்புகள்.



## வாழ்க்கையில் உயர்வுக்கு வழிகள் மூன்று...

1. ஒழுக்கமாக இருந்தால் கவலை ஏற்படாது.
2. புத்திசாலித்தனமாக இருந்தால் குழப்பங்கள் ஏற்படாது.
3. துணிச்சலாக இருந்தால் அச்சம் தவிர்க்கலாம்.

# தோல்விகளைத் தாண்டி வென்றவர்கள்!


## நியூட்டன்

**ஒ**ரு ஆப்பிளை வைத்து புவி ஈர்ப்பு விசையைக் கண்டறிந்த மகத்தான விஞ்ஞானியாக சர் ஐசக் நியூட்டனை நமக்குத் தெரியும். ஆனால் பள்ளிப்பருவத்தில் அவர் கணிதம் தவிர மற்ற பாடங்களில் அடிக்கடி ஃபெயில் ஆகிவிடுவார். ‘படிப்புதான் ஏறவில்லையே’ என குடும்ப நிறுவனத்தை கவனித்துக்கொள்ளச் சொன்னார்கள். ஆனால் வியாபாரமும் ஒழுங்காக செய்யத் தெரியாமல், அதை மூடும் நிலைமைக்குக் கொண்டு வந்தார். அவரது மாமா தலையிட்டு, ‘உனக்கு வியாபாரம் ஒத்து வராது. நீ மேற்கொண்டு படி’ என பட்டம் படிக்க அனுப்பினார். கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகமே அவருக்குள் இருந்த விஞ்ஞானியைக் கண்டறிந்து வெளியில் கொண்டு வந்தது.



## ஆல்பர்ட் ஐன்ஸ்டீன்


**இ**ந்த உலகமே ‘ஜீனியஸ்’ என்ற ஒற்றை வார்த்தையால் குறிப்பிடும் மகத்தான விஞ்ஞானி ஐன்ஸ்டீன். இயற்பியலின் தந்தை. அணுசக்தியின் வீரியத்தை உலகுக்கு உணர்த்தியவர். இவ்வளவு பெரிய மேதையின் இளம் வயது அவ்வளவு இனிமையானதாக இருக்கவில்லை. ஐன்ஸ்டீன் 4 வயது வரை பேசவில்லை. ஏழு வயது வரை எழுத்துக் கூட்டிக்கூட படிக்கவில்லை. அதன்பிறகும் எல்லா பாடங்களிலும் சுமாரான மதிப்பெண்களே வாங்கி வருவார். ‘மனநலம் குன்றிய குழந்தை’ என ஆசிரியர்கள் முத்திரை குத்தினர். ஐன்ஸ்டீனின் பெற்றோரே இதை நம்பினர். ஆனால் ‘ரிலேட்டிவிட்டி தியரி’ கண்டறிந்து அறிவியலின் பல கதவுகளைத் திறந்துவிட்ட அவர், நோபல் பரிசு வாங்கும் அளவுக்கு உயர்ந்தார்.





## மகேந்திர சிங் தோனி

**இ**ந்திய கிரிக்கெட்டின் வெற்றி நாயகன் தோனி. உலகக் கோப்பையை 28 ஆண்டுகளுக்குப் பிறகு இந்தியாவுக்குப் பெற்றுத் தந்தவர். டெஸ்ட் போட்டி, ஒருநாள் போட்டி, ட்வென்ட்டி 20 என மூன்று வகை கிரிக்கெட்டிலும் இந்தியாவுக்கு நம்பர் 1 அந்தஸ்து பெற்றுத் தந்தவர். ஆனால் இளமையில் அவர் ஆர்வம் கிரிக்கெட் மீது இல்லை. அவர் பிறந்த ஜார்கண்ட் மாநிலத்திலிருந்து இந்திய அணிக்கு கிரிக்கெட் வீரர்கள் யாரும் வந்ததில்லை. பாட்மின்டன், கால்பந்து விளையாட்டுகளே அவர் விளையாடிக்கொண்டிருந்தார். கோல் கீப்பராக அவரின் திறமையைப் பார்த்த ஒரு கோச், அவரை கிரிக்கெட்டுக்கு திசை திருப்பிவிட்டார். கொஞ்சம் கொஞ்சமாக மேலே வந்தபோது, விளையாட்டு வீரருக்கான கோட்டாவில் ரயில்வே டிக்கெட் பரிசோதகர் வேலை கிடைத்தது. ஏழைக் குடும்பம். தன் வருமானத்தால் குடும்பத்தைக் காப்பாற்ற வேண்டிய சூழலில், அந்த வேலையில் செட்டிலாக அவர் நினைத்திருக்கலாம். ஆனால் தன் உழைப்பால் கிரிக்கெட் மைதானத்தில் எல்லோரின் கவனத்தையும் திருப்பி, உச்சம் தொட்டார்.





## அமிதாப் பச்சன்

'இந்தியாவின் சூப்பர்ஸ்டார்' என கொண்டாடப்படும் ஹீரோ. 74 வயதிலும் 24 மணி நேரமும் பிஸியாக இருக்கிறார். ஆனால் ஆரம்பத்தில் அவரது உயரத்தைப் பார்த்தே சினிமாவில் அவருக்கு வாய்ப்பு கொடுக்க மறுத்தனர். பிற நடிகர்களுக்கு டப்பிங் குரல் கொடுப்பவராக திரைத்துறையில் நுழைந்தவர், பிறகு சிறுசிறு வேடங்களில் நடித்தார். அவர் முன்னணி பாத்திரங்களில் நடித்த படங்கள் அடுத்தடுத்து தோல்வியடைந்தன. அதன்பின் 'கோபக்கார இளைஞன்' கதாபாத்திரத்தில் அவர் நடித்த படம் ஜெயிக்க, தொடர்ந்து புகழேணியில் ஏறினார். உச்சம் தொட்டபிறகு அவர் ஆரம்பித்த தயாரிப்பு நிறுவனம் அடுத்தடுத்து தோல்விகளைச் சந்திக்க, அவரது மொத்த சொத்தும் பறிபோனது. குடியிருக்கும் வீட்டுக்கே ஆபத்து வந்தது. புத்திசாலித்தனமாக தனது வயதுக்கு ஏற்ற பாத்திரங்களில் நடித்து மீண்டும் முன்னணிக்கு வந்தார். இப்போதும் அதிக சம்பளம் வாங்கும் ஒரு நடிகராக அவர் இருக்கிறார். இந்தியாவின் உயரிய விருதுகள் பலவும் பெற்றிருக்கிறார். தனது பலவீனங்களையே பலமாக்கிக் கொள்ள அவருக்குத் தெரிந்திருந்ததே இந்த வெற்றிக்குக் காரணம்.

## மகாத்மா காந்தி

'அகிம்சை' என்ற ஆயுதத்தால் உலகின் மிகப்பெரிய சாம்ராஜ்ஜியத்தை தோற்றோடச் செய்தவர். இந்தியா என்ற தேசத்தில் சுதந்திரக் காற்று பரவச் செய்த நம் தேசப் பிதா. மகாத்மா காந்தி பேசுகிறார் என்றால் அந்தப் பொதுக்கூட்டத்துக்கு கூப்பிடாமலேயே லட்சக்கணக்கான மக்கள் கூடுவார்கள். ஆனால் ஆரம்ப நாட்களில் காந்தி ரொம்பவே கூச்ச சுபாவம் கொண்டவர். தனிப்பட்ட முறையில்கூட நீண்ட நேரம் உரையாடத் தெரியாது. லண்டன் சென்று சட்டம் படித்து பாரிஸ்டர் பட்டம் பெற்றபிறகும், அவரால் கோர்ட்டில் வாதாட முடியவில்லை. சாட்சிகளைக் குறுக்கு விசாரணை செய்வதற்குள் திணறிப் போனார். இந்தியாவில் வழக்கறிஞர் தொழில் செய்ய முடியாமல் தோல்வியடைந்த நிலையில்தான் அவர் தென் ஆப்பிரிக்கா போனார். அங்கு அவர் வழக்கறிஞர் தொழிலிலும், இந்தியர்கள் மற்றும் கறுப்பினத்தவர் உரிமைக்கான அரசியல் போராட்டங்களிலும் பெரும் புகழ் பெற்றார்.





## சார்லஸ் டார்வின்

அவரது அப்பாவுக்கு டார்வினை டாக்டர் ஆக்க வேண்டும் என்ற ஆசை இருந்தது. ஆனால் பள்ளியில் 'சராசரி பையன்கள் அளவுக்குக் கூட புத்திக்கூர்மை இல்லாதவன்' என ஆசிரியர்கள் முத்திரை குத்தினார்கள். எல்லாப் பாடங்களிலும் மதிப்பெண்கள் குறைவாகவே வாங்கிய டார்வினை 'சோம்பேறி' என அவர் அப்பா அடிக்கடி திட்டுவார். இப்படியெல்லாம் கருதப்பட்ட டார்வின்தான், தனது பரிணாமக் கொள்கை மூலம் உயிரினங்கள் பற்றிய ஆய்வுக்கான புதிய பாதையை வடிவமைத்துக் கொடுத்த மாபெரும் அறிவியல் அறிஞர் ஆனார்.

## சில வார்த்தைகள்... சில அர்த்தங்கள்!

**புன்னகை**

எல்லா விஷயங்களையும் நேராக்குவதை சாத்தியப்படுத்துகிற ஒரு வளைந்த கோடு.

**அனுபவம்**

தங்கள் தவறுகளுக்கு பலர் சூட்டிக்கொள்ளும் பெயர்.

**சமாதானம்**

ஒரு கேக்கை எல்லோருக்கும் பிரித்துக் கொடுத்து, 'தங்களுக்குக் கிடைத்ததுதான் இருப்பதிலேயே பெரிய பாகம்' என எல்லோரையும் நம்ப வைக்கும் கலை.

**தளராத போராளி**

தவறுதலாக ஆற்றில் விழுந்தாலும், சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி குளித்துவிடுகிற சாமர்த்தியசாலி

**நம்பிக்கை மனிதர்**



கோபுரத்தின் உச்சியிலிருந்து கீழே விழுந்தாலும், ''எனக்கு இன்னமும் காயம் எதுவும் படவில்லை'' என தரையைத் தொடும் வரை சொல்லிக் கொண்டு, தப்பிக்க வழி தேடுபவர்.

## வழிகாட்டி!

நான்கு மெழுகுவர்த்திகள் எரிந்து கொண்டிருந்தன. வெளியிலிருந்து சாளரம் வழியே வேகமாகக் காற்று வீசியது.

காற்று உள்ளே நுழைந்ததும், 'அமைதி' என்ற முதல் மெழுகுவர்த்தி, ''ஐயோ! காற்று வீசுகின்றதே! நான் அணைந்துவிடுவேன்'' என்று பலவீனமாக குரல் கொடுத்தது. காற்று பட்டதும் அணைந்தும் விட்டது. 'அன்பு' என்ற அடுத்த மெழுகுவர்த்தியும், ''என்னால் காற்றை எதிர்க்க முடியாது'' என்று புலம்பியபடி அணைந்துவிட்டது. 'அறிவு' என்ற மூன்றாவது மெழுகுவர்த்தியும் அணைந்தது.

நான்காவது மெழுகுவர்த்தி மட்டும், காற்று வீசிய அந்த சில நொடிகள் போராடி ஜெயித்து விட்டது. அப்போது அந்த அறையில் ஒரு சிறுவன் நுழைந்தான். ''அடடா! மூன்று மெழுகுவர்த்திகளும் அணைந்துவிட்டதே'' என்றான்.

எரிந்து கொண்டிருந்த நான்காவது மெழுகுவர்த்தி, ''வருத்தப்படாதே! நான் இருக்கின்றேன். என்னை வைத்து மற்ற மூன்றையும் பற்ற வைத்துக்கொள்'' என்றது.

''உன் பெயர் என்ன?'' என்று கேட்டான் சிறுவன்.

''நம்பிக்கை'' என்றது மெழுகுவர்த்தி.

எதை இழந்தாலும் எப்போதும் வாழ்வில் நம்பிக்கையை மட்டும் இழக்கக்கூடாது. நம்பிக்கை நம் வாழ்வின் வழிகாட்டி!

## நல்ல நண்பர் ஆவது எப்படி?

- கொடுத்த வாக்கைக் காப்பாற்றுங்கள்.
- உங்களால் செய்யமுடியாத விஷயங்களை வாக்குறுதிகளாகத் தராதீர்கள்.
- எப்போதாவது எதையாவது செய்ய முடியாது போனால், அதற்கான உண்மைக் காரணத்தைச் சொல்லிவிடுங்கள்.
- 'இதை இவர் எப்படியும் செய்வார்' என்ற நம்பிக்கையை நண்பர்களுக்குக் கொடுங்கள்.
- பொய்யான நம்பிக்கை தந்து ஏமாற்றாதீர்கள்.
- தப்பு செய்தால் தயங்காமல் மனதார மன்னிப்பு கேளுங்கள்.
- உங்கள் தவறுக்கு மற்றவர்கள்மீது பழி போடாதீர்கள்.
- உங்கள் செயல்களில் நேர்மையாக இருங்கள்.
- உங்கள் வார்த்தைகளில் உண்மையாக இருங்கள்.
- எப்போதும் நண்பர்கள் அணுகமுடிகிறபடி எளிமையாக இருங்கள்.
- உங்கள் தேவைகளுக்கு நண்பர்களை கறிவேப்பிலை போல பயன்படுத்திக்கொள்ளாதீர்கள்.
- நட்பில் பெறுவதும் முக்கியம்; தருவதும் அவசியம். எப்போதும் பெற்றுக்கொண்டே இருக்காதீர்கள்.
- நட்புக்கு விசுவாசமாக இருங்கள். உங்களை நம்பிச் சொல்லும் ரகசியங்களைக் காப்பாற்றுங்கள்.
- நண்பர்களின் பிரச்னைகளைப் புரிந்துகொண்டு பிராக்டிகலான தீர்வு சொல்லுங்கள்.
- சுயநலமற்று இருங்கள். நண்பர்களின் நலனை நீங்கள் பார்த்தால், உங்கள் நலனை அவர்கள் பார்த்துக்கொள்வார்கள்.
- எப்போதும் பேசுபவராக இருக்காமல், அவர்களின் பிரச்னைகளை அக்கறையோடு கேட்பவராகவும் இருங்கள்.
- இன்பங்களில் இணையாவிட்டாலும், துன்பங்களின்போது துணை நில்லுங்கள்!
- நண்பன் என்பவன் நல்ல ஆலோசகன். தேவைகளின்போது அதைச் செய்யுங்கள்.
- மன்னிப்பு கேட்பது போல மன்னிக்கவும் கற்றுக்கொள்ளுங்கள்.
- எப்போதும் தொடர்பில் இருங்கள்.




# வெண்மை வேந்தர் தந்த நன்மைச் சிந்தனைகள்

**(‘வெண்மை எண்ணங்கள்’ மாத இதழையும், இதை நடத்திவரும் ‘ராம்ராஜ் காட்டன்’ நிறுவனர் திரு. கே.ஆர்.நாகராஜனையும் வாழ்த்திய ஆளுமைகளின் சில வரிகள்...)**

## டாக்டர் பி.கே.கிருஷ்ணராஜ் வானவராயர்

**தலைவர், பாரதிய வித்யா பவன் – கோவை**



எனது இனிய நண்பர் திரு. கே.ஆர்.நாகராஜன் எதையும் ஆழமாகச் சிந்திப்பவர். நிதானமாகத் திட்டமிட்டுச் சிறப்பாகப் புதுமைகள் படைப்பவர். சற்று மாறுபட்ட கோணங்களில் எதையும் உற்று நோக்கி, உள்வாங்கி வித்தியாசமாகச் சிந்திப்பவர். அவர் சார்ந்திருக்கும் தொழிலிலும் அவர் ஆற்றி வரும் சமூகப் பணிகளிலும் இந்த தனித்தன்மையைக் காணலாம். அப்படி அவர் எண்ணத்தில் உதித்த ஓர் அற்புதமான திட்டம்தான் ‘வெண்மை எண்ணங்கள்’ மாத இதழ். தன் உயர்விற்குக் காரணமான சமுதாயத்தையும் உயர்த்த வேண்டும் என்கின்ற உயரிய நோக்கத்தில் திரு. நாகராஜன் இந்த அரிய முயற்சியில் ஈடுபட்டிருப்பது பாராட்டுக்குரியது. அவருக்கு என் வாழ்த்துக்கள்.



## நடிகர் சிவகுமார்

என் அன்புத்தம்பி ‘ராம்ராஜ் காட்டன்’ கே.ஆர்.நாகராஜன் அவர்கள். தொழிலில் வெற்றி பெறும் அதே வேகத்தில் – பள்ளிகள், கல்லூரிகள், அகரம் ஃபவுண்டேஷன், ஆதரவற்றோர் விடுதிகள், ஏழை மாணவர்கள் படிப்புக்கு உதவி, முதியோர் நல உதவி என்று பல துறைகளில் சமுதாயப் பணியினை தொடர்ந்து செய்து வருகிறார். அதோடு ‘வெண்மை எண்ணங்கள்’ மாத இதழையும் பல ஆண்டுகளாக நடத்தி வருகிறார். குடும்ப உறவை வலுப்படுத்தவும், நம் குழந்தைகளை உயர்ந்த மனிதர்களாக உருவாக்கவும் வழிகாட்டும் இதழ் இது. படிப்போர் நிச்சயம் பயன் பெறுவர்.

## கவிப்பேரரசு வைரமுத்து



ராம்ராஜ் நாகராஜன், ‘வெண்மை’ எனும் சொல்லுக்கு ஆடையில் அர்த்தம் எழுதியவர். தமிழர்களின் பண்பாட்டுச் சின்னமான வேட்டியைத் தரத்தாலும் தனித்துவத்தாலும் அடையாளப்படுத்தி வெற்றி பெற்றவர். தொழிலதிபர்களில் சமூக சிந்தனையாளர்கள் தோன்றுவது அரிது. நான் வியந்து போற்றும் சமூக மேம்பாட்டுச் சிந்தனையாளராக விளங்குகிறார் அருமை நண்பர் நாகராஜன். தறியில் ஆடைநெய்த ‘ராம்ராஜ்’ நாகராஜன் தமிழில் நெய்திருக்கும் இந்தத் தன்முனைப்பு நூல், தமிழுக்கோர் நல்வரவு என்பதில் ஐயமில்லை.



## வெ.இறையன்பு ஐ.ஏ.எஸ்

தமிழகத்தின் பாரம்பரிய உடைக்கு கம்பீரத்தைச் சேர்த்த பெருமை ‘ராம்ராஜ்’ திரு. நாகராஜன் அவர்களையே சாரும். மாதந்தோறும் தவறாமல் நான் ‘வெண்மை எண்ணங்கள்’ இதழைப் படித்து வருகிறேன். அவருடைய வார்த்தைகளில், உள்ளத்திலிருக்கும் வெண்மை வெளிப்படுகிறது. அதுவே இந்த இதழுக்கு மதிப்புக் கூட்டித் தருகிறது; வாசிப்பவர்களுடைய மதிப்பையும் கூட்டப் போகிறது.

# வாசகர் வாழ்த்துகள்

**செ**ங்காட்டில் பிறந்து, இன்று உலகம் அறிந்த பிரபலமாக இருக்கும் வெண்மை நாயகர் 'ராம்ராஜ்' நாகராஜனின் எல்லா முயற்சிகளும் உலகத்தையே திரும்பிப் பார்க்க வைக்கக் கூடியவை. 'வெண்மை எண்ணங்கள்' இதழுக்கும் அந்தப் பட்டியலில் நிச்சயம் இடம் உண்டு.

***– இரா.விஷ்ணுபிரகாஷ், சிங்கப்பூர்.***

**க**சப்பான மருந்துகளை இனிமையான தேனில் குழைத்துத் தருவது நம் பாரம்பரியம். அப்படி இனிமையான குட்டிக் கதைகளுக்குள் நல்ல கருத்துகளைக் குழைத்துத் தந்திருக்கிறது 'வெண்மை எண்ணங்கள்' இதழ். தமிழர் எண்ணங்களை மேம்படுத்தும் உங்கள் பணி தொடரட்டும்.

***– எஸ்.கோமதி, திருநெல்வேலி.***

**அ**ழகிய அட்டை, தரமான அச்சு, வழவழப்பான பக்கங்களோடு, கவிதையாக 'வெண்மை எண்ணங்கள்' என்ற பெயரோடு வந்திருக்கும் இந்த இதழ் அற்புதம்.

***– எஸ்.பாண்டி மீனா, மதுரை.***

'**வெ**ண்மை எண்ணங்கள்' இதழில் உள்ள கருத்துகள் போற்றத்தக்கவை; மதிப்பு மிக்கவை. ஒவ்வொரு பக்கத்திலும் உள்ள கருத்துகள், ஒன்றை ஒன்று மிஞ்சுபவை. ஒவ்வொரு மாத இதழையும் ஒரு சிறப்பிதழாக வழங்குவது, பெரிதும் வரவேற்க வேண்டிய புதுமை முயற்சி. வியாபாரத்தில் லாபத்தை மட்டுமே குறிக்கோளாகக் கொள்ளாமல், உயர்ந்த எண்ணங்களை உலகெங்கும் பரப்ப வேண்டும் என தாங்கள் செய்யும் இந்த முயற்சி பல வெற்றிகளைப் பெறட்டும்.

***– அ.அன்வர் அலி, சீர்காழி.***

'**வெ**ண்மை எண்ணங்கள்' இதழ் மிகப் புதுமையாக இருந்தது. இதில் உள்ள கருத்துகளை எடுத்து, எங்கள் கடைகளில் தினம் ஒன்றாக போர்டில் எழுதி வருகிறோம்.

***– எஸ்.ரேகா, ஆத்தூர், சேலம்***

'**வெ**ண்மை எண்ணங்கள்' புத்தகம் எங்களுக்கு பிரமிப்பு ஏற்படுத்தியது. சினிமா பாதிப்புகள் இல்லாத புத்தகம் என்பது இன்ப அதிர்ச்சி. தரமான நிறுவனம் தரமான பத்திரிகைதானே வெளியிடும்... இதில் என்ன ஆச்சரியம்? இதுவரை வந்த 'வெண்மை எண்ணங்கள்' இதழ்களை நான் ஆசிரியையாகப் பணிபுரியும் பள்ளியின் நூலகத்தில் வைத்துள்ளேன். மாணவர்கள் ஆர்வமாகப் படிக்கிறார்கள்.

***– கா.சிவகாமசுந்தரி, திண்டுக்கல்.***

**ம**ன அழுத்தம் குறைந்து மகிழ்வான சிந்தனைகளை பிறக்கச் செய்யும் இனிய இதழ் 'வெண்மை எண்ணங்கள்'.

***– டி.அல்போன்ஸ், புதுப்பட்டினம்.***

**இ**ன்பமான குடும்ப வாழ்க்கைக்குத் தேவைப்படும் உபயோகமான கருத்துகள் நிறைந்த இதழாக 'வெண்மை எண்ணங்கள்' உள்ளது.

***– இ.செல்வ நாராயணன், தூத்துக்குடி.***

**எ**ன்னுடைய தொழிலால் எனக்கு ஏற்படும் இறுக்கமான மனநிலையை 'வெண்மை எண்ணங்கள்' இதழ், மாற்றி அமைத்துள்ளது.

***– என்.செண்பகராஜன், தேனி.***

**க**றைகள் இல்லாத ஆடைகளைப் போல, குறைகள் இல்லாத மனவலிமையை மேம்படுத்த 'வெண்மை எண்ணங்கள்' இதழ் உதவுகிறது.

***– எஸ்.லலிதாம்பாள், மயிலாடுதுறை.***

**நா**ன் ராம்ராஜ் தயாரிப்புகளை தொடர்ந்து பயன்படுத்துபவன். 'வெண்மை' குறித்து பல தகவல்களை பல்வேறு பத்திரிகைகளிலும் எழுதியிருக்கிறேன். தூய்மையான எண்ணங்களைத் தந்து, இந்த உலகில் புது வெளிச்சம் பரவுவதற்கு வழிகாட்டும் 'வெண்மை'க்கு வாழ்த்துகள்!

***– அய்யம்பதி ராசா, சென்னை–14.***

'**வெ**ண்மை எண்ணங்கள்' ஒவ்வொரு இதழைப் பெறும்போதும், பல ஆயிரம் ரூபாய், பல லட்சம் ரூபாய் பெற்றாலும் கிடைக்காத சந்தோஷம் எனக்குக் கிடைக்கிறது. தமிழ்நாட்டின் ஒவ்வொரு பள்ளி, கல்லூரியிலும் பாடநூலாக வைத்து, நம் இளைய தலைமுறைக்கு பயிற்சி தர வேண்டும். தமிழ் சமூகத்துக்கு நீங்கள் செய்யும் தொண்டு மகத்தானது.

***– கே.விசுவநாதன், முன்னாள் தலைவர்,***
***காட்டுப்புத்தூர், வேலூர் மாவட்டம்.***

'**வெ**ண்மை எண்ணங்கள்' இதழைத் தொடர்ந்து படித்து, அடுத்த தலைமுறைக்காக பைண்டிங் செய்து வருகிறேன். நிகழ்காலத்திற்கு ஏற்ப புதுப்புது தலைப்புகளில் கட்டுரைகள், தலைப்புக்கு ஏற்றபடி செய்தித் தொகுப்புகள், பொருத்தமான புகைப்படங்கள், நேரில் பேசுவது போன்ற தலையங்கம் என போற்றிப் பாதுக்காக வேண்டிய பொக்கிஷமாக வெளி வருகிறது.

***– எல்.சிவாஜி ராவ், திருச்சி.***

'வெண்மை எண்ணங்கள்' இதழை ஒவ்வொரு மாதமும் படிக்கும்போது தன்னம்பிக்கையின் மதிப்பை உணர்கிறேன்.

*– கோபால மாதவன், தில்லைகங்கா நகர், சென்னை.*

'வெண்மை எண்ணங்கள்' இதழை படித்த சில நாட்களில் என் வாழ்க்கையில் மாற்றம் ஏற்படுவதை உணர்கிறேன்.

*– கே.சக்திவேல், காட்டுபுத்தூர், திருச்சி.*

மாதந்தோறும் புதுப்புது கருத்துள்ள கட்டுரைகளைத் தரும் 'வெண்மை எண்ணங்கள்' இதழ் எங்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கிறது.

*– பி.நித்யா, தென்கரை, பெரியகுளம்.*

மலர் வெண்மை; இதழ் புதுமை; பக்கத்துக்குப் பக்கம் கருத்துகள் அருமை!

*– என்.கோபாலகிருஷ்ணன், மண்ணச்சநல்லூர், திருச்சி.*

தன்னம்பிக்கை நிறைந்த, பயனுள்ள, கருத்தாழமிக்க கருத்துகளின் தொகுப்பாக 'வெண்மை எண்ணங்கள்' உள்ளது.

*– சகோதரி ம.ஜோதி, விழுப்புரம்.*

# ஆளுமைகளின் அன்பு மடல்!



செறிவான, பயன்தரும் நல்ல செய்திகள், படிக்கும் ஆர்வத்தைத் தூண்டும் வகையில் தரப்பட்டுள்ளன. உடனே முழு இதழையும் படிக்க முனையும் வகையில் இதழ் அமைந்துள்ளது. 'ராம்ராஜ்' புகழ்க் கோபுரத்தில் 'வெண்மை எண்ணங்கள்' மேலும் ஒரு சிகரம். சாதனைதான் வாழ்வின் அடையாளம். இதைத் தானும் பெற்று, சமூகத்துக்கும் பயனாக்கி உள்ள 'ராம்ராஜ்' காட்டன் நிறுவனத் தலைவருக்கு பாராட்டுகள்!

*– ஆய்வுரைத் திலகம் அ.அறிவொளி*

'வெண்மை எண்ணங்கள்' படித்தேன். நீங்களும் உங்கள் நிறுவனமும் இப்படி உயர்ந்திருப்பதற்கு வேறு எதைப் பற்றியும் யோசிக்க வேண்டிய அவசியம் இல்லை. 'உள்ளத்தில் உள்ளதைத்தான் ஊருக்குச் சொல்ல வேண்டும்' என உலகில் உள்ள நல்ல கருத்துக்களை ஒன்று திரட்டி முதலில் நீங்கள் பயன்படுத்தி, அதில் கிடைத்த அனுபவத்தில் நல்லதை மட்டும் அழகாகவும் ஆழமாகவும் கூறிய உங்களுக்கு ஆரஞ்ச் இம்பெக்ஸ் சார்பாகவும் எனது சார்பாகவும் வாழ்த்துக்களையும் நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கிறோம். நீங்கள் துணியை மட்டும் விற்கவில்லை; இளைஞர்களின் மனதிலே துணிவையும் விதைக்கிறீர்கள்.

*– கே.ஆர்.நல்லுசாமி, ஆரஞ்ச் இம்பெக்ஸ்,*

மனித வாழ்வுக்குத் தேவையான அனைத்து விஷயங்களும் 'வெண்மை எண்ணங்கள்' இதழில் உள்ளது.

*– குருஜி ஸ்ரீ எஸ்.என்.சாய் ரமேஷ் சிவா, கொங்கணாபுரம், சேலம்.*

மிக முத்தான நல்ல தகவல்களைத் தொகுத்து, மிகையின்றி எல்லோரும் பயன்பெறும் வண்ணம் வெளிவருகிறது 'வெண்மை எண்ணங்கள்' இதழ். எங்களுக்கு வரும், நல்ல எண்ணங்களின் தொகுப்பான மாத இதழ்களை, நாங்களும் படித்து, அதைப் பயனுள்ளவர்களுக்கும் சொல்கிறேன். பலன் கருதாது, தர்மத்தோடும் இறையனுபூதியோடும் எந்த செயலையும் செய்தால், அதற்கு மகத்தான சக்தி உண்டு. அதுதான் 'வெண்மை எண்ணங்கள்' இதழ்.

*– உரிமையாளர், திலகா ஸ்டோர்ஸ்*

ஸ்ரீஅகிலா டெக்ஸ்டைல், திருவானைக்கோவில்.

வெண்மை எண்ணங்கள்
வெற்றியின் உயர்படிகள்
உண்மையின் நன்மைகள்
ஒளிசிந்தும் பவளங்கள்!

*– கவிஞர் இறையன்பனார், சீர்காழி.*

'வெண்மை எண்ணங்கள்' பக்கங்களைப் புரட்டிப் படிக்கப் படிக்க வியப்பும் மகிழ்வும் என்னைப் பற்றிக் கொண்டன. உங்களின் பணி தொடர்ந்து தாய்த்தமிழுக்கு வேண்டும் என்ற எண்ணமே எனக்குள் ஆழமாக எழுந்தது.

*– தமிழ்மாமணி திருமேனி நாகராசன், காரைக்கால்.*

ராம்ராஜ் காட்டன் வெளியீடான 'வெண்மை எண்ணங்கள்' இதழ்களைத் தொடர்ந்து நானும் மன்ற உறுப்பினர்களும் படித்து வருகிறோம். எண்ணங்களின் கருத்துக் குவியலாக வெளியிடும் நல்ல முயற்சிக்கு எங்களது மகிழ்ச்சியும், பாராட்டுகளும் உரியன. சமுதாயத்துக்குப் பயன்படும் செய்திகளுடன் தொடரட்டும் பத்திரிகைப் பணி!

*– ந.சந்திரமௌலி, செயலாளர், வாழ்வியல் நெறிமுறை மன்றம், ஊத்துக்குளி.*



# நீங்களும் ஆகலாம் வழிகாட்டி!

வழிகாட்டிகளும் திசைகாட்டிகளும் ஒளிகாட்டிகளும் இல்லாமல் போனால் நம் வாழ்க்கை என்னவாகும்? நடுக்கடலில் மிதக்கும் கப்பலுக்கு வழிகாட்டுவது கலங்கரை விளக்கம். இதேபோல சாலையில் விரையும் வாகனங்களுக்கும், தண்டவாளங்களில் ஓடும் ரயில்களுக்கும், ஆகாயத்தில் பறக்கும் விமானங்களுக்கும் அதற்கேற்ற தொழில்நுட்ப வழிகாட்டிகள் உண்டு.

பிறந்த குழந்தையின் முதல் வழிகாட்டியாகிறாள் அம்மா. அதன்பின்பே அப்பாவும் பாட்டி தாத்தாக்களும் இன்னபிற உறவுகளும். இவர்களையெல்லாம் வழிகாட்டிப் பட்டியலில் குழந்தைகள் சேர்ப்பதில்லை. எனினும், பள்ளிப் பருவத்தில் அறிமுகமாகும் முதல் ஆசிரியர், நம் எல்லோர் மனத்திலும் முதல் வழிகாட்டியாகவே இறுதிவரை நிலைக்கிறார். சிறந்த வழிகாட்டி அமைந்தால், முயற்சிகள் அதிக பலனைத் தரும் என்பது மீண்டும் மீண்டும் நிரூபிக்கப்பட்ட உண்மை. கல்வியோ, வேலையோ, தொழிலோ, வாழ்க்கைச் சிக்கலோ... நமக்கு நிச்சயம் ஒரு வழிகாட்டி தேவை.

சுயமாகவே முன்னேறிய பலரின் வாழ்க்கையைப் படித்தால் ஓர் உண்மை புலப்படும். யாரோ ஒருவர் அவரின் மானசீக வழிகாட்டியாக – ரோல் மாடலாக – அவரே அறியாமல் வழிகாட்டியிருப்பது புலப்படும். அந்த யாரோ ஒருவர் பிரபலமானவராக இருக்கலாம்... வெற்றியாளராக இருக்கலாம்... இவரது துறையில் முன்னோடியாக இருக்கலாம்.

வாழ்வின் அடுத்த கட்டத்துக்குப் பயணிக்கத் துடிக்கும் ஒவ்வொருவருக்கும் ஒரு வழிகாட்டி அவசியம். அந்த வழிகாட்டி நம் கைப்பிடித்து சிகரத்துக்கு அழைத்துப்போகும் அறிமுகமான நபராக இருக்கலாம். அல்லது ஏகலைவனுக்கு வாய்த்த துரோணர் போல அமையலாம்.

பிறப்பால் வேடனான ஏகலைவனின் கதையை மகாபாரதத்தில் படித்திருப்பீர்கள். மகத நாட்டைச் சேர்ந்த இந்த ஏகலைவன் வில் வித்தையில் தேர்ச்சிபெற விரும்பினான். மகாகுருவான துரோணரிடம் வில் வில்வித்தை கற்க ஆசைப்பட்டான். அவரிடம் சென்று வேண்டுகோள் விடுத்தான். அவருக்கோ வேடர் குலத்தைச் சேர்ந்த ஏகலைவனுக்குக் கற்றுக்கொடுக்க விருப்பமில்லை. நேரமில்லை என்று காரணம் சொல்லி திருப்பி அனுப்பிவிட்டார். நான் எப்படி இந்த வித்தையைக் கற்றுக்கொள்வது என்று துரோணரிடமே கேட்டான் அவன். ''உனக்கு என்மீது நம்பிக்கை இருந்தால் நீ எங்கிருந்தாலும் கற்றுக்கொள்ளலாம்'' என்று கூறி அனுப்பிவிட்டார்.

ஏகலைவன் தன் மானசீக குருவின் வார்த்தைகளை அப்படியே நம்பினான். தனது வாழ்விடத்தில் துரோணரைப் போலவே ஒரு சிலையை அமைத்தான், அந்தச் சிலையையே குருவாக எண்ணி பயிற்சி செய்தான். ஒரு கட்டத்தில் 'வில்லுக்கு விஜயன்' என

பெயர் பெற்றிருந்த அர்ஜுனனைவிட திறம் மிக்கவனாக உருவானான்.

முறையான வழிகாட்டுதல் கிடைக்காவிட்டாலும், 'நாம் இவரைப் போல வர வேண்டும்' என துரோணரை மானசீக வழிகாட்டியாக வைத்துக்கொண்டு உயர்ந்தான் ஏகலைவன். ஆனால், அந்த ஏகலைவனிடம் குரு தட்சணையாக வலது கை பெருவிரலை வெட்டித் தருமாறு கேட்டு வாங்கினார் துரோணர். வழிகாட்டியாக நாம் யாரைத் தேர்ந்தெடுத்தாலும், அவர்களை எந்த அளவுக்குப் பின்பற்றுவது என்பதையும் இந்தக் கதையிலிருந்து நாம் கற்றுக்கொள்ள வேண்டும்.



வழிகாட்டி என்பவர் ஒரு நபராகவே இருக்க வேண்டும் என்பதில்லை. உங்கள் வழிகாட்டி ஒரு மிகச்சிறந்த பேச்சாக இருக்கலாம்... ஒரு பொன்மொழியாக இருக்கலாம்... ஒரு புத்தகமாகக்கூட இருக்கலாம். பாடநூல்களை தேர்வுக்கேற்ற முறையில் படிக்க உதவும் நோட்ஸ்களுக்குக்கூட 'வழிகாட்டி' என்றுதான் பெயர் சூட்டியிருக்கிறார்கள். வாழ்வை மாற்றிய புத்தகங்கள் என்றொரு பட்டியலே உண்டு. புத்தகக் கண்காட்சிகளில் பாருங்கள். ஏராளமான புத்தக வழிகாட்டிகள் கிடைக்கும்.





புத்தகங்கள் மட்டுமல்ல; இயற்கையைவிட சிறந்த வழிகாட்டி வேறென்ன இருக்கிறது? சூரியனும் நிலவும் நட்சத்திரங்களும் காட்டாத வழி உண்டா?

பார்வையற்ற ஒருவர் கையில் ஒரு விளக்கோடு சென்றார். அவரைப் பார்த்த மக்கள் சிரித்தார்கள். சிரிக்காதவர்களில் ஒருவர் அவரிடம் கேட்டாராம்... உங்களுக்கு இந்த விளக்கால் என்ன பலன் என்று. பார்வையற்றவர் சொன்னார் இப்படி... ''இந்த விளக்கு எனக்கு வழிகாட்ட அல்ல; பிறர் என்மீது மோதாமல் செல்வதற்கு வழிகாட்ட!''

இதேபோல வழிகாட்டும் ஒளியாகத் திகழ்ந்தவர்தான் ஃபிளாரன்ஸ் நைட்டிங்கேல். கைவிளக்கேந்திய காரிகை என்று அழைக்கப்படும் அவரே, இன்றைய கொரோனா காலத்திலும் தங்கள் உயிரைப் பொருட்படுத்தாது மருத்துவ சேவை புரியும் செவிலியர்களின் தாய். அவர்களின் முதல் வழிகாட்டி. மின்சாரம் இல்லா காலகட்டத்தில் கையில் விளக்கேந்தி, போரில் காயமுற்ற வீரர்களின் உயிர் காத்தவர் நைட்டிங்கேல்.

வேடிக்கையாகவும் ஒரு விஷயம் சொல்லலாம்... நம் விரோதிகளாக இருந்தாலும் சரி... வாழ்க்கையில் நமக்கு ஏதோ ஒரு விதத்தில் பாடம் கற்றுக் கொடுக்கும் அத்தனை பேருமே நம் வழிகாட்டிகள்தாம்!

நம் எல்லோருக்கும் வாழ்க்கையில் ஒரு தேடல் இருக்கிறது. அது சிலருக்கு ஆன்மத் தேடலாகவோ, ஆன்மிகத் தேடலாகவோ இருக்கலாம். சிலருக்கு அறிவுத் தேடலாக இருக்கலாம். சிலருக்கு சாதனை அல்லது வெற்றித் தேடலாக இருக்கலாம். தேடல் எதுவாக இருந்தாலும், அங்கு வழிகாட்டியின் தேவை ஏற்பட்டு விடுகிறது.

நாம்தான் வாழ்க்கை முழுக்க வழிகாட்டியைத் தேடித் திரிய வேண்டுமா? நாம் யாருக்கும் வழிகாட்டியாக மாட்டோமா? கவலையே வேண்டாம். காந்தி கூறிய 'என் வாழ்க்கையே என் செய்தி' என்கிற வாக்கியம் நமக்கும் பொருந்தும். வாழ்க்கையின் சவால்களை நாம் சமாளித்து மீண்டு வந்த கதைகள் எல்லாம் நம் வாரிசுகளுக்கு மட்டுமல்ல... நம் அனுபவங்களை அறிகிற அத்தனை பேருக்குமே ஏதோ ஒரு வகையில் வழிகாட்டும். ஆகவே, வழிகாட்டிகளைப் பின்தொடர்கிற நாமும் பிறருக்கு வழிகாட்டிகளே! ●



# நல்ல வழிகாட்டி யார்?

150 ஆண்டுகளுக்கு முன்பு குதிரை வண்டிதான் போக்குவரத்துக்குப் பயன்பட்டது. அப்படிக் குதிரை வண்டியில் பள்ளிக்குச் செல்வது ஒரு சிறுவனின் வழக்கம். ஒருமுறை வகுப்பில், ''நீங்கள் வளர்ந்து பெரியவன் ஆனதும் என்னவாக ஆசைப்படுகிறீர்கள்?'' என்று மாணவர்களிடம் ஆசிரியர் கேட்டார். வக்கீல், ஆசிரியர், மருத்துவர் என பலரும் சொன்னார்கள். இந்த சிறுவனோ, ''நான் குதிரை வண்டிக்காரர் ஆவேன்'' என்றான். மாணவர்கள் கிண்டலாக சிரித்தனர். ஆசிரியரும் அவனை கேலி செய்து உட்காரச் சொன்னார்.


சிறுவன் அன்று மாலை வீட்டிற்கு சோகமாக வந்து, பள்ளியில் நடந்ததை அம்மாவிடம் கூறினான். அம்மாவுக்கு மகன்மீது கோபம் வரவில்லை. அமைதியாக, ''நீ ஏன் குதிரை வண்டிக்காரர் ஆக ஆசைப்படுகிறாய்?'' என்று கேட்டார். ''தினமும் பள்ளிக்குச் செல்லும்போது குதிரை வண்டிக்காரர் அழகாக வண்டி ஓட்டுவதைப் பார்ப்பேன். எனக்கும் அதுபோல் குதிரை வண்டி ஓட்ட வேண்டும் என்று ஆசை. அதனால்தான் அப்படிக் கூறினேன்'' என்றான் சிறுவன். அம்மா பூஜையறைக்குச் சென்று, மகாபாரத ஓவியத்தை எடுத்து வந்தார். அதை மகனிடம் காட்டி, ''நீ குதிரை வண்டிக்காரர் ஆக வேண்டும் என்று சொன்னது தவறில்லை. ஆனால் நீ எப்படிப்பட்ட குதிரை வண்டி ஓட்டுபவராக இருக்க வேண்டும் தெரியுமா? மகாபாரதத்தில் அர்ஜுனனுக்கு தேர் ஓட்டினானே கிருஷ்ணன், அந்த பகவான் கிருஷ்ணர் போன்ற தேரோட்டியாக இருக்க வேண்டும்'' என்றார்.

நல்ல வழிகாட்டியைத் தேர்வு செய்வது எப்படி என அம்மாவிடம் கற்றுக்கொண்ட அந்த சிறுவன்தான், இந்தியாவின் பெருமையை உலகம் முழுக்க எடுத்துச் சென்ற சுவாமி விவேகானந்தர்.

நீங்கள் எந்தத் துறையில் இருந்தாலும், என்ன இலக்குகள் வைத்திருந்தாலும், உங்களுக்கு நல்ல வழிகாட்டி ஒருவர் அவசியம். நல்ல வழிகாட்டிகள் எப்படி இருப்பார்கள் தெரியுமா?



**நேர்மறை சிந்தனை:** எப்படிப்பட்ட பிரச்னையான சூழலிலும், நமக்கான வாய்ப்பைத் தேடும் நேர்மறை சிந்தனை ஒரு வழிகாட்டிக்கு வேண்டும். 'இதையெல்லாம் செய்து முடிப்பது சாத்தியமே இல்லை' என்று மற்றவர்கள் சொன்னாலும், அதைச் செய்வதற்கான வழிதேட வேண்டும். இப்படிப்பட்ட வழிகாட்டியைப் பின்பற்றினால், இந்த குணங்கள் நமக்கும் வரும். பிரச்னைகள் சூழ்ந்த இந்த உலகில், வாய்ப்புகளைத் தேடிக் கண்டறியும் பக்குவம் பெறுவோம்.



**நம்பிக்கை:** புதிய செயல்களை அச்சமின்றி செய்ய ஆரம்பிக்கும் நம்பிக்கை ஒரு வழிகாட்டிக்கு முக்கியம். ஒருவர் செய்யும் ஒவ்வொரு செயலிலும் இப்படி நம்பிக்கை வெளிப்படுவதைப் பார்க்க முடியும். நம்பிக்கை இல்லாதவர்கள், தங்கள் வழியில் வரும் பல வாய்ப்புகளைத் தவற விட்டுவிட்டு பிறகு புலம்பிக் கொண்டிருப்பார்கள். இவர்களைப் பின்பற்றக் காத்திருக்கும் யாருக்குமே நம்பிக்கை அளிக்க மாட்டார்கள்.

**கடின உழைப்பு:** வாழ்க்கை முழுக்க உழைத்து அடைய வேண்டிய நீண்டகால இலக்குகளை, பெரிய



கனவுகளை வைத்திருப்பவர்களே வழிகாட்டிகள். அவர்களிடம் மற்ற எல்லா குணங்களையும் விட முக்கியமாக கடின உழைப்பு இருக்க வேண்டும். உழைப்பு இல்லாதவர்கள் உயரங்களைத் தொடுவதில்லை. தன்னைச் சுற்றியிருப்பவர்கள் எல்லோரையும்விட கடினமாக உழைப்பவரே வழிகாட்டி ஆகும் தகுதியைப் பெறுகிறார்.



**தனித்தன்மை:** ஒருவரை மற்றவர்களிடமிருந்து பிரித்து வித்தியாசமாக அடையாளம் காட்டுவது அவரின் தனித்தன்மையே! ஒருவர் எந்தத் துறையில் இருந்தாலும், மற்றவர்களைப் போல இல்லாமல் வித்தியாசமாக சிந்தித்தால் அவர் வெற்றிச் சிகரத்தைத் தொடுவார். இப்படி வித்தியாச சிந்தனை தோன்றுவதற்கு அவரின் தனித்தன்மையே காரணமாக இருக்கும். தனித்தன்மை உள்ள ஒருவரை வழிகாட்டியாக அடையுங்கள். உங்களுக்குள் ஒரு தனித்தன்மையை வளர்த்தெடுங்கள்.



**தொடர்பில் இருப்பது:** சிலர் மிகப்பெரிய வெற்றியை அடைந்திருப்பார்கள். ஆனால், தங்களது பாதை, பயணம், வெற்றி சூத்திரம் என எதைப் பற்றியும் பேச மாட்டார்கள். அடுத்த தலைமுறைக்கு ஆலோசனை சொல்வதையும் தவிர்ப்பார்கள். சமூகத்திலிருந்து ஒதுங்கியே இருப்பார்கள். அவர்களும் வழிகாட்டிகள்தான் என்றாலும், அவர்களிடமிருந்து எதையும் கற்றுக்கொள்வது கடினம். அதே துறையில் அவர்களைப் போல ஜெயித்த, அதேபோன்ற திறமைசாலிகள் வேறு யாராவது வெளிப்படையாக பேசக்கூடியவராக இருப்பார். தொடர்பில் இருக்க முடிகிற இப்படிப்பட்ட வழிகாட்டிகளைத் தேர்வு செய்யுங்கள்.



**மரியாதை கொடுப்பது:** உயர்ந்தவர், தாழ்ந்தவர் என்ற வித்தியாசம் பார்க்காமல் எல்லோருக்கும் மரியாதை கொடுக்க வேண்டும். ஒவ்வொருவர் சொல்லும் கருத்தையும் மதிக்க வேண்டும். சிறியதோ, பெரியதோ, ஒவ்வொருவருக்கும் ஒரு கனவு இருக்கும். அதற்கு மதிப்பு கொடுக்க வேண்டும். யாரையும், எந்தக் கருத்தையும் அலட்சியம் செய்யாமல் அக்கறையுடன் துணை நிற்பதே ஒரு வழிகாட்டிக்கு அழகு. இப்படிப்பட்ட ஒருவரிடம் மரியாதையைக் கற்கலாம்.



**அறிவு:** ஒரு துறையில் நீங்கள் சாதிக்க நினைக்கிறீர்கள். ஆனால், அதுபற்றி ஒன்றுமே தெரியாத வேறு ஒருவரை வழிகாட்டியாகக் கருதுகிறீர்கள். என்ன ஆகும் தெரியுமா? நீங்கள் பெரிய பிரச்னை ஒன்றில் சிக்கித் தவிக்கும்போது, அவர் தன் அறிவாலும் அனுபவத்தாலும் உங்களுக்கு வழிகாட்ட முடியாது. அவர்களின் அனுபவங்களோ, வாழ்க்கைமுறையோ உங்களுக்குப் பயன்படாது. நீங்கள் வெற்றிபெற விரும்பும் ஒரு துறையில் பழுத்த அனுபவமும் பரிபூரண அறிவும் பெற்றுள்ள ஒருவரை வழிகாட்டியாக அடையுங்கள். உங்களுக்கு எந்த இழப்பும் ஏற்படாமல் அவர் பார்த்துக்கொள்வார்.



**முழுமையான பண்பு:** நான்கைந்து சிறந்த பண்புகளும், நிறைய பலவீனங்களும் கொண்ட ஒருவர் வழிகாட்டியாக இருக்க முடியாது. 'அதிகாலை முதல் நள்ளிரவு வரை உழைத்துக்கொண்டே இருப்பார், ஓய்வே எடுக்க மாட்டார்' என்பது நற்சான்று அல்ல! அவர் தன் உடலைக் கெடுத்துக்கொள்வதாகவே அர்த்தம். மிகச் சிறந்த ஆளுமைகள்கூட போதைகளுக்கு அடிமை ஆன கதைகள் உண்டு. இப்படிப்பட்டவர்களை வழிகாட்டிகளாக ஏற்பது, ''அவரே செய்திருக்கிறார். நாம் செய்தால் தப்பா'' என தவறான வழியில் செல்லத் தூண்டிவிடும்.



**கருணை:** எல்லா நல்ல குணங்களும் திறமைகளும் நிறைந்த ஒருவர், இரக்கமற்றவராக இருந்தால் அது ஆபத்து. வேலை, தொழில், வியாபாரம், வாழ்க்கை என எந்தச் சூழலிலும் எல்லோரையும் கருணையுடன் நடத்த வேண்டும். நமக்கு மேலே இருப்பவரிடம் கருணை காட்டுவது பெரிதில்லை; கீழே இருப்பவரிடமும் அதேபோல் நடக்க வேண்டும். ஒவ்வொருவரின் சூழலையும் புரிந்துகொண்டு அணுகும் கருணை மனிதர்களே மிகச்சிறந்த வழிகாட்டிகள். ●





# ஐந்து வகை வழிகாட்டிகள்!

**நாம் வாங்க விரும்பும் எல்லாமே, ஒரே கடையில் கிடைப்பதில்லை. பல கடைகளில் ஏறி இறங்க வேண்டும். அதேபோல, நமக்குத் தேவையான அனைத்து வழிகாட்டுதல்களையும் ஒரே ஒரு வழிகாட்டியால் முழுமையாகத் தந்துவிட முடியாது. 'நம்மைக் கைதூக்கிவிட்டு அழைத்துச் செல்ல நிறைய பேர் இருக்கிறார்கள்' என்ற நம்பிக்கை எவரையும் ஜெயிக்க வைக்கும். அப்படி வாழ்க்கையில் ஒவ்வொருவருக்கும் ஐந்துவிதமான வழிகாட்டிகள் அவசியம். அந்த ஐந்து பேர் யார் தெரியுமா?**

**1. ஒரு நிபுணர்:** வேலை, தொழில், பிசினஸ், வியாபாரம் என நீங்கள் எந்தத் துறையில் சாதிக்க நினைக்கிறீர்களோ, அதில் மிகச் சிறந்த வெற்றியாளர் யார் என்று பாருங்கள். அவர் முதல் வழிகாட்டி. இத்தனை ஆண்டுகள் அந்தத் துறையில் தன் அறிவாலும் அனுபவத்தாலும் பெற்ற திறனை உங்களுக்கு அவர் பகிர்வார். நேரடி அறிமுகம் கிடைத்தால் சிறப்பு. அல்லது வேறு வழிகளில் அவரின் அனுபவங்களைப் பெற முடிந்தால்கூட போதுமானது. உங்கள் பலம் எது என அறிந்துகொண்டு செயல்பட அவர் உதவுவார்.

**2. உங்கள் ஆதரவாளர்:** உங்கள் திறமையைப் பற்றி பலரிடம் பெருமையாகப் பேசும் அன்பு நண்பர் அல்லது உறவினர் ஒருவர் இருப்பார். உங்களைத் தட்டிக் கொடுப்பதோடு நிற்காமல், பலரின் அறிமுகத்தையும் உங்களுக்குக் கொடுத்து, உங்கள் வளர்ச்சிக்கு உதவுவார்.

**3. சக பயணி:** அலுவலகத்தில் உங்களுடன் இணைந்து பணியாற்றும் ஒருவர், வியாபாரம் அல்லது தொழிலில் உங்களைப் போலவே வளரத் துடிக்கும் ஒருவர், உங்களின் மிகச்சிறந்த நண்பராக இருப்பார். அவரே உங்களுக்கு மூன்றாவது வழிகாட்டி. இருவரும் அனுபவங்களைப் பகிர்ந்துகொண்டு, ஒருவரை இன்னொருவர் மெருகேற்றலாம். உங்களுக்கு அவர் வழிகாட்டியாக இருப்பது போலவே, நீங்களும் அவருக்கு வழிகாட்டியாக மாறுவது அவசியம்.

**4. நம்பிக்கை மனிதர்:** இவர் உங்கள் துறையில் இல்லாமல் இருக்கலாம். அதுபற்றி எதுவுமே தெரியாதவராக இருக்கலாம். ஆனால், உங்களை முழுவதுமாக அறிந்திருப்பார். உங்களின் அக்கறை ஆலோசகராக இருப்பார். உங்கள் இன்ப துன்பங்களை இவருடன் பகிர்ந்து கொள்வீர்கள். இருள் சூழ்ந்த கடினமான தருணங்களைக் கடந்துவர வழிகாட்டும் ஒளியாக இவர் இருப்பார். ஆறுதலாகப் பேசி நம்பிக்கையைக் கொடுப்பார். எது முக்கியம் என உணர்ந்து, வாழ்வில் முன்னேறுவதற்கு இவரின் ஆலோசனைகள் உதவும்.

**5. பின்னால் வருபவர்:** 'வழிகாட்டி' என்றதுமே, நம்மைவிட அனுபவசாலிகளோ, அல்லது மூத்தோர்களோதான் நினைவுக்கு வருவார்கள். ஆனால், நமக்குப் பின்னால் அதே துறைக்கு வரும் அடுத்த தலைமுறை இளைஞர்கள்கூட நமக்கு வழிகாட்டலாம். அவர்களுக்கு நம்மைவிட அனுபவம் குறைவாக இருக்கலாம். சொல்லப் போனால், அவர்கள் நம்மை வழிகாட்டிகளாக நினைப்பார்கள். அடிக்கடி உரையாடுவார்கள். அவர்களின் அனுபவங்கள் வேறாக இருக்கும். பிரச்னைகளுக்கு அவர்கள் கண்டறிந்த தீர்வுகள் வித்தியாசமாக இருக்கும். அதிலிருந்தும் நாம் கற்றுக்கொள்ளலாம். ●



RAMRAJ
LittleStars
CULTURE CLUB
KIDS MATCHING DHOTI & SHIRT



Feel chill in Summer
மதிப்பிற்குரியவர்களுக்கு...
RAMRAJ
காட்டன்
வேட்டிகள்
சர்ட்டுகள்
பனியன்கள்
கம்பெனி ஷோரூம் & முன்னணி ஜவுளி நிறுவனங்களிலும் கிடைக்கும்
Follow us RamrajCottonofficial ramrajcotton ramrajcottonmedia



RAMRAJ
VESHTI + T-SHIRT
COMBO PACK
₹ 895/-
வேட்டியின்
வெண்மை
T-Shirt -ன்
மென்மை
மதிப்பு மிக்க உங்கள் குடும்ப
நேரத்திற்கென,
ராம்ராஜ் வழங்குகிறது...!
வேட்டியுடன் T-சர்ட்
காம்போ பேக்
இனி வீட்டிலும்
Veshtee™
VESHTI
+
T-SHIRT
COMBO PACK
from the house of
RAMRAJ
UNIBRO®
கம்பெனி ஷோரூம் & முன்னணி ஜவுளி நிறுவனங்களிலும் கிடைக்கும்
shop online @ www.ramrajcotton.in


RAMRAJ
தெய்வீக
அம்சங்கள் நிறைந்த
ராம்ராஜ்
பஞ்சகச்ச வேட்டிகள்
Srimad Bhagavad Gita Bhasya
RAMRAJ
ACHARYA
பஞ்சகச்ச வேட்டிகள்
9+5, 10+6 ரெடிமேடாகவும் கிடைக்கும்.



# அவரே ரோல் மாடல்!

**“எனக்கு வழிகாட்ட யாருமே இல்லை. நான் சுயம்புவாக முளைத்து மேலே வந்தவன்'' என்று சொல்பவர்கள்கூட, தங்களை அறியாமலேயே யார் யாரையோ பின்பற்றி மேலே வந்திருப்பார்கள். அப்படி தினசரி வாழ்க்கையில் நாம் சந்திக்கும் பலரிடமும், நமக்கு ரோல் மாடலாக வழிகாட்டும் குணங்கள் இருக்கும். அவர்கள் எப்படி இருப்பார்கள் தெரியுமா?**

- செய்வது சின்ன வேலையோ, பெரிய வேலையோ, எதையும் ஒரே மாதிரி முழுமையாகச் செய்வார்கள்.
- எந்த சூழலிலும் தன் பொறுப்பிலிருந்து பின்வாங்காமல், முழுமனதுடன் பணியைச் செய்து முடிப்பார்கள்.
- எவ்வளவு பெரிய வெற்றியை அடைந்தாலும், பணிவாகவே நடந்துகொள்வார்கள்.
- தங்கள் பலவீனங்கள் எதுவும் வெற்றியை அடைவதற்குத் தடையாக குறுக்கே வந்துவிடக்கூடாது என்பதில் தெளிவாக இருப்பார்கள்.
- கஷ்டங்களும் நெருக்கடிகளும் பிரச்னைகளும் தங்களைச் சூழ்ந்தால்கூட, நம்பிக்கையுடன் நல்ல விஷயங்களையே பேசுவார்கள்.
- ஏமாற்றங்களையும் துரோகங்களையும் சந்தித்தாலும், நேர்மையைத் தொலைக்காமல் இருப்பார்கள்.
- கிடைத்தது கொஞ்சமே என்றாலும், அதில் நிறைவும் திருப்தியும் அடைவார்கள்.
- தனக்காக எதையும் செய்துகொள்வதற்கு முன்பாக, ‘இதில் அடுத்தவர்களுக்கு ஏதும் பாதிப்பு வந்துவிடாதே’ என அக்கறை காட்டுவார்கள்.
- நண்பர்கள் மற்றும் உறவினர்களுடன் இணைந்திருப்பதில் மகிழ்ச்சியும் நிம்மதியும் அடைவார்கள்.
- அடுத்தவர்களின் நேரத்தை வீணடிக்க மாட்டார்கள். யாருடைய பொறுமையையும் சோதிக்க மாட்டார்கள்.
- ஒவ்வொரு சின்ன உதவியையும் நன்றியுடன் எப்போதும் நினைத்துப் பார்ப்பார்கள்.
- ஒரு வெற்றியை அடைந்ததும், தங்களைப் போல அடுத்தவர்களுக்கும் அந்த வாய்ப்பு கிடைக்க வேண்டும் என ஆசைப்படுவார்கள்.
- வாழ்க்கையில் எந்த உயரத்தை அடைந்தாலும், சமூகம் பெரிதும் மரியாதை கொடுத்தாலும், இயல்பும் எளிமையுமாக எப்போதும் இருப்பார்கள்.
- அடுத்தவர்களுக்கும் சமூகத்துக்கும் சேவை செய்வதற்கான வாய்ப்புகளை உருவாக்கிக்கொண்டு உதவி செய்வார்கள்.

இப்படிப்பட்ட மனிதர்களை எங்கு பார்த்தாலும், அவர்களை வழிகாட்டிகளாக ஏற்றுக்கொள்ளுங்கள். அவர்களின் வாழ்க்கை, இயல்பு, சூழல், தகுதி, செயல்பாடு எல்லாமே உங்களுக்கு நல்வழி காட்டும். ●

# வழிகாட்டும் மொழிகள்

உங்கள்
வாழ்க்கையை நீங்கள்
மட்டுமே மாற்ற முடியும்.
உங்களுக்காக இதை
வேறு யாரோ வந்து
செய்யமாட்டார்கள்.

எங்கிருக்கிறீர்களோ
அங்கிருந்து
ஆரம்பியுங்கள். என்ன
இருக்கிறதோ, அதை
வைத்து ஆரம்பியுங்கள்.
உங்களால் என்ன
முடிகிறதோ, அதைச்
செய்யுங்கள்.

இன்று நீங்கள்
செய்யும் எல்லாமே,
உங்களின்
நாளைய தினத்தை
நல்லதாக்கும்.

நீங்கள் செய்ய
விரும்புவதை
செய்யும் இடத்துக்குப்
போகும்வரை,
உங்களால் செய்ய
முடிந்த செயல்களைச்
செய்யுங்கள்.

கரையில் நின்று
தண்ணீரையே
பார்த்துக்
கொண்டிருந்தால்,
கடலைக் கடந்து
சென்றுவிட
முடியாது.

வாழ்க்கை
என்பது
அழிரப்பரே
இல்லாமல்
படம் வரையக்
கற்றுக்கொள்ளும்
கலை.

உங்கள் திறமை,
கடவுள் உங்களுக்குக்
கொடுத்த பரிசு.
அந்தத் திறமையை
வைத்து நீங்கள்
செய்யும் செயல்களே,
கடவுளுக்கு நீங்கள்
திருப்பித் தரும்
நன்றிக்கடன்.

ஒன்று பாதையைக்
கண்டறியுங்கள்.
அல்லது
உங்களுக்கான
பாதையை நீங்களே
உருவாக்குங்கள்.

தோல்வி
ஏற்படுவது
அடுத்த செயலைக்
கவனமாகச் செய்
என்பதற்கான
எச்சரிக்கை.

யார் சொல்வது
சரி என்பதல்ல,
எது சரி என்பதே
முக்கியம்.

உண்மை எங்கே
இழுத்துச் சென்றாலும்
அஞ்ச வேண்டாம்.
அதையே துணிச்சலுடன்
பின்பற்றுங்கள்.
ஒருபோதும் கோழையாக
இருக்காதீர்கள்.

உன்னதமான முடிவுகள்
எடுக்கவும், உங்களை
யாரென உணர்த்தவும்,
முதலில் நீங்கள்
யாரென நீங்கள்
அறிவது முக்கியம்.

எதுவுமே தானாக
நிகழ்வதில்லை.
நாம்தான்
அதை நிகழ்த்த
வேண்டும்.

உங்களிடம்
இல்லாத தகுதிகள்
இருப்பதாக நம்பவோ,
நம்ப வைக்கவோ
முயலாதீர்கள்.

செய்வதற்கு
எப்போதும்
ஏதாவது வேலை
இருக்கவேண்டும்;
அப்போதுதான்
முன்னேற முடியும்.

பிறரைச்
சீர்திருத்தும்
முயற்சியை
விட, தன்னை
சீர்திருத்திக்
கொள்வதே முதல்
கடமை.

வாழ்க்கை
என்பது சைக்கிள்
ஓட்டுவதைப் போல மிக
எளிமையானது. சமநிலை
தவறி தடுமாறாமல்
இருக்க வேண்டுமானால்,
மிதித்து முன்னேறிப்
போய்க்கொண்டே
இருங்கள்.

‘உங்கள் வாழ்வின்
மிகச் சிறந்த
மாற்றம் இனிதான்
நிகழப் போகிறது’
என எப்போதும்
நினையுங்கள்.

# வழிகாட்டும் மொழிகள்

உங்கள் சூழ்நிலை உங்களைத் தீர்மானிக்க அனுமதிக்காதீர்கள். உங்கள் முடிவுகளே உங்களைத் தீர்மானிக்கட்டும்.

உங்களைச் சுற்றி நடப்பது எதுவுமே பிடிக்கவில்லை என்றால், அதையெல்லாம் மாற்ற முயற்சியுங்கள். சும்மா இருப்பதற்கு நீங்கள் மரமல்ல.

நாம் பேசுவது விதைப்பதற்குச் சமம். கேட்பதோ அறுவடைக்குச் சமம்.

வாழ்க்கை என்பது ஒரு கண்ணாடி போன்றது. நீங்கள் என்ன நினைக்கிறீர்களோ, அதுவே நிஜத்தில் நிகழும்.

நம் வாழ்வில் இரண்டு நாட்கள் மகத்தானவை. ஒன்று, நாம் பிறந்த நாள். இன்னொன்று, ‘நாம் ஏன் பிறந்தோம்’ என உணரும் நாள்.

புதிய விஷயங்களை உன்னிப்பாகக் கவனியுங்கள். கற்றுக்கொள்ளும் சந்தர்ப்பங்கள் குறைவாகவே கிடைக்கும்.



தவறுகள் செய்தால் தயங்காமல் ஒப்புக்கொள்ளுங்கள். அது உங்களை ஒருபோதும் தாழ்த்திவிடாது.

மகிழ்ச்சி என்ற உணர்ச்சி இல்லாவிட்டால் வாழ்க்கை சுமக்க முடியாத பெரிய சுமையாகிவிடும்.

உங்களால் ஒரு விஷயத்தைக் கனவு காண முடிந்தால், உங்களால் அதைச் செய்யவும் முடியும் என அர்த்தம்.

குறிக்கோள் இல்லாத வாழ்க்கை, கடிவாளம் இல்லாத குதிரை போன்றது.

எல்லாவற்றையும் செவி சாய்த்துக் கேளுங்கள். ஆனால், உங்களுக்கு எது நல்லதென்று தோன்றுகிறதோ, அதை மட்டும் உறுதியாகப் பிடித்துக் கொள்ளுங்கள்.

வாழ்வில் நான் கற்றுக்கொண்ட எல்லாவற்றையும் மூன்றே வார்த்தைகளில் அடக்கிவிடலாம், ‘இதுவும் கடந்து போகும்’!



## வழிகாட்டியாக மாறுங்கள்

# பெண்களே!

**பெண்கள் 30 வயதைத் தாண்டி திருமணம், குழந்தைப்பேறு என முழுமை அடையும்போது, அடுத்த தலைமுறைக்கு ரோல் மாடலாக மாறும் இடத்தில் இருக்கிறார்கள். தங்கள் குழந்தைகளின் ஆரோக்கியமான வாழ்க்கைக்கு முன்மாதிரியாக இருக்க, 30 வயதில் பெண்கள் சில விஷயங்களைக் கட்டாயம் செய்ய வேண்டியுள்ளது.**

◆ ஏதேனும் ஓர் உடற்பயிற்சியைக் கட்டாயம் செய்யுங்கள். அது உடல் எடையை ஆரோக்கியமாகப் பராமரிக்க உதவுகிறது. உங்களை சுறுசுறுப்பாக வைத்திருக்கிறது. நிம்மதியான தூக்கத்துக்கு உத்தரவாதம் தருகிறது. அதனால் உடற்பயிற்சி செய்யுங்கள்.

◆ உடற்பயிற்சி போலவே உடல் உழைப்பும் அவசியம். மணிக்கணக்கில் உட்கார்ந்தபடியே இருக்காமல், ஓடியாடி வேலை செய்யுங்கள். வீட்டுக்குள்ளும் வெளியிலும் இப்படி ஓடியாடி உழைக்கும்போது, உடல் நெகிழ்வுத்தன்மை பெறுகிறது.

◆ போதுமான தண்ணீர் குடியுங்கள். இது உடலின் சுத்திகரிக்கும் பணிக்கு உதவுகிறது. சருமத்தை ஆரோக்கியமாக வைக்கிறது.

◆ குடும்பத்துக்கு ஏதேனும் ஒரு மருத்துவக் காப்பீடு செய்துகொள்ளுங்கள். இளம் வயதிலேயே இதைச் செய்துகொள்வது எதிர்காலத்துக்கு உதவும். நோய்கள் வந்தபிறகு செலவுக்கு வழிதேடும் துன்பத்துக்கு பதிலாக, எதையும் துணிச்சலாக எதிர்கொள்ளும் மனதை இது கொடுக்கும்.

◆ உங்கள் பெற்றோரிடம் பேசி, குடும்பத்தின் உடல்நல வரலாற்றை அறியுங்கள். இதய நோய், சர்க்கரை நோய் போன்ற சில நோய்கள் பரம்பரை வழியே குழந்தைகளுக்கும் வருகின்றன. இதேபோல மாமனார், மாமியாரிடம் பேசி, அவர்களின் குடும்ப நோய்கள் பற்றியும் அறியுங்கள். குழந்தைகளை எச்சரிக்கையுடன் வளர்க்க இது உதவும்.

◆ ஆரோக்கியமான உணவுகளை சமைக்கக் கற்றுக்கொள்ளுங்கள். குடும்பத்தில் எல்லோரின் ஆரோக்கியத்தையும் காக்கும் மையமாக சமையலறையே திகழ்கிறது. அதில் ஊட்டச்சத்துள்ள உணவுகள் மட்டுமே சமைக்கப்படுவதை உறுதி செய்யுங்கள்.

◆ உடலுக்கு ஊட்டச்சத்து கிடைப்பதற்காக சத்து பானங்கள் வாங்கி குடிப்பது, சத்து மாத்திரைகள் சாப்பிடுவது ஆகியவற்றை முடிந்தவரை தவிர்த்துவிடுங்கள். உங்கள் உடலுக்குத் தேவையான அத்தனை சத்துகளும் உணவிலிருந்தே கிடைக்கட்டும். இந்தப் பழக்கம்தான் உங்கள் குழந்தைகளை ஆரோக்கியமாக வளர்க்க உதவும்.

◆ ஆண்டுக்கு ஒருமுறையாவது மகளிர்நல மருத்துவரை சந்தித்து முழு உடல் பரிசோதனை செய்துகொள்ளுங்கள். அவ்வப்போது உடல் உணர்த்தும் அறிகுறிகளை அலட்சியம் செய்யாதீர்கள். தொடர்புடைய ஸ்பெஷலிஸ்ட் டாக்டரின் மருத்துவ ஆலோசனையைப் பெறத் தயங்காதீர்கள். வாழ்வில் எல்லாவற்றையும்விட உடல்நலன் முக்கியம்.



◆ பெண்களுக்கு இதயக்கோளாறுகள் வராது என்ற நம்பிக்கை பரவலாக இருக்கிறது. அதனால் தங்கள் இதயநலனை பெண்கள் அலட்சியம் செய்கிறார்கள். இது தவறு. இதயத்துக்குக் கேடு விளைவிக்கும் அத்தனை பழக்கங்களையும் தவிர்த்துவிடுங்கள்.

◆ இன்றைய நவீன உலகில் வேதிப்பொருட்களைத் தவிர்த்துவிட்டு வாழ முடியாது. ஆனால், அவை நம் உணவில் கலக்காமல் பார்த்துக்கொள்வது அவசியம். முடிந்தவரை கவனத்துடன் இதைச் செய்யுங்கள்.

◆ வீட்டில் எல்லோருக்கும் முறையாக தடுப்பு மருந்துகள் போட்டுக்கொள்ள மறக்காதீர்கள். குழந்தைகளுக்கு தடுப்பூசிகள் உள்ளது போலவே பெரியவர்களுக்கும் உண்டு. முறைப்படி இந்த மருத்துவப் பாதுகாப்பை உங்கள் குடும்பத்துக்குக் கொடுங்கள்.

◆ குழந்தைகளுக்கோ, உங்களுக்கோ உடல்நலமில்லாமல் போகும்போது முறையான சிகிச்சை எடுத்துக்கொள்ளுங்கள். பழைய மருந்துச் சீட்டுகளை எடுத்துப்பார்த்து, நீங்களே டாக்டராக மாறி மாத்திரை கொடுக்காதீர்கள். சுய மருத்துவம் ஆபத்தானது. அதேபோல, 'இதெல்லாம் தானா சரியாகிடும்' என அலட்சியமும் செய்யாதீர்கள். எது ஆபத்தான அறிகுறி, எது அலட்சியம் செய்ய வேண்டிய அறிகுறி என்பதைத் தீர்மானிக்கும் உரிமை டாக்டருக்கே உள்ளது.



◆ உடல்நலமில்லாத நேரங்களில் சிகிச்சை போலவே, போதுமான ஓய்வும் முக்கியம். அந்த ஓய்வை உடலுக்குக் கண்டிப்பாகக் கொடுங்கள்.

◆ உங்களுக்கு எது பொருத்தமான கருத்தடை முறை என்பதை உங்கள் டாக்டரிடம் கேட்டுத் தெரிந்துகொண்டு அதைப் பின்பற்றுங்கள்.

◆ எதைச் செய்தாலும் மனப்பூர்வமாகச் செய்யுங்கள். உங்கள் உடல் ஓரிடத்திலும், மனம் இன்னொரு இடத்திலும் இருக்கக்கூடாது. அது உடல்நலனைக் கெடுக்கும். ஏதோ நினைப்பில் சோபாவில் உட்கார்ந்தபடி சிப்ஸ் சாப்பிட ஆரம்பித்தால், 'என்ன செய்கிறோம்' என்பதை நீங்கள் உணர்வதற்குள் ஒரு பாக்கெட் காலியாகி இருக்கும்.

◆ டயட் இருக்கலாம்தான். ஆனால், அதற்காக எல்லையில் இருக்கும் ராணுவ வீரர் போல கடுமையான கண்காணிப்புடன் இருக்க வேண்டிய அவசியம் தேவையில்லை. அவ்வப்போது ஆசைப்படும் தருணங்களில் கொஞ்சமாக நொறுக்குத்தீனி சாப்பிடுவது தப்பில்லை. ஆனால், அளவு மீறக்கூடாது.


◆ தினமும் நீங்கள் டி.வி பார்க்கும் நேரம், உட்கார்ந்தபடி செல்போனில் செலவிடும் நேரம் எவ்வளவு என கணக்கிடுங்கள். உடலுக்கு எந்த இயக்கமும் கொடுக்காமல் இப்படி நீண்ட நேரம் அமர்வதை இயன்றவரை தவிர்த்துவிடுங்கள்.

◆ பசுமையான சூழலைப் பார்த்தபடி வாக்கிங் போவதும், இனிமையான காட்சிகளைப் பார்ப்பதும், பறவைகளின் குரலைக் கேட்பதும் மனதுக்கு மகிழ்ச்சி தரும். கூடவே உடலில் காலை அல்லது மாலைநேர வெயில் படும்படி நடப்பது உடலுக்கும் நல்லது.

◆ உடலுக்கு உழைப்பு எவ்வளவு முக்கியமோ, அதே அளவுக்கு ஓய்வும் அவசியம். தினமும் ஏழு மணி நேரமாவது தூங்குவதை உறுதி செய்யுங்கள். இன்று இரவு நல்ல உறக்கம் இல்லையென்றால், நாளை பகலில் உங்களால் முழு ஈடுபாட்டுடன் உழைக்க முடியாது.

◆ உடல் ஆரோக்கியம் போலவே மன ஆரோக்கியமும் முக்கியம். குடும்ப விஷயங்களுக்காக கணவருடன் வாக்குவாதங்கள் செய்வதைவிட, அவர் என்ன செய்ய வேண்டும் என்பதை அவருக்குப் புரிகிற விதத்தில் சொல்லிவிடலாம். வீட்டில் வீண் சச்சரவுகள் எழுந்தால், அதனால் இருவரின் மனநலனும் உடல்நலனும் பாதிக்கப்படுகிறது.

◆ மன இறுக்கத்தைத் தவிர்க்க உதவும் மிக முக்கியமான மருந்து, அன்பு. நெருக்கமான நட்பு வட்டத்தில் இருக்கும் தோழிகளுடன் அவ்வப்போது பேசுங்கள். நேரில் சந்தித்துக்கொள்ள வாய்ப்பு இல்லாவிட்டாலும், போனிலாவது பேசுங்கள். மனம்விட்டு இப்படி உரையாடுவது உங்களை உற்சாகமாக வைத்திருக்கும். ●





# பூக்களே நம் வழிகாட்டிகள்!

வாழ்க்கைப் பாடங்களை எங்கிருந்தும் படிக்கலாம். சமூகம், முன்னோர்கள், உறவுகள், நட்புகள் என யாரிடமிருந்தும் அனுபவப் பாடங்களைக் கற்றுக்கொள்ளலாம்; வாழ்க்கைச்சூழல், பணிபுரியும் இடம், புத்தகங்கள் என எங்கிருந்தும் நல்ல விஷயங்களை எடுத்துக்கொள்ளலாம்.

'சமூகத்தோடு இணைந்து வாழ வேண்டும், மற்றவர்கள்மீது அன்பு காட்ட வேண்டும், வாழ்வில் எதிலும் சமநிலை தவறக்கூடாது' போன்ற எளிமையான வாழ்க்கை விதிகளைக் கற்றுத் தருவதற்கு இயற்கையின் மடியில் நமக்கான ஆசான்கள் ஏராளமாக இருக்கிறார்கள். பூக்களை உற்றுக் கவனித்தால், நமக்கு மதிப்புமிக்க பாடங்கள் ஏராளமாகக் கிடைக்கும்.



✽ சூரியனை நோக்கியே மலர்ந்திருக்கும் பூக்கள், 'வாழ்க்கையில் நல்ல விஷயங்களை நோக்கியே நம் கவனம் இருக்க வேண்டும்' என்ற பாடத்தைக் கற்றுக்கொடுக்கின்றன. சூரியனின் ஒளி இல்லாவிட்டால் தாவரங்களே இல்லை; அந்த ஒளிதான் பெரும்பாலான பூக்களை மலரச் செய்கிறது. 'தங்கள் வாழ்க்கையே இந்த வெளிச்சம்தான்' என்பதை உணர்ந்திருக்கும் பூக்கள், அதன்மீதே கவனம் செலுத்துகின்றன.

நாமும் இப்படித்தான் இருக்க வேண்டும். மனிதர்களுக்கு ஒளி என்பது வெளிச்சமோ, சூரியனோ இல்லை. நம் வாழ்க்கைக்கு அவசியமான விஷயங்கள்... மகிழ்ச்சி, கனிவு, இரக்கம், பெருந்தன்மை, அறம், நல்ல எண்ணங்கள் போன்றவையே! இந்த நற்பண்புகளின்மீதே நம் கவனம் குவிந்திருக்க வேண்டும். வாழ்வு பல சூழல்களில் கடினமானதாக இருக்கலாம். ஏமாற்றத்தின் இருள் நம்மை மூழ்கடிக்க வரலாம். 'இனி நம் வாழ்வில் வெளிச்சமே கிடையாதோ'என மன அழுத்தம் தாக்கலாம். 'நாளை விடியும், சூரிய வெளிச்சம் நமக்குக் கிடைக்கும்' என பூக்கள் நம்புவது போல, மனிதர்களுக்கும் வாழ்வுமீது நம்பிக்கை வேண்டும்.

✽ உணர்வுகள் எல்லாமே தொற்றுநோய் போன்றவை. நம்மைச் சுற்றி இருப்பவர்கள் சோகத்தில் இருந்தால், காரணமே இல்லாமல் நம்மையும் சோகம் தாக்கும். நம்மைச் சுற்றி உள்ளவர்கள் மகிழ்ச்சியாகவும் நேர்மறை சிந்தனைகளோடும் இருந்தால், நாமும் அப்படியே

இருப்போம். மலர்ந்திருக்கும் பூக்கள் தங்களைச் சுற்றி நறுமணத்தைப் பரப்புவது போல நாமும் மகிழ்ச்சியையும் நேர்மறை எண்ணங்களையும் எல்லோருக்கும் பரப்ப வேண்டும் என்பதைப் பூக்களிடம் கற்றுக்கொள்வோம்.



* மொட்டாக உருவாகி, வளர்ந்து, முழுமை பெற்று, ஒரு இனிய நாளில் பூக்கள் மலர்வதற்கு எப்போதும் கதகதப்பு தேவை. குளிரிலும், பனியிலும், மழையிலும் நனைந்திருக்கும்போது அவை முழுமையாக மலர்வதில்லை. சூரியனின் வெம்மை போதுமான அளவுக்குக் கிடைத்தால்தான் அவை முழு அளவில் மலர்ந்து மகிழ்விக்கின்றன. மனிதர்களுக்கும் இதுபோல கதகதப்பு தேவைப்படுகிறது. பிறந்தது முதல் பெற்றோர் காட்டும் அன்பும் அக்கறையும், அவர்களின் அரவணைப்புமே இதைத் தருகிறது. வளர்ந்தபிறகு நட்புகளும் உறவுகளும் சமூகமும் இதைத் தருகிறது. ஆரோக்கியமாகவும் மகிழ்ச்சியாகவும் வாழ்வதற்கு ஒவ்வொருவருக்கும் இது தேவை. பூக்கள் இதை உணர்த்துகின்றன. நாம் மற்றவர்களிடமிருந்து பெறுவதைப் போல இதையெல்லாம் தரவும் வேண்டும் என்பதையும் பூக்களிடம் கற்றுக்கொள்ளலாம்.

* ரோஜா பல வண்ணங்களைக் காட்டுவதைப் பார்த்து மல்லிகைப்பூ வருந்துவதில்லை. 'சாமந்திகூட பூஜையில் இடம்பிடித்துவிட்டது. நமக்கு அந்த வாய்ப்பு இல்லையே' என வாடாமல்லி ஏங்குவதில்லை. 'நம்மை யாரும் பார்ப்பதில்லையே, நாம் ஏன் பூக்க வேண்டும்' என காட்டுப்பூக்கள் நினைப்பதில்லை. தங்களின் இயல்புகள் குறித்த எந்தத் தாழ்வு மனப்பான்மையும் பூக்களுக்கு இல்லை. மலர்ந்து மணம் வீசுவது அவற்றின் இயல்பு; அதில் எந்தக் குறையும் வைக்காமல் செய்கின்றன. ஒவ்வொருவரும் தங்களுக்குக் கிடைத்திருக்கும் வாழ்வில் நிறைவடைந்து, தங்கள் தனித்தன்மைகளில் பெருமை கொண்டு, ஆரோக்கியமாகவும் மகிழ்ச்சியாகவும் வாழ வேண்டும் என்பதைப் பூக்கள் கற்றுத் தருகின்றன.



உள்ளுக்குள் இருக்கும் பயம், பலவீனம், சந்தேகம் என எல்லாவற்றையும் தொலைத்துவிட்டு, நம்மிடம் இருக்கும் நல்ல விஷயங்களை உலகத்துக்குக் காட்ட வேண்டும் என்பதைப் பூக்கள் பாடமாகச் சொல்கின்றன.

* எத்தனை நாள் ஆயுள் என்பதைப் பற்றி பூக்கள் கவலைப்படுவதில்லை. சில நிமிடங்களில் வாடிப் போனாலும், சில நாட்கள் மட்டுமே நீடித்திருக்க முடியும் என்றாலும், அதற்காக தங்களின் மலர்ச்சியில் எந்தக் குறையையும் பூக்கள் வைப்பதில்லை. அவை தங்கள் இலக்கை எட்டியபிறகே, காம்பிலிருந்து உதிர்கின்றன. வாழ்வில் கனவுகள், லட்சியங்கள், இலக்குகள் என நாம் நிர்ணயித்துக்கொள்ளும் எதையும் அடைந்தபிறகே ஓய்வெடுக்க வேண்டும் என்பதை பூக்கள் உணர்த்துகின்றன.

* சில பூக்கள் காயாகின்றன. சில பூக்கள் தாமே விதை பரப்பி புதிய செடிகளை வளரச் செய்கின்றன. சில பூக்கள் உணவாகின்றன. சில பூக்கள் பெண்களின் தலைகளை அலங்கரிக்கின்றன. சில பூக்கள் வழிபாடுகளில் இடம் பிடிக்கின்றன. சில அரிதான பூக்கள் ஐந்து நட்சத்திர ஹோட்டல்களின் வரவேற்பறைகளை அழகுபடுத்துகின்றன. ஒவ்வொரு பூ பூப்பதற்கும் ஓர் அர்த்தம் உள்ளது. மனிதர்களுக்கும் இப்படித்தான். ஒவ்வொருவரின் வாழ்க்கைக்கும் பயணத்துக்கும் வெவ்வேறு இலக்குகள் இருக்கலாம். அடுத்தவரைப் பார்க்காமல், நம் இலக்கையே பார்க்க வேண்டும் என்பதைப் பூக்கள் கற்றுத் தருகின்றன. ●

# தோல்விகளிலிருந்து கற்றுக்கொள்ளுங்கள்!



**பல தோல்விகளை பாடங்களாக எடுத்துக்கொள்பவரே ஒரு வெற்றியை சீக்கிரம் அடைகிறார். ‘தோல்விகளிடம் வழி விசாரித்துக்கொண்டே, வெற்றி ஒருவரைத் தேடிவரும்’ என்பார்கள். தோல்விகளை வழிகாட்டிகளாக எடுத்துக்கொண்டால், வெற்றிக்கான வழி திறக்கும். ‘தவறு செய்வது மனித இயல்பு’ என்று சொல்வதுண்டு. தினம் தினம் சின்னதாகவோ, பெரிதாகவோ, நிறைய தவறுகள் செய்கிறோம். அந்தத் தவறுகளும் நமக்கு சிறந்த பாடங்களைக் கற்றுத்தரும் வாய்ப்பாகத்தான் அமைகின்றன.**

◆ நமக்கு என்ன தேவை என்பதையும், நாம் எப்படி வாழ விரும்புகிறோம் என்பதையும் நாம் அடையும் தோல்விகளே கற்றுக்கொடுக்கின்றன. தோல்வி என்பது என்ன? அது ஒரு கருத்துதான். ஒரு தவறு நடக்குபோது, நாம் வெற்றி என எதை நினைக்கிறோமோ, எதற்கு நாம் ஆசைப்படுகிறோமோ, அது கிடைக்காது. அந்தத் தோல்வியை உணர்ந்து, நமது தவறுகளை ஒப்புக்கொள்ளும்போது, நமக்கு ஒரு புதிய வாசல் திறக்கிறது. நமது கவனம் அந்தத் தவறின்மீது பதியும்போது, அதை சரி செய்வதற்கான தீர்வும் கிடைக்கிறது.

◆ நமது பலம் மற்றும் பலவீனங்களோடு நம்மை ஒப்புக்கொண்டு நம்மீது அன்பு செலுத்துவதற்கு தோல்விகளே உதவுகின்றன. அப்போதுதான் நம் தவறுகளை நினைத்து, நாமே நம்மைப் பார்த்து சிரித்து, அவற்றை சரி செய்ய உழைப்போம். ஒரு தப்பு செய்துவிட்டு, அதற்காகக் கூனிக்குறுகி, தாழ்வு மனப்பான்மையில் தவிக்கத் தேவையில்லை. ஒரு விஷயத்தை சரியாகச் செய்தால், நம்மை நாமே பாராட்டிக்கொள்கிறோம். அதுபோலவே, தவறு செய்தாலும், ‘பரவாயில்லை! இப்படி ஒரு தவறைச் செய்தால் தோல்வி கிடைக்கும் என்று கண்டுபிடித்துவிட்டாய். இனி இதைச் சரி செய்து ஜெயிப்பதற்கான வழியையும் தேடுகிறாய்’ என உற்சாகப்படுத்திக்கொள்ள வேண்டும். எல்லோருமே கச்சிதமான மனிதர்கள் இல்லை. தவறுவது இயல்புதான். ‘இந்த தனித்துவமான தவறுகளோடு சேர்ந்த கலவைதான் நாம்’ என்ற பெருமிதம், உங்களைப் பற்றி உங்களுக்கு வர வேண்டும்.

◆ தோல்விகளே நம் நிஜமான அச்சத்தை உணர்ந்து மாறுவதற்கான வாய்ப்பைத் தருகின்றன. சில சமயங்களில் நாம் எவ்வளவுதான் கடினமாக முயற்சி செய்தாலும், தோல்வியைத் தவிர்க்க முடியாது. திரும்பத் திரும்ப இப்படி தோல்விகளே நிகழும்போது, மனம் முழுக்க பயமே நிரம்பி வழியும். மீள முடியாத ஏதோ ஒரு நெருக்கடியில்

சிக்கிக்கொண்டது போல பயம் சூழும். அந்த பயத்தை நேருக்கு நேர் சந்திக்கத் தயாராக இருங்கள். விளக்கைப் போட்டதும் மாயமாகும் இருள் போல, பயமும் விலகி ஓடிவிடும்.

◆ தோல்விகள்தான் நம்மைப் பற்றிய உண்மைகளை நமக்கு உணர்த்துகின்றன. பெரும்பாலானவர்கள் ஒரு தோல்வியை சந்தித்தால், அதை மறைக்கவே முயற்சி செய்வார்கள். ஒரு தவறைச் செய்து தோல்வியை அடைந்தபிறகு, அதை ஒப்புக்கொள்வதற்கு மிகுந்த மன உறுதி வேண்டும். நமது தவறுகள், நமது பலவீனங்களைப் புரிந்துகொண்டால், அவற்றை சரி செய்யக் கிடைக்கும் வாய்ப்புகள் நம் கண் முன்னால் தெரியும். நமக்கு மாற்றத்துக்கான பாதை திறக்கும். நம் தவறுகளை மற்றவர்களிடம் சொன்னால், அவர்கள் ஏளனம் செய்யக்கூடும். கிட்டத்தட்ட ஒரு கண்ணாடி முன்பாக நின்று, நம்மைப் பற்றி நம்மிடமே சொல்லி உண்மையை உணர்ந்தால், மாற்றம் கிடைக்கும்.


◆நாம் எவ்வளவு முயற்சி செய்தாலும், எது நடக்கும், எது நடக்காது என்பதைத் தோல்விகளே நமக்கு உணர்த்தும். ஒரு விஷயம் தோல்வி அடையும்போது, அதன் விளைவுகளை ஆராய்வோம். அப்போது, நம் முயற்சிகளில் எதற்கு பலன் கிடைத்திருக்கிறது என்பது புரியும். அதற்கு ஏற்றபடி நமது முயற்சிகளை மாற்றிக்கொள்வது சாத்தியம். 'இந்த அனுபவத்தை நான் எப்படிப் பயன்படுத்திக்கொள்ளப் போகிறேன்? அடுத்த முறை இதிலிருந்து வித்தியாசமாக என்ன செய்வது? எதிர்காலத்தில் நான் எப்படி வித்தியாசமாக மாறுவேன்?' என கேள்விகள் எழுப்பி, புதிய தீர்வுகளைக் கண்டறியும் பக்குவத்தை தோல்விகளே தருகின்றன.

◆ தோல்விகள்தான், பொறுப்பை ஏற்றுக்கொள்ளும் பக்குவத்தை நமக்குத் தருகின்றன. சில சமயங்களில் ஏதாவது தோல்வி நிகழும்போது, அடுத்தவர் மீது பழியைப் போட்டுவிட்டு தப்பித்துக்கொள்ளும் மனோபாவம் பலருக்கு இருக்கும். 'இது என் தவறு இல்லை', 'இதைப்பற்றி எனக்கு சொல்லவே இல்லை' என சமாளிப்புகள் செய்வார்கள். ஆனால், 'ஆமாம்! என்னால்தான் இப்படி நிகழ்ந்தது' என்று ஒப்புக்கொண்டு, 'இதை சரி செய்ய நானே களத்தில் இறங்குவேன்' என்று சொல்வதற்கு பெரும் மன உறுதி வேண்டும். இப்படிப் பொறுப்பை ஏற்கும்போது, என்ன செய்ய வேண்டும் என்ற வாய்ப்புகள் நம் கண்களுக்குத் தெளிவாகத் தெரியும். நம்மைப் பற்றிய மற்றவர்களின் மதிப்பும் உயரும்.

◆ கொடுத்த வாக்குறுதியைக் காப்பாற்ற முடியாதபோதோ, நம் சக்திக்கு மீறிய செயல்களை ஒப்புக்கொள்ளும்போதோ, முழுமையாக ஒரு விஷயத்தில் கவனம் செலுத்த முடியாதபோதோ, பெரும்பாலும் தோல்விகள் நிகழ்கின்றன. பெரிய தோல்விகள் எல்லாமே சின்னச் சின்ன தவறுகளில் இருந்துதான் ஆரம்பிக்கின்றன. நமது சொல்லுக்கும் செயலுக்கும் வித்தியாசம் இருக்கிறது என்பதை தோல்விகள் உணர்த்துகின்றன. நமது நோக்கத்தையும், பொறுப்புகளையும் மறுபரிசீலனை செய்து, நம் மதிப்பைக் காப்பாற்றிக்கொள்ள, தோல்விகள் கற்றுத் தருகின்றன.

◆ நாம் நிறைய தவறுகள் செய்யலாம். ஆனால், அதனால் கிடைக்கும் தோல்விகள் மட்டுமே நம் அடையாளம் அல்ல. சிலர் தோல்விகளால் நொறுங்கிப் போகிறார்கள். அதன்பின் தங்கள் அடையாளத்தையே இழந்து எங்காவது போய்விடுகிறார்கள். ஆனால், ஒரு தோல்வி என்பது வளர்ச்சிக்கான அடையாளம். நிறைய வேலை பார்ப்பவர்கள்தான், நிறைய ரிஸ்க் எடுப்பவர்கள்தான், நிறைய தோல்விகளை சந்திக்கிறார்கள். புதிய முயற்சிகளில் இறங்காதவர்கள், எந்தத் தவறும் செய்வதில்லை. நீங்கள் தோல்வியை சந்திக்கிறீர்கள் என்றால், ஏதோ மிகப்பெரிய செயலைச் செய்வதற்கான முயற்சியில் இருக்கிறீர்கள் என அர்த்தம். எனவே, இதை நினைத்து பெருமை கொள்வதற்கு தோல்வி உங்களுக்குக் கற்றுத் தருகிறது.

◆ தோல்வி காணும் மனிதர்களே, அடுத்தவர்களுக்கு முன்மாதிரிகளாக இருக்கிறார்கள். தங்கள் தவறுகளை பொதுவெளியில் ஒப்புக்கொள்வதற்கு, அசாத்திய துணிச்சல் வேண்டும். அப்படிச் செய்பவர்களை உலகம் கவனிக்கிறது. அந்தத் தவறுகள் மற்றும் தோல்விகளிலிருந்து மீள்வதற்கு என்ன வழி என அவர் சொல்வதை மக்கள் நம்புகிறார்கள். பெற்றோர்கள், தங்கள் பிள்ளைகளின் தவறுகளையும் தோல்விகளையும் மதிக்கக் கற்றுக்கொள்ள வேண்டும். அவற்றிலிருந்து பாடம் பெறும் வழிகளையும் குழந்தைகளுக்குக் கற்றுத் தர வேண்டும். ●



# கதை நேரம்



கடலை ஒட்டியிருந்த நீர்ப்பரப்பில், ஒரு விடுமுறை நாளில் படகில் பயணித்தபடி மீன் பிடிக்க வந்தான் ஓர் இளைஞன். சிறிய அந்தப்படகில் அமர்ந்து தூண்டில் போட்டபடி பாட்டு கேட்பதும், சாப்பிடுவதும் அவனுக்குப் பொழுதுபோக்கு. கடல்நீர் பின்வாங்கி நிலத்துக்குள் வரும் அந்த நீர்ப்பரப்பில் அலைகள் இருக்காது. ஆழமான நீர்ப்பரப்பு என்பதால் பெரிய மீன்கள்கூட தூண்டிலில் சிக்கும்.

பல மாதங்களாக ஆபீஸ் வேலையாக வெளிநாடு போயிருந்துவிட்டு, இப்போதுதான் ஊருக்குத் திரும்பியிருந்தான் அவன். வந்த மறுநாளே இங்கு வந்துவிட்டான். மாதக்கணக்கில் பயன்படுத்தாது போட்டிருந்த தூண்டில் மக்கர் செய்ய, அதை சரிசெய்யும்



ரகுவும் முரளியும் பால்யகால சிநேகிதர்கள். கல்லூரிவரை ஒன்றாகப் படித்தவர்கள். வெவ்வேறு தருணங்களில் மும்பை போனார்கள். ஒருவர் இருப்பது எங்கே என்று அடுத்தவருக்குத் தெரியாது. லட்சக்கணக்கில் மக்கள் வசிக்கும் ஒரு நகரத்தில் இரண்டு பேர் தற்செயலாகக்கூட சந்தித்துக்கொள்ளும் வாய்ப்பு நேர்வது அரிது.

அப்படி அரிதாக ஒரு ஷாப்பிங் மாலில் இருவரும் திடீரென சந்திக்க நேர்ந்தது. கட்டிப் பிடித்து, உருகி உருகி பேச ஆரம்பித்தார்கள். பல வருடக் கதைகளை சில மணி நேரங்களில்



விடுமுறை தினத்திலும் ஒரு வீட்டில் எல்லோரும் பரபரப்பாக இருந்தார்கள். எப்போதும் இப்படி நேர்ந்ததில்லை. அதனால் எல்லோரது முகத்திலும் கவலை ரேகைகள் படிந்திருந்தன.

அந்த வீட்டு முதியவருக்கு வயது 75. தினமும் அதிகாலை ஐந்து மணிக்கு வாக்கிங் கிளம்பிப் போனால், ஏழு மணிக்கெல்லாம் வீட்டுக்கு வந்துவிடுவார். வீட்டிலிருந்து சற்று தொலைவில் இருக்கும் பூங்காவில் நடைபயிற்சி செய்வார். அவரைப் போல ரிட்டயராகியும் சுறுசுறுப்பாக இருக்கும் பலர் அங்கு வந்திருப்பார்கள். நடந்து களைத்ததும் கொஞ்ச நேரம் ஆசுவாசமாக உட்கார்ந்து அவர்களோடு பேசிக்

பணியில் மூழ்கியிருந்த அவன், படகில் இருந்த ஓட்டையை கவனிக்கவில்லை. சில நிமிடங்களில் தண்ணீரில் படகு கவிழ்ந்துவிட, கவிழ்ந்த படகு மீது தாவி உட்கார்ந்து தன்னைக் காப்பாற்றிக் கொண்டான்.

அவனுக்கு நீச்சல் நன்றாகத் தெரியும். ஆனால் இந்த தண்ணீரில் ஆட்கொல்லி முதலைகள் நிறைய உண்டு. அதனால் பயந்தபடி தண்ணீருக்குள் குதிக்காமல் இருந்தான். தூரத்துக் கரையில் ஒரு ஆள் நிற்பது தெரிய, அவனிடம் முதலைகள் நடமாட்டம் பற்றி விசாரித்தான். ''இதுல இருந்த முதலைங்க எல்லாம் நாலு மாசம் முன்னாடியே காணாம போயிடுச்சு'' என்று அந்த ஆள் சொல்ல, இளைஞன் தைரியமாக தண்ணீரில் குதித்தான்.

கரையில் இருந்த ஆள் இவனை அதிர்ச்சியோடு பார்த்து, ''தம்பி! ஏன் தண்ணியில குதிச்சீங்க?'' என்றார். ''அதான் முதலைகள் இல்லைன்னு சொன்னீங்களே'' என்றான் இவன்.

''முதலைகள் ஏன் காணமப் போச்சு தெரியுமா? கடல்ல இருந்து சுறா மீன் குட்டிங்க நாலஞ்சு இங்க வந்து ஆட்டம் போட்டதுல முதலைகள் காலி. இப்ப அதுங்களுக்கு பயந்து யாருமே இங்க வர்றதில்லை. நீங்க என்னடான்னா தண்ணியில நீந்தறீங்க'' என்று அந்த ஆள் சொல்லிக் கொண்டிருந்தபோதே தண்ணீரில் ஏதோ சலசலப்பு கேட்டது.

**முழுமையான வழிகாட்டல் கிடைப்பதற்கு முன்பே எதிலும் இறங்கக்கூடாது!**

---

பேசித் தீர்த்துவிட முடியுமா? முரளி தன்னுடைய வீட்டு அட்ரஸை ரகுவுக்குக் கொடுத்தபடி சொன்னான்... ''டேய் ரகு! வர்ற சண்டே என் வீட்டுக்கு வர்றே. எனக்கு ரெண்டு பசங்க. ஞாயிற்றுக்கிழமை லீவ்ங்கறதால அவங்களும் வீட்லதான் இருப்பாங்க. மனைவியும் வீட்லதான் இருப்பா...''

''சரி! எப்படி வரணும்? வழியைச் சொல்லு...''

வழியைச் சொன்ன முரளி, ''அந்தத் தெருவுலயே பெரிய அபார்ட்மென்ட் எங்களோடதுதான். வாசல்ல இருக்கற கேட்டை காலால உதைச்சுத் திறந்துக்கிட்டு உள்ளே வா. லிஃப்ட் இருக்கு. அதுல ஏறி, உன் வலது தோள்பட்டையால ஆறாம் நம்பர் பட்டனை அழுத்து. அந்த ஆறாவது மாடியில லிஃப்ட்டை விட்டு இறங்கி நடந்ததும், என் வீடு மூணாவதா இருக்கும். வாசல்ல என் பெயர்ப்பலகை இருக்கும். அங்கே வந்து காலிங் பெல்லை இடது தோள்பட்டையால அழுத்து!'' என்றான்.

ரகுவுக்குக் குழப்பம்... ''ஏன் காலால உதை; தோள்பட்டையால அழுத்துன்னு சொல்றே. அதையெல்லாம் கையாலயே செய்யலாமே!'' என்றான்.

''அதுக்கில்லை ரகு! இத்தனை வருஷம் கழிச்சு வர்றே. வெறுங்கையோடவா குழந்தைகளைப் பார்க்க வருவே? ரெண்டு கை நிறைய வாங்கிட்டு வருவே இல்லே... அதனாலதான் சொன்னேன்.''

**சில வழிகாட்டிகள் தங்கள் தேவைகளை குறிப்பால் உணர்த்திவிடுகிறார்கள்!**

---

கொண்டிருப்பார். சரியாக ஏழு மணிக்கு வீட்டுக்கு வருவார். பேரக்குழந்தைகளை பள்ளிக்கு அனுப்புவது, தோட்ட வேலைகள் என காலைப் பொழுதில் அவர் பிஸி.

ரிட்டயரான இந்த 17 ஆண்டுகளில் இதில் எதுவுமே தவறியதில்லை. இன்றுதான், எட்டு மணி அடித்தும் அவர் வீட்டுக்கு வரவில்லை. பூங்காவுக்கு தேடிப்போன மகனும், அவரைக் காணாமல் குழம்பிப் போயிருந்தார். 'வயதான காலத்தில் உடம்புக்கு ஏதாவது ஆகி...' என்று நினைக்கும்போதே பயம் வந்தது.

அப்போதுதான் வாசலில் வந்து நின்றது அந்த போலீஸ் ஜீப். முதியவரை கைத்தாங்கலாக இறக்கி அழைத்துவந்த இன்ஸ்பெக்டர், ''இவர் தொலைஞ்சு போயிட்டாருன்னு கவலையில இருந்தீங்களா? ஸ்டேஷன் கிட்ட குழப்பமா உட்கார்ந்திருந்தாரு. கொஞ்சம் ஞாபகமறதி போல... வீட்டுக்கு வழி தெரியலைன்னு சொன்னாரு! அட்ரஸ் விசாரிச்சு கூட்டிக்கிட்டு வந்தேன். பத்திரமா பார்த்துக்குங்க'' என்றார்.

''இத்தனை வருஷமா இப்படி ஆனதில்லையே'' என மனைவி கவலைப்பட, ''பயப்பட வேணாம். என்னைக்கும் இல்லாம களைப்பு அதிகமா இருந்தது. நடந்து வர முடியலை. போலீஸ் ஸ்டேஷன் பக்கத்துல தெரிஞ்சுது. வழி குழப்பமா இருக்குன்னு சொன்னதும், செலவில்லாம கூட்டி வந்து விட்டுட்டாங்க'' என்று முதியவர் நிதானமாகச் சொன்னார்.

**வழி அறிந்தவர்கள் எப்படியும் இடம் தேடி வந்துவிடுவார்கள்.** ●

# இயற்கையே வழிகாட்டி!

வாழ்வின் அர்த்தம் தேடி பல ஆண்டுகளாக, பல குருக்களைச் சந்தித்தார் ஒருவர். அவர்களின் உபதேசங்களைக் கேட்டபிறகும் அவருக்கு பதில் கிடைக்கவில்லை. நீண்ட தேடலின் இறுதியாக ஒரு மலைக்காட்டில் வசித்த துறவியை சந்தித்தார்.

தூரத்து மலையடிவாரத்தில் இருக்கும் அடர்ந்த காட்டை அவரிடம் காட்டினார் துறவி. ‘‘அது மனிதர்கள் யாரும் வசிக்காத காடு. யாருடைய துணையும் இல்லாமல், அந்தக் காட்டுக்குள் 100 நாட்கள் இருக்க வேண்டும். எப்போதாவது வேட்டையாடவோ, வழிப்போக்கர்களாகவோ யாராவது அங்கு வரக்கூடும். அவர்களிடமும் ஒரு வார்த்தையும் பேசக்கூடாது’’ என்று நிபந்தனை விதித்தார்.

வந்தவருக்குப் பெரும் ஏமாற்றம். ‘இது அறிவுரையா, தண்டனையா?’ என்பது புரியாமல் குழம்பினார். யாருமற்ற வனத்தில், யாருடனும் பேசாமல் 100 நாட்கள் இருக்க முடியுமா? இந்தக் கேள்வியே அவரை மலைக்க வைத்தது.

ஆனால், உள்மனது வேறுவிதமாக யோசித்தது. ‘எத்தனையோ குருக்களைத் தேடிப்போய் உபதேசம் கேட்டும், இத்தனை நாட்களாக ஒரு பயனும் இல்லை. இந்த குரு புதுவிதமான அணுகுமுறையைத் தருகிறார். இதுதான் வாழ்க்கையின் அர்த்தம் உணரும் வழி என்றால், அவர் சொன்னபடி முயற்சி செய்து பார்க்கலாம்’ என்கிற முடிவுக்கு வந்தார். மலையிலிருந்து இறங்கி, அடர்ந்த காட்டுக்குள் தனி ஆளாகப் பயணம் மேற்கொண்டார்.

காடு தந்த அமைதியே அவருக்குள் புதிய உணர்வுகளை உண்டாக்கியது. யாரிடமும் பேசாமல் இருக்க முயற்சித்து, தனக்குத் தானே பேசிக்கொண்டார். பத்து நாட்களுக்குப் பிறகு அதுவும் சலிப்பை ஏற்படுத்தத் தொடங்கியது. அதன்பின் அவரின் கவனம் முழுக்க, தன்னைச் சுற்றிய காட்சிகளில் குவிந்தது. காட்டை அமைதியாகக் கவனிக்கத் தொடங்கினார்.

உயிர்கள் தோன்றிக்கொண்டும் மறைந்துகொண்டும் இருப்பதைக் கண்ணெதிரே கவனிப்பதே புதிய அனுபவமாக இருந்தது. உயிர்கள் ஒன்றை ஒன்று சார்ந்திருப்பதையும் அவரால் உணர முடிந்தது. மரங்களின் கனிகளைக் கொத்தித் தின்கிற பறவைகளும் சிறு விலங்குகளுமே, அவற்றின் விதைகளைப் பரப்பி புதிய செடிகள் முளைக்கக் காரணமாவது புரிந்தது. ஒரு விலங்கின் உயிர் இன்னொரு விலங்குக்கு உணவாகிற தன்மை புரிந்தது. உணவைத் தவிர வேறு எதற்காகவும் ஒரு விலங்கு மற்ற விலங்கைத் துன்புறுத்துவதில்லை என்பதையும் கவனித்தார். இயற்கையின் விதியை ஒவ்வொரு உயிரும் எப்படி மதித்து செயல்படுகிறது என்பதையும் உணர்ந்தார்.


தான் அமர்ந்திருக்கும் உயர்ந்த மரத்தின் விதைகள் தரையில் விழுந்திருப்பதை கவனித்தவருக்கு, ‘இந்த சிறிய விதைதான் அந்த பிரமாண்ட மரம்’ என்கிற எளிய உண்மை தெளிவாகத் தெரிந்தது. இதை உணர்ந்தபோது வாழ்வின் அர்த்தம் புரியத் தொடங்கியது. ‘ஒருவருக்கு ஒருவர் உதவிகள் செய்து, யாரையும் தேவையின்றி தொந்தரவு செய்யாமல் இருப்பதே வாழ்வின் அர்த்தம்’ என உணர்ந்தார். அதன்பிறகு அவருக்கு எந்த குருவும் தேவைப்படவில்லை.

இயற்கையே சிறந்த வழிகாட்டி. அதனிடம் பாடம் கற்கத் தொடங்கிவிட்டால் போதும்... எந்தத் தவமும் செய்யாமல், மகிழ்ச்சியான வாழ்க்கை வரமாகக் கிடைக்கும்.





# ட்விட்டர் வழிகாட்டி



**@SahaSoundar**

தாழ்த்திப் பேசுபவர்கள் மத்தியில் தளர்ந்து போகாதே! உன் வாழ்க்கையின் சிறந்த வழிகாட்டிகள் அவர்களே!

**@dhanalakshmirs**

கடவுளே... எனக்கு ஏதாவது சொல்லித் தரணும்னு நினைச்சா, அதை நீயே பண்ணிடு. போலி வழிகாட்டிகள் பின்னாடி மட்டும் அனுப்பிடாதே.

**@mujib989898**

நம்மைக் கடந்து போகிறவர்கள் கொடுக்கும் பாடங்களே நமக்கான வழிகாட்டிகள். சரியானதைத் தேர்வு செய்யுங்கள். தவறினால், எல்லோரிடமும் எல்லாவற்றையும் புலம்பிக் கொண்டு இருப்பீர்கள்.

**@umageetham**

கண்ணும் காதும் கற்பனை உலகிற்கு வழிகாட்டிகள்.

**@Thiyagu_Twits**

நன்றி மறந்தவர்களே, நம் வாழ்வின் வழிகாட்டிகள்.

**@ss_twtz**

அசாதாரணமான சூழலிலும் மிகச் சாதாரணமாக வாழும் சில மனிதர்கள், நடமாடும் வழிகாட்டிகள்!

**@arjundreams43**

நாம் மானசீகமாய் பகைத்துக்கொள்ளும் வழிகாட்டிகள்... அப்பா, ஆசிரியர், முதலாளி/உயர் அதிகாரி.

**@Aji-twitz**

ஒருவருக்கு வழிகாட்டியாக இருப்பவர்களே, சில தருணங்களில் அவர்களைக் காட்டிக்கொடுத்து விடுகிறார்கள்.

**@abhi_heartz**

பயண வழிகாட்டியாக பயன்படுத்தும் கூகுள் மேப்ஸ் தோற்றுப்போகிறது மனித வழிகாட்டிகளிடம்.

**@iam_mohanlal**

பிறர் வழிகாட்டுதலின்படி செயல்படுவதை விட, பிறருக்கு வழிகாட்டியாக செயல்படுவோம்!

**@Anu-zya**

பார்வை இருப்பவருக்கு வெறும் குச்சியாகத் தெரிவதுதான்... பார்வை இழந்தவருக்கு வழிகாட்டி.

**@pinky_pearl_ays**

வலிகளே வழிகளைக் காட்டும் வழிகாட்டி. வலிகளை நேசிப்போம்.

**@aneem_jay**

வாழ்வின் சுவாரஸ்யமான வழிகாட்டி, தேடல் ஒன்றே!

**@mujib989898**

ஆறு வயது மகனுக்கு தந்தை வழிகாட்டியாக இருந்து விடுகிறார். அறுபது வயதில் மகன் தந்தைக்கு வழிகாட்டியாக இருந்தாலே வாழும் வாழ்க்கைக்கு சிறப்பு.

**@AshokMunusamy2**

வெற்றியின் உச்சத்தில் நின்று கடந்து வந்த பாதையை நினைத்து கண்ணீர் விட்டுப் பாருங்கள். உங்கள் அழுகை பலர் வாழ்க்கைக்கு வழிகாட்டியாக அமையும்.



**@ranjanikovai**

இன்பம், துன்பம் அனைத்திலும் பங்கெடுத்துச் செல்லக்கூடிய ஒரே நபர் நண்பன் மட்டுமே! ஒரு சிறந்த நண்பன் வாழ்க்கைக்கு வழிகாட்டியாக இருப்பான். ஆனால் அந்த அதிர்ஷ்டம் எல்லோருக்கும் அமையாது.

**@Vizhuppuraminfo**

வாழ்க்கையில் ஏற்படும் துன்பங்களைக் கடந்து போகக் கற்றுக் கொள்ளுங்கள். ஆனால், மறந்து விடாதீர்கள். அவையே உங்கள் வாழ்க்கைக்கு வழிகாட்டியாக இருக்கும்.

**@Lachu_Twitz**

பொறுமையையும் விவேகத்தையும் போல் வேறொன்றும் சிறந்த வழிகாட்டியாக நம் வாழ்க்கைக்கு இருக்கப் போவதில்லை.

# ராம்ராஜின் வாழ்த்துகள்!

சோழா குழும நிறுவனங்களின் தலைவர் சோழா திரு. ஏ.பி.அப்புக்குட்டி அவர்கள், தமிழ்நாடு நூற்பாலைகள் சங்கத் தலைவராகவும். ஆழியார் அறிவுத் திருக்கோயில் அறங்காவலராகவும் பொறுப்பு வகிக்கிறார். அவர் இப்போது பழனி, அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் அறக்கட்டளையின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். அவரை சந்தித்து ராம்ராஜ் காட்டன் நிறுவனர் திரு. கே.ஆர்.நாகராஜன் வாழ்த்துகளைத் தெரிவித்தார். ஆடிட்டர் திரு. டி.ராமநாதன் உடன் இருந்தார்.



# ‘வனத்துக்குள் திருப்பூர்’ நிகழ்வில் ராம்ராஜ்

திருப்பூர் மாவட்டத்தை பசுமைப் பிரதேசமாக மாற்றுவதற்காக தொடங்கப்பட்ட ‘வனத்துக்குள் திருப்பூர்’ சேவை ஆறாம் ஆண்டை நிறைவு செய்துள்ளது. சுமார் 10.5 லட்சம் மரக்கன்றுகளைத் தாண்டி தொடரும் இந்த சேவையின் சூழலியல் ஆய்வறிக்கை வெளியீட்டு விழா திருப்பூரில் நடைபெற்றது. விழாவில், ஏழாம் ஆண்டில் நடுவதற்காக மரக்கன்றுகளை உருவாக்கும் நர்சரியும் தொடங்கப்பட்டது. ‘வனத்துக்குள் திருப்பூர்’ கொடையாளராக, ஆரம்பம் முதலே இந்தப் பசுமைச்சேவையில் தன்னை முழுமையாக இணைத்துக் கொண்டுள்ளது ராம்ராஜ் காட்டன் நிறுவனம். இந்த விழாவில் நிறுவனர் திரு. கே.ஆர்.நாகராஜன் இதற்காக கௌரவிக்கப்பட்டார்.













# சென்னை புத்தகக் காட்சியில் ராம்ராஜ்!

வாசிப்பை நேசிக்கும் எல்லோரும் எதிர்பார்க்கும் ஒரு நிகழ்வு, சென்னை புத்தகக் காட்சி. லட்சக்கணக்கான புத்தகங்கள் விற்பனையாகும் இந்தக் கண்காட்சியில் இம்முறை ராம்ராஜ் 'வெண்மை' இதழ் சார்பில் விற்பனை அரங்கு அமைக்கப்பட்டது. வாடிக்கையாளர்களை வாசகர்களாக மாற்றும் ராம்ராஜ் காட்டனின் புதிய முயற்சிக்கு தமிழ் மக்கள் மத்தியில் பெரும் வரவேற்பு கிடைத்ததை கண்காட்சியின் எல்லா நாட்களிலும் பார்க்க முடிந்தது.

புத்தகக் காட்சியில் 'வெண்மை' மாத இதழுக்கு சந்தா செலுத்துவதற்கு சிறப்புச் சலுகை தரப்பட்டது. 'வெண்மை' இதழ்களும், வெண்மை இதழ்களில் வெளியாகும் நற்சிந்தனைகளைத் தொகுத்து ராம்ராஜ் காட்டன் நிறுவன வெளியீடாக வந்த குட்டி புத்தகங்களும் பெருமளவில் விற்பனையாகின. 'வெண்மை' இதழில் ராம்ராஜ் காட்டன் நிறுவனர் திரு. கே.ஆர்.நாகராஜன் எழுதிய கடிதங்களைத் தொகுத்து வெளியிடப்பட்ட 'மதிப்பிற்குரியவர்களுக்கு...' நூலை இளைஞர்களும் மாணவிகளும் போட்டி போட்டுக்கொண்டு வாங்கினர். புத்தகக் காட்சியில் அதிகம் விற்ற நூல்களில் ஒன்றாக அது இருந்தது.

புத்தகக் காட்சிக்கு வருகை புரிந்த ஆளுமைகள் பலரும் 'வெண்மை' அரங்குக்கு வந்திருந்து வாழ்த்தினர். பாரதிய ஜனதா கட்சி மூத்த தலைவர் திரு. ஹெச்.ராஜா, முன்னாள் அமைச்சர் திரு. பழ.கருப்பையா, ஜோதிட அறிஞர் திரு. ஹரிகேசநல்லூர் வெங்கட்ராமன் போன்ற பலரும் ராம்ராஜ் வெளியீடுகளைப் படித்துப் பாராட்டினர்.



# மனம் என்ற வழிகாட்டி!

ஏதோ ஒரு நம்பிக்கை இல்லையென்றால் மனம் துவண்டு விடும். 'கடவுள் மீது பாரத்தைப் போட்டுவிட்டு செய்கிறேன்' என்பார்கள் சிலர். கடவுள் தன்னை வழிநடத்துவார் என அவருக்கு நம்பிக்கை. அதிர்ஷ்டம் தனக்கு வழிகாட்டுவதாக நம்புவோர் உண்டு. திறமையே தனக்கு வழிகாட்டி, பொருத்தமான உயரங்களுக்கு அழைத்துச் செல்வதாக சிலர் நம்புவதுண்டு. முன்னோர்கள், பெற்றோர்கள், தாங்கள் நம்பும் குருமார்கள், ஆசான்கள் என இந்த வழிகாட்டிகள் பட்டியல் பெரியது.

'வழிகாட்டி தேவையா' என்றால், ஆமாம்! காற்று எல்லா இடத்திலும் வீசினாலும், மரத்தின் நிழலில்தான் அதன் குளிர்ச்சியை அனுபவிக்கிறோம். அதுபோலவே உலக வாழ்வின் நெருக்கடிகளால் தவிப்பவர்களுக்கு வழிகாட்டி அவசியம். தெரியாத ஒரு மொழியைக் கற்பதற்கே அந்த மொழியை அறிந்த ஆசிரியர் அவசியமாகிறார். அப்படியிருக்கும்போது, வாழ்வில் பழக்கமில்லாத, சிரமங்கள் பல நிறைந்த பாதையில் பத்திரமாக பயணம் செய்வதற்கு, அதை நன்றாக அறிந்தவரின் துணை அவசியமல்லவா?

வெளியில் எங்கெங்கோ வழிகாட்டிகளைத் தேடும் பலருக்கும், தங்களுக்குள் இருக்கும் உன்னத வழிகாட்டியை அடையாளம் தெரிவதில்லை. 'ஒவ்வொரு மனிதனுக்கும் அவனது மனசாட்சியை விட பெரிய வழிகாட்டியாக யார் இருந்துவிட முடியும்? மனம் கூறுவது போல நடந்தால் போதாதா... எதற்காக வேறொருவரை அணுகவேண்டும்?' என்று ஞானிகள் சிலர் கேட்பதுண்டு.

இந்தக் கேள்வி நியாயமானதுதான். ஒரு சண்டையில் நியாயத்தின் பக்கம் நிற்கும் பெரியவர்கள், ''உன் மனசாட்சி கேட்கும் கேள்விகளுக்கு பதில் சொல்ல முடியுமான்னு பாரு'' என எதிர் தரப்பிடம் சொல்லி முடித்துவிடுவார்கள். மனசாட்சி கேட்கும் நியாயமான கேள்விகளுக்கு யாரிடமும் பதில் கிடையாது. 'ஆயிரம் வழக்கறிஞர்கள் ஒரே இடத்தில் கூடி நின்று எத்தனை கேள்விகள் கேட்டாலும் சளைக்காமல் பதில் சொல்வேன். ஆனால் மனசாட்சி கேட்கும் கேள்விகளை சந்திக்கமுடியாமல் கூனிக்குறுகி நிற்கிறேன்' என்று பலர் புலம்புவதுண்டு.

பலரும் தங்கள் தவறுகளை வாழ்க்கைத்துணையிடம் கூட சொல்லாமல் மனதுக்குள் ரகசியமாகப் புதைக்கிறார்கள். அப்படிப்பட்ட தவறுகளை அறிந்த ஒரே வழிகாட்டி, மனசாட்சி. அதனால்தான் பலரும் மனதை அறிவின் கட்டுப்பாட்டில் வைக்க விரும்பாமல் உணர்வுகளுக்கு அடிமையாக்கி வைக்கிறார்கள். மனம்

சொல்லும் பாதையில் போகாமல், தாங்கள் போகும் பாதை குறித்து கேள்வி கேட்காமல் இருக்குமாறு மனதைக் கட்டுப்படுத்துகிறார்கள். இப்படிச் செய்யாமல் இருந்தால், மனம் சிறந்த வழிகாட்டி.

ஒரு மனிதன் தனக்குப் பொருத்தமான வழிகாட்டும் குருவைத் தேடி பலரிடம் சென்றான். எல்லோரும் பணிவு, நம்பிக்கை, அன்பு என்றே பேசினர். அவனுக்கு அதெல்லாம் பிடிக்கவில்லை. 'யாருக்கும் அடிமையாக இருக்க என்னால் முடியாது' என்று நிராகரித்துவிட்டான்.

ஒருநாள் பாதையோரமாக உட்கார்ந்து கொண்டு, 'நான் இதுவரை சந்தித்த எந்த குருவும் எனக்கு சரியான பாதை காட்ட மாட்டார்கள்' என்று மனதிற்குள் சொல்லிக் கொண்டான். அவன் இப்படி நினைத்தபடி எதிரில் புல் மேய்ந்து கொண்டிருந்த ஒட்டகத்தைப் பார்த்தபோது அது தலையாட்டியது. 'ஆஹா! நான் மனதில் நினைத்ததை இந்த ஒட்டகம் சரியாகப் புரிந்து கொள்கிறதே' என்று ஆச்சர்யப்பட்ட அவன், ஒட்டகத்தின் அருகில் சென்றான். ''நான் நினைப்பது உனக்குப் புரிகிறதா'' என்றான். அது மீண்டும் தலையாட்டியது. ''இப்படிப்பட்ட வழிகாட்டியைத்தான் நான் தேடிக்கொண்டிருந்தேன். என் குருவாக இருக்க உனக்கு சம்மதமா?'' எனக் கேட்டான். ஒட்டகம் மீண்டும் தலையாட்டியது. எப்போதும் தலையாட்டுவது ஒட்டகத்தின் பிறவிக் குணம் என்பதை அவன் அறியவில்லை.

அதன்பிறகு அவன் ஒட்டக குருவிடம் கேட்காமல் எதையும் செய்வதில்லை. தன் வீட்டருகே உள்ள புல்வெளிக்கு கூட்டிச் சென்று ஒட்டகத்தைப் பத்திரமாகப் பராமரித்தான். ஒருநாள் அவன் ஒட்டகத்திடம், ''நான் ஒரு பெண்ணைப் பார்த்தேன். அவளைத் திருமணம் செய்துகொள்ளவா?'' என்று கேட்டான். ஒட்டகம் தலையை ஆட்டியது. சில நாட்கள் போனதும் அவன் ஒட்டகத்திடம் கேட்டான். ''நான் சிறிது மது அருந்தவா?'' அதற்கும் வழக்கமான தலையாட்டல்தான். அவன் நன்கு குடித்துவிட்டு வீட்டுக்கு வந்தது மனைவிக்குப் பிடிக்கவில்லை. அவனை கண்டித்தாள்.

அவன் வழக்கம் போல ஒட்டகத்திடம் வந்தான். ''நான் குடிப்பது பிடிக்காமல் மனைவி திட்டுகிறாள். அவளிடம் சண்டை போடவா?'' என்றான். ஒட்டகம் தலையை ஆட்டியதும் அவன் சண்டை போட்டான்.

சண்டை வலுத்தது. மனைவியிடம் அவன் வீண் சண்டை போடுவதைப் பார்த்து தெருவில் வசிப்பவர்கள் வந்தார்கள். அவர்களிடமும் சண்டைக்குப் போனான். வாய்ப்பேச்சு முற்றி அடிதடி வரை போக, போலீஸ் வந்து அவனைக் கைது செய்தது.

''ஒட்டக குருவின் சம்மதம் பெற்றே சண்டை போட்டேன்'' என அவன் சொன்னான். போலீஸார் சிரித்துவிட்டு, ''இவனைக் கைது செய்யவா?'' என்று ஒட்டகத்திடம் போய்க் கேட்டார்கள். அப்போதும் அது சம்மதம் என்றே தலையாட்டியது.

பலரும் இந்த தலையாட்டி ஒட்டகம் போல மனதைப் பழக்கப்படுத்தி வைத்திருக்கிறார்கள். எனவே, அது சரியா, தவறா என்பதைப் பிரித்துப் பார்க்காது. விருப்பமுள்ள செயல்களுக்கு எல்லாம் மனம் பூரண சம்மதம் தரும். எதிர்காலத்தைப் பற்றி அது சிந்திப்பதில்லை. விளைவுகளை அறிந்து எச்சரிக்கும் மனம் அமையப் பெற்றவர்களுக்கு, அதைவிட சிறந்த வழிகாட்டி வேறு யாரும் இல்லை. ●


வெண்மை

VENMAII

தமிழ் மாத இதழ்

மலர் 5 இதழ் 11

ஏப்ரல் 2021

பதிப்பாளர் - கௌரவ ஆசிரியர்

**கே.ஆர்.நாகராஜன்**

ஆசிரியர்

**த.செ.ஞானவேல்**

இதழாசிரியர்

**வள்ளி**

வடிவமைப்பு

**உதயா**

புத்தக ஆக்கமும் வடிவமைப்பும்:

தரு மீடியா (பி) லிட்.,
10/55, ராஜு தெரு,
மேற்கு மாம்பலம்,
சென்னை - 600 033
email: contacttharu@gmail.com



இந்தப் புத்தகத்தின் எந்த ஒரு பகுதியையும் பதிப்பாளரின் எழுத்துப்பூர்வமான முன் அனுமதி பெறாமல் மறுபிரசுரம் செய்வதோ, அச்சு மற்றும் மின்னணு ஊடகங்களில் மறுபதிப்பு செய்வதோ காப்புரிமைச் சட்டப்படி தடை செய்யப்பட்டதாகும்.



Published by
K.R. NAGARAJAN,
Published from
10, Sengunthapuram
Mangalam Road,
TIRUPUR - 641 604.
Ph: 9842274137

# குழந்தைகளுக்கு வழிகாட்டியாக மாறுங்கள்!



ஒரு நிறுவனத்தில் ஆலோசனைக் கூட்டம் நடந்து கொண்டிருந்தது. நிறைய பொறியாளர்களும் அவர்கள் மேனேஜரும் காரசாரமாக விவாதித்துக் கொண்டிருந்தனர். அப்போது ஒருவர் கை தவறுதலாக பட்டு நீண்ட மேஜையில் நீர் கொட்டியது.

துப்புரவுப் பணி செய்யும் பெண்மணி அதைத் துடைக்க வந்தார். அவருக்கு 55 வயது இருக்கும். உள்ளே பவ்யமாக நுழைந்தவர், கொட்டிய நீருக்குப் பக்கத்து இருக்கையில் அமர்ந்திருந்த பொறியாளர் ஒருவரைப் பார்த்து, ''சார், கொஞ்சம் தள்ளிக்கிறீங்களா? நான் துடைக்க வசதியா இருக்கும்'' என்று பணிவாகச் சொன்னார்.

அந்தப் பெண்மணி அப்படி சொன்னதைக் கேட்டு அந்த என்ஜினியர் இளைஞன் அதிர்ச்சியானான். காரணம், துப்புரவுப் பணி செய்யும் பெண்மணி அவனது அம்மாதான். சிறுவயதில் தந்தையை இழந்த அவனை அக்கறையுடன் பாதுகாத்து, கஷ்டப்பட்டு பல வீடுகளிலும் அலுவலகங்களிலும் உழைத்து அவனைப் படிக்க வைத்து பொறியாளர் ஆக்கியது அவர்தான்.

அந்த கம்பெனியில்தான் 10 வருடங்களாக அம்மா வேலை பார்த்து வருகிறார். இவனைப் படிக்க வைத்து அதே கம்பெனியில் பொறியாளராக ஆக்கிவிட்டார்.

தான் வேலைக்குப் போக ஆரம்பித்த பிறகு அம்மாவை வேலையை விடச் சொன்னான் மகன். ஆனால் அம்மா பிடிவாதமாய் மறுத்துவிட்டார். மகன் என்ஜினியராக வேலை பார்க்கும் அதே கம்பெனியில் கூட்டிப் பெருக்கும் வேலையை அம்மா செய்வதான வாழ்க்கைமுறையை மகனும் ஏற்றுக் கொண்டான். ஆனால் இப்படி பொது இடத்தில் தன்னை பிறர் முன்னால் 'சார்' என்று அழைத்தது அவனுக்கு ஏதோ மாதிரி இருந்தது.

அம்மா இல்லாவிட்டால் தான் ஒன்றுமே இல்லை. அம்மா நினைத்திருந்தால் தன்னை சிறுவயதிலேயே படிக்க வைக்காமல் வேலைக்கு அனுப்பியிருக்க முடியும். ஆனால் அம்மா உயிரைக் கொடுத்து உழைத்து தன்னைப் படிக்க வைத்தார். அவர் இப்படிக் கூப்பிட நேர்ந்தது அவனுக்கு அதிர்ச்சி தந்தது.


அன்று மாலை வீடு திரும்பியதும், அம்மாவிடம் தன் ஆதங்கத்தைக் கொட்டினான். ''உன்னை 'சார்'னு கூப்பிடறது எனக்குப் பெருமையா இருக்கு'' என்ற அம்மா, தொடர்ந்து பேசினார்.

''உனக்கு ஒரு வயசு இருக்கும்போது உன் அப்பா போயிட்டார். எனக்கு படிப்பும் கிடையாது. இந்த உலகத்தை

சமாளிக்கிற அறிவும் கிடையாது. அப்படியே திகைச்சி நின்னுட்டேன். எனக்கு தெரிஞ்சது எல்லாம் ஒண்ணே ஒண்ணுதான். உன்னை எப்படியாவது சந்தோஷமா வச்சிருக்கணும், அதுதான். கஷ்டப்பட்டு உன்னை வளர்த்தேன். படிக்க வைச்சேன். நீ படிச்சி முடிச்சதும், வாழ்க்கையில் சாதிச்சிட்ட மாதிரி நினைச்சேன். என்னை அப்போ எல்லாரும் புகழ்ந்தாங்க. அப்புறம் நீ வேலைக்கு போனதும் என்னைப் புகழ்ந்தாங்க. ஆனா கொஞ்சமாத்தான் புகழ்ந்தாங்க. ஆனா, எனக்கு நான் செய்த சாதனையை யாராவது சொல்லிச் சொல்லி கேட்கணும் போல இருக்கு. ஒரு கப்பல்ல போய் புது நாட்டைக் கண்டுபிடிச்சவனை ஒருநாள் புகழ்ந்தா போதுமா? அது எப்பேர்ப்பட்ட சாதனை. அடிக்கடி அவனுக்கு புகழ் வார்த்தை கேட்கணும் போல இருக்கும்தானே. ஆனா என்னைப் புகழ ஆளில்லை. நான் உன்னை 'சார்'னு சொல்லும்போது, 'பாரு, என் மகனை எப்படி ஆளாக்கிட்டேன்'னு என்னையே நான் புகழ்ந்து சந்தோஷம் அடையறேன்'' என்றாள் அம்மா.

அம்மாவின் கைகளை இறுகப் பற்றிக் கொண்டான் மகன். அம்மாவை சேரில் அமர வைத்து, ''இன்னைக்கு நான் டீ போடுறேம்மா'' என்று சமையலறையை நோக்கிச் சென்றான்.

குழந்தைகள் எப்போதும் நம்மைப் பார்த்தே வளர்கிறார்கள். நாம் செய்யும் செயல்களை, நாம் பேசும் வார்த்தைகளை அப்படியே பிரதி எடுக்கிறார்கள். அவர்களுக்கு நாம் ஆரோக்கியமான வழிகாட்டியாக மாற வேண்டும்.



■ ஆரோக்கியமான உணவு சாப்பிடுவது, முறையாக உடற்பயிற்சி செய்வது, தவறான பழக்கங்களுக்கு அடிமை ஆகாமல் இருப்பது... இதெல்லாம் குழந்தைகளுக்கு நல்ல உதாரணத்தை ஏற்படுத்தித் தரும். ஆரோக்கியமான பெற்றோர்களே, ஆரோக்கியமான குழந்தைகளை உருவாக்குகிறார்கள்.

■ ஒவ்வொரு நாளும் புதிதாக எதையாவது கற்றுக்கொண்டே இருக்கும் பெற்றோர்கள், தங்கள் குழந்தைகளுக்கும் கற்றல் ஆர்வத்தை வளர்க்கிறார்கள்.

■ தாங்கள் வசிக்கும் பகுதியிலோ, அல்லது ஏதேனும் ஆதரவற்றோர் இல்லங்களுக்கோ குடும்பத்துடன் சென்று சேவைகள் செய்யும் பெற்றோர்கள், தங்கள் குழந்தைகள் மனதில் அன்பையும் கருணையையும் சுரக்கச் செய்கிறார்கள்.

■ தங்கள் வாழ்க்கையில் ரகசியம் என எதையும் ஒளித்து வைக்காமல், எல்லா விஷயங்கள் குறித்தும் குழந்தைகளிடம் வெளிப்படையாக பெற்றோர்கள் பேச வேண்டும். வாழ்க்கையில் சந்திக்கும் குழப்பங்கள் எதையும் தயக்கமின்றி பகிர்ந்துகொள்ள, குழந்தைகளை அது பழக்கும்.

■ மன இறுக்கமும் பதற்றமும் கோபமும் ஏற்படும்போது, கடுமையான வார்த்தைகளால் அதை வெளியில் கொட்டிவிட்டால் மனம் லேசாகிவிடும். ஆனால், குழந்தைகளிடம் அது மோசமான விளைவுகளை ஏற்படுத்திவிடும். உணர்ச்சிகளைப் பக்குவமாகக் கையாளும் பெற்றோர்கள், தங்கள் குழந்தைகளையும் அப்படி நடந்துகொள்ளப் பழக்குகிறார்கள்.

■ நண்பர்கள் மற்றும் உறவினர்களில் நல்லவர்களும் இருப்பார்கள்; கெட்டவர்களும் இருப்பார்கள். அவர்களால் நல்ல அனுபவங்களும் கிடைக்கும்; சில சமயங்களில் அவர்களிடம் கசப்பான அனுபவங்களும் கிடைக்கும். அவற்றை குழந்தைகளிடம் பகிர்ந்துகொள்ள வேண்டும். எல்லா உறவுகளையும் சமாளித்து சமநிலையில் வாழும் மனநிலையை ஏற்படுத்த வேண்டும்.

■ எல்லோரையும் மரியாதையாக நடத்துவது எப்படி என்பதை, நம்மைப் பார்த்தே குழந்தைகள் கற்றுக்கொள்கிறார்கள்.

■ சமூகத்தில் எல்லா இடங்களிலும் எதிர்மறை எண்ணங்களே பரவிக் கிடக்கின்றன. எல்லா இருளையும் ஒற்றை விளக்கின் வெளிச்சம் அகற்றுவது போல, நேர்மறை சிந்தனைகளாலும் செயல்களாலும் குழந்தைகள் மனதில் வெளிச்சம் ஏற்படுத்த வேண்டும்.

■ படிப்பில் ஆரம்பித்து, தங்களுக்கான ஒரு வாழ்க்கையை உருவாக்கிக்கொள்வது வரை ஒவ்வொரு கட்டத்திலும் இலக்குகளை உருவாக்கிக்கொண்டு இயங்க, அவர்களுக்கு நாம் செயல்களால் வழிகாட்ட வேண்டும்.

■ குழந்தைகளிடம் சொன்ன வார்த்தைகளைக் காப்பாற்றும் பெற்றோர்கள், தங்கள் குழந்தைகளும் அப்படிப்பட்ட மனிதர்களாக மாற வழிகாட்டுகிறார்கள். ●

நேர்மறையாக வழிகாட்டும் நற்சிந்தனை மனிதரை வாழ்வில் பின்பற்ற நினைக்கிறீர்களா? அவரிடம் கீழ்க்கண்ட பண்புகள் இருக்கின்றனவா என்று பாருங்கள். இந்தப் பண்புகளை உங்களிடம் வளர்த்துக்கொண்டால், நீங்களும் வாழ்வில் பலருக்கு வழிகாட்டியாக மாறலாம்.

■ அடுத்தவர்களின் மிகச்சிறந்த திறமை எது என்று கண்டறிந்து, அதை அவர்கள் வெளிப்படுத்த வாய்ப்பு ஏற்படுத்தித் தருவது.

■ அடுத்தவர்கள் தவறு செய்யும்போது, அந்தத் தவறு நேர்ந்த சூழலையும் புரிந்துகொண்டு கருணையுடன் அணுகுவது.

■ ‘நான் சொல்வதைச் செய்’ என உத்தரவு போடாமல், ‘இப்படிச் செய்வதுதான் சிறந்த முறை’ என செயல்களால் வழிகாட்டுவது.

■ கடினமான சூழலிலும் பொறுமை இழந்து கோபத்தை வெளிப்படுத்தாமல் இருப்பது.

■ யார் யாரோ சொல்லும் விஷயங்களுக்கு தலையாட்டி பொம்மையாக இருந்து முடிவுகள் எடுக்காமல், தங்கள் அறிவால் அலசிப் பார்த்தே முடிவுகள் எடுப்பது.

■ குடும்பம், நண்பர்கள் மற்றும் உறவினர்கள் என்று எல்லோர் மீதும் அன்பும் அக்கறையும் காட்டும் நல்ல மனிதராக இருப்பது.

■ எதிர்மறை எண்ணங்களையும் உணர்வுகளையும் ஆக்கப்பூர்வமாக வெளிப்படுத்தும் திறன் பெற்றிருப்பது.

■ தங்கள் திறமைகளை மெருகேற்றிக்கொள்ள துணிச்சலாக எதையும் செய்வது. வாழ்க்கை மேம்பாட்டுக்காக தொடர்ந்து உழைப்பது.

■ வாழ்க்கையில் தெளிவான இலக்குகள் வைத்திருப்பது. அதை அடைவதற்கான வழிகளையும் அடையாளம் காண்பது.

■ தங்களைச் சுற்றியுள்ளவர்கள் எப்படி இருக்க வேண்டும் என்று பார்த்து, பாசிட்டிவ் மனிதர்களையே பக்கத்தில் வைத்துக்கொள்வது.

■ தங்களுக்கும் உண்மையாக இருப்பது; அடுத்தவர்களிடமும் உண்மையாக நடந்துகொள்வது. ‘சொல் ஒன்று, செயல் வேறு’ என இல்லாமல் இருப்பது.

■ அடுத்தவர்களின் பலவீனங்களைப் பயன்படுத்திக்கொண்டு அதன் மூலம் ஆதாயம் தேடாமல் இருப்பது.

■ யாரை எப்படி அணுக வேண்டும் என்ற நாகரிகம் புரிந்துகொண்டு மனிதர்களை நடத்துவது.

■ அடுத்தவர்களைப் பற்றிய தவறான விஷயங்களை மற்றவர்களிடம் வம்புப்பேச்சாக வெளிப்படுத்தாமல் இருப்பது.

■ சொந்த வாழ்க்கைக்கும் தொழில் வாழ்க்கைக்குமான சமநிலையைப் பராமரிப்பது. தங்கள் மகிழ்ச்சி, ஆரோக்கியம் ஆகிய இரண்டையும் தொலைக்காமல் வாழ்க்கையில் வளம் தேட நினைக்கும் பக்குவம் இருப்பது.

■ ஒருவரின் உடை, தோற்றம், தகுதி ஆகியவற்றை வைத்து அவரை எடை போடாமல், அவரின் உண்மையான இயல்பை அறிந்துகொண்டு கண்ணியத்துடன் நடத்துவது.

■ குழப்பமான முடிவுகள் எடுத்து எல்லோரையும் பதற்றத்துக்கு ஆளாக்காமல், எப்போதும் தெளிவான முடிவுகளை தீர்க்கமாக எடுப்பது. ●



# பாசிட்டிவ் ரோல் மாடல்!



# வெண்மை சந்தா செலுத்திய கல்லூரி மாணவிகள்!

சேலம் மாவட்டம் சங்ககிரியில் இயங்கிவருகிறது ஸ்ரீ பி.எஸ்.ஜி பெண்கள் கலை மற்றும் அறிவியல் கல்லூரி. 'வெண்மை' இதழில் வெளியாகும் நற்சிந்தனைகளும் தன்னம்பிக்கை கட்டுரைகளும் கல்லூரி மாணவ, மாணவிகளுக்கு ஊக்கம் தரும் என்பதை இந்தக் கல்லூரி நிர்வாகத்தினர் உணர்ந்தனர். இதைத் தொடர்ந்து கல்லூரி நிர்வாகிகள், முதல்வர் மற்றும் பேராசிரியர்கள் முன்முயற்சியில் இந்தக் கல்லூரியில் படிக்கும் 59 மாணவிகள் 'வெண்மை' இதழுக்கு சந்தா செலுத்தியுள்ளனர். தங்கள் வாழ்வை மேம்படுத்தும் இனிய நூலாக 'வெண்மை' இருப்பதாக அவர்கள் மகிழ்ச்சி தெரிவித்தனர்.

**பள்ளி, கல்லூரி நிர்வாகிகளுக்கு ஒரு வேண்டுகோள்:**

வாழ்வை வளமாக்கும் நற்சிந்தனைகளின் பொக்கிஷமான 'வெண்மை' இதழுக்கு உங்கள் பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களையும் சந்தா செலுத்த வைக்கலாம். இதன்மூலம் அவர்கள் வாழ்வை உயர்த்தும் வழிகாட்டிகளாக நீங்கள் மாறலாம்.

**சந்தா தொடர்புக்கு: 0421–4304106, 98422 74137**

# வாழ்வை உயர்த்த வேண்டும் 'வெண்மை'!

'வெண்மை' மார்ச் இதழ் படித்தேன். ஒவ்வொரு பக்கமும் ஒவ்வொரு தலைப்பிலான விஷயமும் 'படித்தேன்'. ஆமாம், படிதேனாய் இனித்தது என்றால் அது மிகையில்லை. நிறுவனர் திரு. கே.ஆர்.நாகராஜன் அவர்களின் தலையங்கத்தின் ஒவ்வொரு வரியும், உணர்வுப்பூர்வமாக எழுதப்பட்ட வரிகளாய் சிலிர்க்க வைத்தன. 'உற்சாகமாய் தொடங்கப்படுகிற எந்த செயலும் பாதி வெற்றி அடைந்ததற்குச் சமம். உடலும் மனமும் உற்சாகத்தோடு இருப்பவர்கள் உலகின் மிகப்பெரிய பணக்காரர்கள். சிரிப்பு இல்லாத மனிதன் காற்று போன பலூனுக்குச் சமம்' என்பது போன்ற அவரின் மிக மிக எதார்த்தமான பல வரிகள், படிப்போருக்கு சிறந்த வழிகாட்டுதலையும் உற்சாகத்தையும் வழங்கி அவர்களை உயர்த்த முயற்சி செய்யும் என்பது நிஜம்.

'கூட்டிலிருந்து வெளியே வாருங்கள்' கட்டுரை, ஒவ்வொரு மனிதரையும் ஆக்கபூர்வமாக சிந்திக்க வைக்கும். அவர்களை சொகுசுக்கூட்டிலிருந்து வெளியில் வர வைக்கும் என்பது உறுதி. மேலும் 'உற்சாகம் நிலைக்கும்' என்ற கதை வடிவிலான கருத்தாக்கம், 'உற்சாகத்தை விதைப்போம்' கட்டுரை என அனைத்துமே, உற்சாகமில்லாத ஒவ்வொரு மனிதரையும் உற்சாகம் பெற வைக்கும். நதி மற்றும் மலையின் உரையாடலாய் மிளிர்ந்த 'அர்த்தமுள்ள' உற்சாகம் உள்பட 'வெண்மை' இதழின் ஒவ்வொரு கட்டுரையும் மனிதரை அவர்தம் சிந்தனையையும் உயர்த்தும் விதமாகவே அமைந்துள்ளது.

ஆக்கபூர்வமான தகவல்களின் தொகுப்பாக வெளிவரும் 'வெண்மை' இதழ் மேலும் பல்லாயிரக்கணக்கானவர்களைச் சென்றடைய வேண்டும். லட்சக்கணக்கானவர் வாழ்வியலை உயர்த்த வேண்டும் என மனதாரப் பாராட்டுகிறேன்.

**இங்ஙனம்,**
**திரு. கே.செங்குட்டுவன்**
**தாளாளர்,**
**வள்ளுவர் அறிவியல் மற்றும் மேலாண்மைக் கல்லூரி, கரூர்.**



# உதவி செய்யும் வழிகாட்டிகள்!

கல்லூரிப் படிப்புக்காக கிராமத்திலிருந்து பெருநகரம் ஒன்றுக்கு வந்தார் ஓர் இளம்பெண். பெண்கள் விடுதியில் அறை எடுத்து தங்கிக் கொண்டார். தினமும் காலையில் எழுந்து ஹாஸ்டலில் கொடுக்கும் உணவை உண்டு விட்டு கல்லூரி செல்ல ஆரம்பித்தார். கல்லூரியில் பல ஆண், பெண் நண்பர்கள் கிடைத்தார்கள். அவர்கள் மிக கண்ணியமாக பழகினார்கள். இவரும் கண்ணியமாகப் பழகினார்.

இரண்டு மாதங்கள் வாழ்க்கை சிறப்பாகச் சென்றது. அதன்பிறகு அவருக்கு இரவுகளில் தனிமையும் வெறுமையும் வாட்ட ஆரம்பித்தது. இரவு எட்டரை மணிக்கு சாப்பிட்டு முடித்து விட்டால், 11 மணி வரை என்ன செய்வதென்று அவருக்குத் தெரியவில்லை. டி.வி பார்க்க போரடித்தது. புத்தகம் படிக்க போரடித்தது. அறைத் தோழிகளோ படித்துக்கொண்டே இருந்தனர்.

அப்போது அவர் பிறந்த நாள் வந்தது. வெளிநாட்டில் வசிக்கும் அண்ணன், அன்பாக ஒரு ஸ்மார்ட் போன் வாங்கிக் கொடுத்தான். அதன்பிறகு அந்தப் பெண்ணின் வாழ்க்கையே மாறிவிட்டது. எட்டரை மணிக்குத் தொடங்கினால் இரவு ஒரு மணி வரை நண்பர்களுடன் சமூக வலைதளங்களில் அரட்டை அடித்தார். நேரம் போவதே தெரியவில்லை. அதிலும் ஆண் நண்பர்கள் அன்பாகப் பேசுவதை அதிகம் ரசித்தார். குறிப்பிட்ட எல்லை தாண்டி அவர்கள் அன்பாகப் பேசும்போது பேச்சை மாற்றிவிடுவார். ஆனால் மனம் படபடவென்று அடித்து அந்த அன்பை ரசித்துக் கொண்டிருக்கும். ஓர் ஆண் நண்பர் மூலம் அறிமுகமாகும் இன்னொரு நண்பர் என்று அவர் நட்பு வட்டாரம் பெருகியது. எப்போதும் அவர் வாட்ஸ் அப் எண்ணுக்கு நிறைய செய்திகள் வந்து கொண்டே இருந்தன. லேசாக தலைவலி என்று சொன்னால்கூட, நாள் முழுக்க நலம் விசாரித்து அன்பைப் பொழிவார்கள் நண்பர்கள்.

முதல் செமஸ்டர் தேர்வு வந்தது. சரியாகப் படிக்காத மாணவி, எழுதிய ஐந்து பாடங்களில் மூன்று பாடங்களில் ஃபெயிலாகி விட்டார். இவரிடம் பழகிய ஆண் நண்பர்களும், இப்பெண் ஓர் எல்லைக்கு மேல் தங்களை அனுமதிக்காதது கண்டு சலித்துப் போய் விலக ஆரம்பித்தனர். அவர்களின் உள்நோக்கம் புரிந்தபோது, அந்தப் பெண் அதிர்ச்சி அடைந்தார். தேர்வு தோல்வியும் நண்பர்களின் விலகலும் அவர் மனதை நொறுக்கின.

அறையில் படுத்து கவலையுடன் அழுதபோது சுவரைப் பார்த்தார். எறும்புகள் வரிசையாக உணவு சேகரித்தபடி போய்க்கொண்டிருந்தன. கோபத்தில் கையை வைத்து இப்படியும் அப்படியும் அந்த எறும்புக்கூட்டத்தில் அடித்தார். எறும்புக் கூட்டம் சிதறியது. வெந்நீரில் குளித்தால் மன அழுத்தம் குறைந்து தூங்க முடியும் என்று நினைத்தார். போய்க் குளித்துவிட்டு ஆறுதலாக வந்து படுக்கப் போகும்போது கவனித்தார். அந்த எறும்புகள் இப்போது அதே வரிசையை





ஏற்படுத்தி நகர்ந்து கொண்டிருந்தன. இவருக்கு சுளீரென்று இருந்தது.

‘சின்னஞ்சிறிய எறும்புகளே எவ்வளவு இடையூறு வந்தபோதும், அதையெல்லாம் கடந்து தம் பயணத்தைத் தொடர்கின்றன. நான் எதற்காக இங்கு வந்தேன்? இப்போது என்ன செய்து கொண்டிருக்கிறேன்? இனிமேல் பாதை தவற மாட்டேன்’ என்று உறுதி எடுத்துக் கொண்டார். தன் மொபைல் போனை அணைத்து விட்டு புத்தகங்களை எடுத்து வைத்துப் படிக்க ஆரம்பித்தார். அன்றிரவு நிம்மதியாக அவரால் தூங்க முடிந்தது.

சின்னஞ்சிறிய எறும்புகளே நமக்கு வழிகாட்டும் உதாரணங்களாக மாறும்போது, மனிதர்களில் வழிகாட்டிகளுக்குப் பஞ்சம் இருக்காது. நல்ல வழிகாட்டிகளே நம் எதிர்காலத்தை வளமாக்குகிறார்கள். வழிகாட்டிகள் எப்படி உங்களுக்கு உதவுவார்கள் தெரியுமா?

● தோல்வி, நிராகரிப்பு, இழப்பு என வாழ்வின் ஏதோ ஒரு தருணத்தில் சந்திக்கும் நெருக்கடிகள் எவரையும் முடக்கும். அந்தத் தருணத்தில் நமக்கு ஆதரவாக இருந்து வழிகாட்டுவார்கள். நம் புலம்பல்களைக் கேட்பார்கள். ‘இந்தத் தோல்வி உன் அடையாளம் அல்ல. இதற்கு முன் இப்படிப்பட்ட வெற்றிகளை நீ அடைந்திருக்கிறாய்’ என உங்கள் திறமைகளை ஞாபகப்படுத்துவார்கள்.

● நீங்கள் உங்கள்மீது வைக்கும் நம்பிக்கையைவிட, அவர்கள் உங்கள்மீது வைத்திருக்கும் நம்பிக்கை அதிகமாக இருக்கும். உங்கள் உண்மையான ஆற்றலை அவர்களே அறிவார்கள். அணையா நெருப்பைத் தூண்டிவிடும் காற்று போல உங்களைத் தூண்டிவிடுவார்கள். உங்களுக்கு வளமான எதிர்காலம் இருப்பதை எப்போதும் நினைவூட்டி, நீங்கள் ஜெயிக்க உதவுவார்கள்.

● ஒரு கண்ணாடி உங்களை இயல்பாகக் காட்டும். உங்களிடம் இருக்கும் எதையும் அது மறைக்காது; இல்லாத ஒன்றையும் அது காட்டாது. நேர்மையான விமர்சனம் என்பது இந்தக் கண்ணாடியின் செயல் போல இருக்க வேண்டும். அக்கறையான வழிகாட்டிகள் இதைச் செய்வார்கள். உங்களைக் குறைவாக மதிப்பிட்டு மட்டம் தட்டுவதோ, தேவையில்லாமல் புகழ்வதோ அவர்கள் வேலையாக இருக்காது. உங்கள் பலவீனங்களை உணர்த்தி, அவற்றை சரிசெய்வதற்கும் வழிகாட்டுவார்கள்.

● திக்குத் தெரியாத காட்டில் மாட்டிக்கொண்டது போல, ஏதாவது பிரச்னைகளில் சிக்கித் தவிக்கும்போது வழிகாட்டிகளே கைகொடுப்பார்கள். பிரச்னையிலிருந்து மீண்டு சரியான திசையில் செல்வதற்கு ஆலோசனையும் சொல்வார்கள். ஏனெனில், உங்கள் லட்சியம் எது என்று உங்களைவிட அவர்களுக்கு நன்றாகத் தெரியும்.

● பாதையை உருவாக்கிப் பயணம் செய்வதைவிட, யாரோ போட்ட பாதையும் போவது சுலபம். வழிகாட்டிகள் தங்கள் அனுபவங்களையும் அறிவையும் அப்படிப்பட்ட பாதையாக உங்களுக்குக் கொடுப்பார்கள்.

● வாழ்க்கைப் பாதையில் தடுமாற்றங்களை எதிர்கொள்ள முடியாமல் துவண்டு போகிறார்கள் பலர். அப்படிப்பட்ட சூழல்களில், ஏதேதோ சமாதானங்களைச் சொல்லிக்கொண்டு அப்படியே முடங்கிப் போவார்கள் அவர்கள். வழிகாட்டிகளே அந்த நேரத்தில் அவர்களை மீட்டெடுத்து நல்வழிப்படுத்துவார்கள்.

● நீங்களே உங்களை கேட்டுக்கொள்ளத் தயங்கும் கடுமையான கேள்விகளை அவர்கள் கேட்பார்கள். அந்தக் கேள்விகளே உங்களை யோசிக்க வைக்கும். புதிது புதிதாகக் கற்றுக்கொள்ள வைக்கும். புதுமையாக முயற்சி செய்ய வைக்கும். அடுத்த கட்டத்துக்குப் போக வைக்கும்.

● நீங்கள் எந்தத் துறையில் இருந்தாலும், அது தொடர்பாக அறிந்தவர்களின் வழிகாட்டுதல் முக்கியம். அவர்களின் அனுபவ அறிவு, ‘எது சரி, எது தவறு’ என உங்களுக்குப் புரிய வைக்கும். கப்பல் பயணத்தில் திசை காட்டும் கருவி போல, அந்த வழிகாட்டுதல் உங்கள் வெற்றிக்கு உதவும். ●



உங்கள் வீட்டுக்கே வர வேண்டுமா?

# வெண்மை

## சந்தாதாரர் ஆகுங்கள்!



'உயர்ந்த எண்ணங்கள் உலகம் முழுவதும் சென்றடைய வேண்டும்' என்ற உயரிய நோக்கில் மதிப்புமிக்க படைப்புகளைத் தொடர்ந்து வெளியிட்டு வருகிறது வெண்மை. இந்த மாத இதழ் ஒவ்வொரு குடும்பத்திலும் பாதுகாக்கப்படும் பொக்கிஷமாகத் திகழ்கிறது.

**ஓர் ஆண்டு சந்தா ரூ.200**

**இரண்டு ஆண்டுகள் சந்தா ரூ.380**

காசோலை/வரைவோலை மூலம் அனுப்பலாம். **VENMAII** என்ற பெயரில் செக்/டி.டி. அனுப்பவும். பின்புறம் உங்கள் பெயர், ஊர் எழுதவும்.

அல்லது

VENMAII என்ற வங்கிக் கணக்கில் (A/C No:1809135000000299 Karur Vysya Bank, Tirupur SR Nagar Branch - IFSC: KVBL0001809) பணம் செலுத்தி, அதன் ஒப்புகை பிரதியை படிவத்துடன் அனுப்பி வைக்கலாம்.

- மணியார்டர்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
- அனைத்து ராம்ராஜ் ஷோரூம்களிலும் சந்தா செலுத்தலாம்.

**வெண்மை**
ராம்ராஜ் வி டவர்,
10, செங்குந்தபுரம், மங்கலம் ரோடு,
திருப்பூர் - 641 604.
email: venmaii@ramrajcotton.net

சந்தா செலுத்தவும், மொத்தமாக வெண்மை இதழ்களைப் பெறவும் தொடர்புகொள்ளுங்கள்.
**போன்:**
**0421-4304106, 98422 74137**

## ஒரே நிமிடத்தில் வெண்மை சந்தாதாரர் ஆகலாம்!

உங்கள் சந்தாவை PhonePe G Pay Net transfer மூலம் செலுத்துங்கள்.

UPI பரிவர்த்தனை மூலமும் மொபைல் போன் மூலம் வெண்மை வங்கிக் கணக்கில் சந்தா தொகையை செலுத்தலாம். வெண்மை UPI id: kvbupiar.75626@kvb

Bharat QR code வசதியுள்ள மொபைல் பேங்கிங் ஆப் வைத்துள்ளவர்கள், அதில் இங்கே உள்ள வெண்மை வங்கிக் கணக்கின் QR code -ஐ ஸ்கேன் செய்து சந்தா செலுத்தலாம்.

பணம் செலுத்தப்பட்டதற்கான வங்கித் தகவலை Forward செய்யுங்கள். கூடவே உங்கள் முழு முகவரியையும் அலைபேசி எண்ணுடன் வாட்ஸ்அப் செய்யுங்கள். அலைபேசி எண்: 98422 74137.

**வங்கிக் கணக்கு விவரம்: Venmaii**
**A/C No: 1809135000000299**
**Karur Vysya Bank, Tirupur SR Nagar Branch**
**IFSC Code: KVBL0001809.**



## மாணவ/ மாணவியர் சிறப்பு சலுகை

(6ம் வகுப்புக்கு மேல் படிக்கும் மாணவர்களுக்கு இந்த சலுகை பொருந்தும். சந்தா செலுத்தும்போது, மாணவர் அடையாள அட்டை நகலை இணைத்து அனுப்பவும்.)

ஒரு வருட சந்தா: ரூ.~~200~~ ரூ.125 மட்டும். | 2 வருட சந்தா: ரூ.~~380~~ ரூ.250 மட்டும்.



## சீனியர் சிட்டிசன் சிறப்புச் சலுகை


(60 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு இந்த சலுகை பொருந்தும். பிறந்த தேதிக்கான ஆதாரச் சான்று நகலை இணைத்து அனுப்ப வேண்டும்.)

ஒரு வருட சந்தா: ரூ.~~200~~ ரூ.125 மட்டும். | 2 வருட சந்தா: ரூ.~~380~~ ரூ.250 மட்டும்.

ராம்ராஜ் ஷோரூம்களில் ரூ.10,000க்கு மேல் பொருட்கள் வாங்குபவர்களுக்கு
**ஒரு வருட சந்தா பரிசாக வழங்கப்படும்**




Owned, Published by K.R. NAGARAJAN, Published from 10, Sengunthapuram Mangalam Road, TIRUPUR - 641 604 &
Printed by B. ASHOK KUMAR at RATHNA OFFSET PRINTERS, 40, Peters Road, Royapettah, Chennai - 600 014. Editor : T.J. GNANAVEL


Inners for Winners
RAMRAJ
BANIANS
BRIEFS • TRUNKS
LEADER IN VEST WEAR
www.ramrajcotton.in

Venmai Monthly - Postal Registration No.TN/TRU/28/2019-21. Registered with the Registrar of Newspapers for India under No.TNTAM/2016/68519. Day of Publishing 01-4-2021. Posted at Tirupur BPC on 5th of every month.

